குடியரசு

மலர் 9 · இதழ் 6

· ஜூன் 1938

5L —
m 2.11, N30TA
N32.7.6.
201666

சென்னை
**டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரவர்களுக்கு சிவப்பிரகாச சுவாமிகளால் அருளப் பெற்ற வரப்பிரசாதங்கள்.**

பர்மாவில் சகலராலும் புகழ்ந்து
கொண்டாடப்படும் நவரத்தினங்கள்

## இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றிக் கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல், சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியை யளிக்கும்.

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

16 JUN 1938
MADRAS

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும் போது நாள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டு வரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாகும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்துவஸ்துக்களுடன் விதை திரவுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு, இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தையில்லாத தம்பதிகளுக்குப் புத்திரசந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும், சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப்போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

## ஓர் அரிய சஞ்சீவி

14 வயதுள்ள பெண் குழந்தைக்குச் சன்னிபாத சுரமும், கபவாத சுரமும், அதிகரித்து அபாய நிலைமையில் இருக்கும்போது டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடத்தில் காண்பித்ததில் அபாயகரமான நிலையாயினும் இன்பசார மாத்திரையால் குணமடையும் என்று மூன்று மாத்திரை கொடுத்தார். முதல் மாத்திரை கொடுத்த அரைமணி நேரத்திற்கெல்லாம் 105 டிக்கிரி இருந்த சுரம் 102-க்கு இறங்கி விட்டது. மற்ற இரண்டு மாத்திரை கொடுத்ததும் 99-டிக்கிரிக்கு இறங்கி விட்டது. மீண்டும் சுரம் அதிகரிக்கவில்லை. பிறகு டாக்டர் காஞ்சிபுரம் உற்சவத்திற்குச் சென்றார். இப்போது குழந்தை சௌக்கியமாய் இருக்கின்றது. இன்பசாரம் என்னும் மாத்திரை ஓர் அரிய சஞ்சீவி எனவே சொல்லலாம்.

சாமி. வெங்கடேச பெருமாள் செட்டி.



OFFICE OF ... 16 JUN 1938 MADRAS

## பலம் பெற்றேன்

ம-ா-ா-ஸ்ரீ டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

எனக்கு வயது 75. நான் வயிற்றுப் புண்ணும், வாயப் புண்ணும், ஜுரத்தாலும் சொல்ல முடியாதபடி கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தேன். இதோடு நில்லாது பேதியும் ஆகிக்கொண் டிருந்தது. வாயிலிருந்து நீர் விழுந்து கொண்டே இருந்தது. எழுந்து நடமாட முடியாது எத்தனையோ இங்கிலீஷ் டாக்டர்களிடம் மருந்து சாப்பிட்டேன். சிறிதும் குணம் தெரியவில்லை. எல்லோரும் என்னைக் கைவிட்டு விட்டார்கள். அச்சமயம் இன்பசார மாத்திரையில் ஒரு புட்டி வாங்கிச் சாப்பிட்டேன். எனக்குள்ள நோயெல்லாம் பறந்தோடி விட்டது. ஜுரம் நின்று விட்டது. புண்களெல்லாம் ஆறி விட்டன. தற்சமயம் டாக்டர் வீட்டுக்கு நடந்துவர சக்தி ஏற்பட்டு விட்டது. நான் சிறு பிள்ளையைப் போல் இப்போது வேலை செய்ய பலம் வந்துவிட்டது. நான் இன்று ஸ்ரீரங்கம் சுவாமி தரிசனத்திற்குப் போவதால், கையில் இன்னும் ஒரு புட்டி இருக்க வேண்டு மென நினைக்கிறேன். இது கடிதம் கொண்டுவரும் ஆள்வசம் ரூபாய் 5 பெற்றுக்கொண்டு ஒரு புட்டி அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

பசுமர்த்தி. தேபெருமாள் செட்டி,
நாராயண முதலி வீதி, சென்னை.

## குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று, பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழுவேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணம் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ண அண்டு கம்பெனியாரையும், கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,
தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

## க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்துகொண்டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கிவிட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட்டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டன. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமில்லை. இதை க்ஷயரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சிநேகிதர்களுக்கும் சொல்லி வருகின்றேன்.

7—5—32.

வி. ராமநாத ஐயர்,
கார்ட்டன் ஆட்ராம் கம்பெனி, மதராஸ்.

---

No. 27—57th Street. East Rangoon.
28—4—38.

Respected Sir,

My daughter is now being treated with Iodine (tessture) Rectified and Inbasaram and the result is very good. The swelling in the leg has almost disappeared & the gland is waning and she looks healthy within 2 weeks treatment. I am Confident that before completion of 3 months Course, she will be made perfectly healthy & free from the disease.

Kindly excuse me for not acknowledging receipt of your letter earlier. I delayed it with a view to inform you of the result of the treatment also at the same time.

Thanking you for genersus advise and ever wishing for your good health a prosperity.

I remain,
Yours very faithfully
T. Jayaram Mudaliar
(Govt.) Pensiner.

கவனிப்பு:—இன்னும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் சில மாத்திரம் இங்குக் குறிப்பிட்டோம்.

ஒரு மாதம் சாப்பிடக் கூடிய
**30 மாத்திரைகள் அடங்கிய புட்டி விலை ரூபா 5.**

# சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு ஆழாக்கு பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கைகால் பிடிப்பு, உடம்பு வலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றினுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினார். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக்கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரினுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு,
அண்ணாவையங்கார்.

---

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒன்னுக்குப் போகும்போது நீர்துவாரத்திலிருந்து இரத்தம் விழுந்து வந்தது. அதற்குத் தங்கள் சகலமேக சித்தாதி எண்ணெய் 3 வேளை சாப்பிட்டதில் பூரா குணம்பெற்றேன்.

இப்படிக்கு,
இராஜரத்தினம் செட்டி.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தங்கள் முன்னம் அனுப்பிய சகல மேக சித்தாதி எண்ணெயைச் சாப்பிட்டு என் வியாதி சௌக்கியமாய் நீங்கிவிட்டதற்காக நான் தங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். இப்பவும் நமக்கு வேண்டியவர்களின் தேவைக்காக என் விலாசத்துக்கு சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1 வி. பி. யில் அனுப்பி வைப்பதுடன் அனுபான பத்திய விவரமடங்கிய டைரக்ஷன் நோட்சும் அனுப்பி வைக்கவும்.

தங்களன்புள்ள,
கிருஷ்ணசாமி நாயகர்,
2—7—34. பாங்கி குமாஸ்தா, மேட்டுத்தெரு, ஆத்தூர்
சேலம் ஜில்லா.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற
சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1-க்கு விலை ரூ. 5.

# தைலாமிர்தம்




இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்னானம்செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுற்றல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் தீட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒற்றைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5-பலம் கொண்ட டின் விலை ரூபா 1.

# இணையற்ற அயத்தங்க திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தைச் சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பாலியர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும்

எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம். மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

**நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணு 12.**

## அபிப்பிராயம்

அன்புள்ள உண்மை வைத்தியரே!

நான் அடைந்த சுகத்திற்கு என் ஆயுளுள்ளவரை உங்களை மறப்பது நீதியாகாது. என் உடல் மிகவும் மெலிந்திருந்தது; இரத்தம் வற்றியிருந்தது; சோம்பல் அதிகரித்திருந்தது; மயக்கம், அசதி, தூக்கம், செமியாகுணம் இவைகள் என்னை அடக்கியாண்டன. பல வைத்தியர்கள் என்னைக் கைவிட்டு விட்டனர். ஒரு பிரபல டாக்டர் இது உனக்கு முற்றிவிட்டது. இனி இதை நிவர்த்திப்பது மிகவும் கடினம்; ஆண்டவன் பிராப்திபடி நடப்பதே இனி ஆகக் கூடியது. நீ வைத்தியம், வைத்தியம் என்று ஏங்காதே! மனம் நாடிய சகல வஸ்துக்களையும் தின்று உன் ஜீவிய காலத்தை முடி. ஒருகால் இவ்வித வழியில் நீ சுகம் பெறலாம்; வைத்தியத்தினால் பெற முடியாது!' என உபதேசித்தார். என் வாழ்க்கையே சமாப்தி அடைந்ததாக நான் அப்பொழுது எண்ணினேன்.

நிற்க, உங்கள் 'தமிழரசு' பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்து, உங்கள் 'அயத்தங்க திராவகத்'திற்கு 3 பாட்டில்களுக்குச் சென்ற 1933-ம் வருடம் நவம்பர் மாதம் ஆர்டர் கொடுத்தேன். அதை தாங்கள் உடனே அனுப்பினீர்கள். அந்த மருந்தை இந்த 1934-ம் வருடம் டிசம்பர் 6வ வரை சாப்பிட்டேன். அது எனக்குப் புத்துயிர் அளித்தது! புனர்ஜன்மம் கொடுத்தது' என்னை ஒரு வீரபுருடனாக ஆக்கியது. இப்போது நான் சரீர சுகஜீவியாய் இருந்து வருகிறேன். சரீர சம்பந்தப்பட்டமட்டில் உள்ள சுக அம்சங்கள் யாவும் எனக்கு உண்டாகி இருக்கிறது. நான் உங்களை வாழ்த்துகிறேன். உங்கள் குடும்பமும், மருந்தும் ஓங்குவதற்குக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். எனது இந்திய சோதர சோதரிகள் இதை உட்கொண்டு நன்மை அடைவார்களாக!

G. M. அலிஹுஸைய்ன் M. H. A.

கௌரவ காரியதரிசி, 'ஹுஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிபெட் நாகூர் 26–12–34.

**எமது விலாசம் :**

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**

**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**



இத்தகைய காரியங்களில் கனம் முதல் மந்திரி பிடிவாதமான வரல்லர் என்பதை விளக்கி யிருக்கிறார்.

ஆதலால் விவசாய மசோதாவை மாற்றியமைக்க வேண்டியதே அதனால் குறைவு எற்படமாட்டாது. தவிர சட்டப்படி கட்டுப்பட்டு பிரிட்டிஷ் அரசாட்சியில் ஒழுகி வந்த குடிகளை இம்மசோதா பாதித்து இருப்பதால் அதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் ஜவாப்தாரி யாக மாட்டார்களா? இதைவிட நேர்முகமாக எல்லா நிலங்களையும் அரசாங்கம் கைப்பற்றி பொது உடைமையாக்கி விடலாமே! மறை முகமாக பொதுவுடைமையை ஏன் நுழைக்க வேண்டும்.

பிரிட்டிஷ் சட்டப்படி கடன் கொடுத்து லாவாதேவி செய்து வந்த குடிகளுக்கு சென்ற கணக்குகளை ரத்து செய்யும்படி புதிய கவர்ன்மெண்ட் சட்டம் செய்தால் அந்த குற்றம் யாரைச் சேர்ந்தது பிரிட்டிஷ் அரசாங்கம் இதைக் கவனிக்க வேண்டாமா? அதை விடுத்து வைசிராய் சட்டத்தைக் கண்மூடித்தனமாய் பாஸ் செய்து விட்டால் சட்டத்திற்குட்பட்ட பிரிட்டிஷ் குடிகளை பாதிப்பதால் மற்ற பிரிட்டிஷ் சட்டங்களும் இந்த கதியை அடையுமோ என்ற எண்ணம் தோன்றுவதால் பிரிட்டிஷ் சட்டத்தில் மக்கள் நம்பிக்கை யிழக்க வேண்டியதாகிறது.

எனவே சென்னை மாகாண வாசிகளாகிய நீங்கள் இதனை தீர யோசித்து புதிய பெடரல் கோர்ட்டில் இது சம்பந்தமாய் சூட்டு போட்டு பழைய சட்டத்தை நடந்து போனதில் பிரவேசிக்க இந்த அரசாங்கத்திற்கு உரிமையுண்டா என்பதை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக பலர் சேர்ந்து பணம் தண்டி சூட்டு தாக்கல் செய்தல் வேண்டும். புதிய அரசாங்கத்தினர் என்று முதல் பதவி ஏற்றார்களோ அன்று முதல் சட்டம் செய்யலாம் சட்டங்கள் நிறுத்தப்படலாம் அதை விடுத்து சென்றதை அமுலுக்கு கொண்டுவந்து முன் நடந்ததை எல்லாம் ரத்துசெய்து அதனால் உண்டாகும் லாப நஷ்டங்களை பாதிக்கும் வகையில் சட்டமியற்ற புதிய அரசாங்கத்திற்கு உரிமை எப்படி? என்பதை நியாயவகையில் தெளிதல் வேண்டாமா?

இந்தியாவிற்குப் பொதுவானதாய் வழங்கிவரும் சட்டத்தை மாகாண கவர்ன்மெண்ட் மாற்றவோ நீக்கவோ அதிகாரமில்லை. ஆதலால் விவசாய மசோதாவால் பாதிக்கப்படும் கட்சிக்காரர்கள் கோர்ட்டில் இந்தச் சட்டம் மேல் சொன்ன காரணத்தால் செல்லத் தக்கதல்ல ஆதலால் கோர்ட்டார் இந்தச்சட்டத்தை நிராகரிக்க வேண்டும் என வற்புறுத்த வேண்டும். உங்கள் வக்கீல்மார்களுக்கு இதை எடுத்துக்காட்டி வாதாடச் சொல்லுங்கள். நியாயப்படி இந்தியாவுக்குப் பொதுவான இந்தியா கவர்ன்மெண்ட் சட்டத்தில் தலையிட மாகாண கவர்ன்மெண்டிற்கு அதிகாரமில்லை.

# காட்டிலாக்காவில் வீண் செலவு

காட்டிலாக்காவுக்காக தனிப்பட்ட சிப்பந்திகள் வைக்கப்பட்டு நடத்தப்படுகிறது. அவ்விலாக்காவில் பல உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர். அவர்களில் கன்சர்வேடர்கள் என்று சிலர் இருக்கின்றனர் இவர்களுக்கு ஆடிட்டர் வேலையைத் தவிர வேறு வேலை கிடையாது பொதுவாக எல்லா பாரஸ்டு கணக்குகளையும் ஆடிட் செய்ய வேறு ஆடிட்டர்கள் இருக்கின்றனர் அவர்கள்தான் ஆடிட் செய்து வருகிறார்கள் இப்படியிருக்க ஏனோ அனாவசியமாக காட்டிலாக்காவில் 2000, 3000 சம்பளம் கொடுத்து இவர்களை வைத்திருக்க வேண்டும். இதனை எடுத்துவிட்டால் பெருவாரியான பணம் மிச்சப்படும்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் எல்லா இடங்களையும் வளைத்து வைத்துக்கொண்டு பெரிய ஆபீசை ஏற்படுத்தி பணத்தை வீணில் செலவிடுகின்றனர் D. F. O. க்களை எடுத்துவிட்டு ரேஞ்சர்களையும் கார்டுகளையும் வைத்துக்கொண்டு ஜில்லா கலெக்டர் பார்வையில் பஞ்சாயத்தை வைக்கும் பட்சத்தில் ஒழுங்காக நடைபெறும்.

காட்டிலாக்காவில் வீணான சட்டங்களை வைத்துக்கொண்டு வேலையை வளர்த்துக்கொண்டு இரவும் பகலுமாக வேலைசெய்து அலவன்சும் பாட்டாவுமாக செலவழிக்கின்றனர். இந்த டிபார்ட்மெண்டின் வேலையில் முக்கால் பாகத்தை குறைத்து விடலாம்.

மூங்கில் கண்டிராக்டை எடுத்துவிட்டு மூங்கில்களை டிப்போவில் சேர்த்து ஏலம் போடலாம் இதனால் பெருவாரியான வேலை குறைந்து விடுவதோடல்லாமல் வருமானம் அதிகப்படும். சந்தனக் கட்டைகளுக்கு தனியான சட்டங்களை அமைத்து வைத்துக்கொண்டு ஜாகீர், ஜமீன், பட்டா நிலத்தில் உற்பத்தியாகும் சந்தனக் கட்டைகளுக்கு பொதுமக்கள்படும் கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. ஒரு ஜாகீர்தார் தம்முடைய சந்தனக்கட்டையை வெட்டி விற்க வேண்டுமானால் முதலில் IV நெ. லிஸ்டு கொடுக்க வேண்டும் அப்படி கொடுத்தபின் D. F. O. மனசு வைத்தால் 5, 6 மாதம் கழித்து ரேஞ்சருக்கு ஆர்டர் அனுப்புவார் இல்லாவிடில் எழுத்து நேராய் இல்லை லயன் போட்டு எழுதவில்லை என்ற சாக்கு சொல்லி திருப்பி நாளைக்கடத்துவர் அப்படி பாஸ் செய்தாலும் ரேஞ்சர் வந்து சேகரித்து வைத்த கட்டையை பார்க்கவும் பரிசோதிக்கவும் அதன் பிறகு கட்டையில் முத்திரை போடவும் குறைந்தது 2 மாதம் பிடிக்கும் அதற்கு மேல் ரிபோர்ட் எழுதி D. F. O. க்கு அனுப்ப வேண்டும் அந்த ரிபோர்ட்டின் மேல் கரஸ்பாண்டன்ஸ் 2 மாதம் செல்லும் அதன் பிறகு D. F. O. சீல் அனுப்பி கட்டையின் மேல் போட்டபின் பெர்மிட் கொடுக்கப்படும் பிறகு மரத்தை சீவி சுத்தம் செய்து தலை வால் வேர் இவைகளை பொருத்தி நெம்பர் போட்டு சீவியான பிறகு மீண்டும் D. F. O.க்கு மனு போட வேண்டும் அந்த



மனு பாசாய் வர 5, 6 மாதம் செல்லும் அதன்பிறகு ரேஞ்சருக்கு ஆர்டர்வரும் அவர் சரி பார்ப்பார் மீண்டும் பழையபடி சீல் போடப்படும் அதற்குமேல் D. F. O. சீல் அதற்கு பிறகு மீண்டும் ரயில் மார்க்கமோ அல்லது ரோட்டு மார்க்கமோ போக பெர்மிட் கொடுத்த பின் சுமார் $1\frac{1}{2}$ வருடம் கழிந்தபின் கட்டை வெளிவரும் வகையில் இன்றைய பாரஸ்ட் இலாகா முறை நடைபெறுகின்றது என்ன அனியாயம் பாருங்கள் இந்த முறையில் பாரஸ்ட் டிபார்ட்மெண்டுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே இதனால் பொது ஜனங்களுக்கு கஷ்டம் அதிகரிக்கின்றது ஆதலால் இந்த முறையை அடியோடு மாற்ற வேண்டும் இல்லாவிடில் ஜமீன் பட்டா கட்டைகளையும் அரசாங்கமே வாங்கிக்கொண்டு ஏலம் போட வேண்டும் இதனை காங்கிரஸ் அரசாங்கம் கவனிக்குமா?

காட்டிலாக்காவை பஞ்சாயத்தாரிடம் ஒப்படைத்து மாடு மேய்க்காலுக்கு பெருவாரி இடத்தை ஒதுக்கிவிடல் வேண்டும்.

காட்டிலாக்காவில் $3\frac{1}{2}$ கோடி வருமானம் வருவதாயும் அதில் $2\frac{3}{4}$ கோடி செலவழிப்பதாகவும் கேள்விப்படுகிறேன் அது வாஸ்தவமானால் ஏன் இதை கவனிக்கவில்லை? இதுவரையில் அதிகப்படியான செலவு செய்த டிபார்ட்மெண்டால் காட்டிலாக்காவில் விருத்தியானது ஏது என்பது தெரியவில்லை.

எனவே கனம் மந்திரி அவர்கள் காட்டிலாக்காவின் செலவில் 1 கோடி ரூபாயைக் குறைத்து ஆப்காரி வரும்படிக்கு ஈடு செய்யலாம். இதை விட்டுவிட்டு மக்கள் தலையில் சுமக்க முடியாது தத்தளிக்கும் ஏழைகளின்மேல் புது வரிபோட யோசனைகள் செய்வது (அதாவது புகையிலை டோல்கேட் முதலான வரி) கொஞ்சமும் பொறுத்தமில்லை, சம்பளக்கட் ஏன் அமுலுக்கு வரவில்லை. மிலிடிரி செலவை ஏன் குறைக்கவில்லை. முனிசீப் கோர்ட்டுகளை ஏன் எடுக்கவில்லை. எண்டோமெண்ட் ஆபீசை எடுக்காத காரணம் என்ன சர்விஸ் கமிஷன் எதற்காக வேண்டும் ரெவினியூ போர்ட் ஆபீசு எதற்கு இவைகளில் எல்லாம் பணம் மிச்சப்படுத்தலாகாதா.

---


## 'தமிழரசு' பைண்டு வால்யம்

### 4-வது மலர்

12 மாத சஞ்சிகைகளையும் ஒன்று சேர்த்து மிக அழகாக பைண்டு செய்திருக்கிறது. வேண்டுவோர் 12 அணா தபால் தலை (ஸ்டாம்பு) அனுப்பினால் 1 புஸ்தகம் அனுப்பி வைக்கப்படும்.

**தமிழரசு புத்தகாலயம்,**

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# பத்தினி பக்தி

[தேவக்கோட்டை ஸ்ரீ V. இராமநாதன்]

(All rights reserved with the author)

## ஒன்பதாம் அத்தியாயம்

வெற்றிபுரியின் ஒரு பகுதியில் பரந்த வெளியில் ஒரு நாள் மாலையில் ஆண்களும் பெண்களுமாக அநேக மக்கள் எள் விழவும் இடமின்றிக் கூடியிருந்தனர். அவர்கள் எல்லோரும் எவரையோ எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்களாகத் தோன்றினர். அவ்வமயம் இம்மாபெருங் கூட்டத்தை நோக்கி மற்றொரு மாபெருங் கூட்டம் வந்துகொண்டிருந்தது. அக்கூட்டத்தின் முன்னணியில் நமது இந்துபாலா 'விடுதலை! விடுதலை!!' என்று உரக்கக் கூறியவண்ணம் வந்தாள். அவளைப்பின்பற்றி வந்தோரும் 'விடுதலை! விடுதலை!!' என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். இக் கூட்டம் நெருங்கி வரவர பரந்த வெளியில் கூடியிருந்த மக்கள், 'இந்துபாலாவிற்கு ஜே! ஜே!' என்று பன்முறை கூறினர். எல்லோரும் ஒன்றாய்க் கூடினர்.

இந்துபாலா அங்கு அமைக்கப் பெற்றிருந்த உயர்ந்த மேடை மீதேறினாள். எங்கும் ஒரே கை கொட்டும், ஆரவாரமும் கிளம்பியது. மலர் மாலைகள் ஒன்றன்மே லொன்றாக அவள் கழுத்திலேறின. இந்துபாலா எல்லோருக்கும் நமஸ்கரித்து,

'சகோதரர்களே! சகோதரிகளே!' என்று ஆரம்பித்தாள். ஓய்வற்ற கரகோஷம் செவிடுபடும் வண்ணம் கிளம்பியது. ஆனால், இந்துபாலாவின் முகம் இக் கரகோஷத்தினாலும், ஆரவாரத்தினாலும் மலர்ச்சியுறவில்லை. என்றாலும் அவள் முகத்தில் உணர்ச்சியின் உத்வேகம் ஊடுருவி நின்றது. சின்னேரத்திற்குப் பின், மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

சோதர சோதரிகளே!

கேளுங்கள்! கரகோஷம் வேண்டேன்! ஆரவாரமும் வேண்டேன்!! ஆனால், நான் வேண்டுவ தென்ன? நீங்களும் உங்கள் முன்னோர்களும் பரந்த இந்த உலகில், விரிந்த நம் சாம்ராஜ்யத்தில், ஒரு காலத்தில் எந்தவித சுதந்திரத்துடன் வாழ்ந்தீர்களோ அந்த வித சுதந்திரத்துடன் இன்றும் என்றும் எஞ்ஞான்றும் வாழ வேண்டுமென்பதே எமது விழைவாகும்! மறந்தீர்களா? சுதந்திரம் பிறப்புரிமையன்றோ!

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| ஆசிரியர் குறிப்புகள் | .... | 419 |
| விவசாயக் கடன் மசோதா நியாயமானதா? | .... | 422 |
| காட்டிலாக்காவில் வீண் செலவு | .... | 424 |
| பத்தினி பக்தி | .... | 426 |
| செங்கல்பட்டு ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் | | 429 |
| 'சொர்க்கத்துக்கு அனுப்பிய சீதனம்' | .... | 430 |
| தமிழ்ப்பட முதலாளிகள் கவனிப்பார்களா? | .... | 433 |
| 'சினிமா' கீண்டல் | .... | 438 |
| கனகம் | .... | 441 |
| 'போடப்பா இரண்டரை' | .... | 446 |
| பரமானந்தர் அல்லது குளவிக் கூட்டம் | .... | 449 |
| 'உத்தமத் தோழன்' | .... | 456 |
| கமலசுந்தரன் அல்லது காரிகையின் வெற்றி | .... | 464 |
| பத்மாவதி | .... | 470 |
| மூட பக்தி | .... | 475 |
| தலை விதியா மதி யின்மையா? | .... | 478 |
| 'லக்ஷ்மிகாந்தன்' | .... | 482 |
| படுகுழி | .... | 491 |


குறிப்பு:—'தமிழா'வில் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளியாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவையாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.

**முகப்புப் படம்**

'பஞ்சாபகேசரி'யில்
நடிக்கும்
ஸ்ரீமதி
A. K. ராஜலட்சுமி.

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

(மாத வெளியீடு)

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்....'

ஆசிரியர் : டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| | | |
|---|---|---|
| மலர் 9 | வெகுதான்ய ஞு ஆனி மீ<br>1938 ஞு ஜூன் மீ 15 உ | இதழ் 6 |


## தமிழ் வளர்ச்சி

எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளியுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்!
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவச நூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோமில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!

புதுவை - பாரதிதாஸன்

207666




### காங்கிரஸிலுமா வகுப்பு வாதம்

காங்கிரஸே தேசியம்; காங்கிரஸே உலகம்; சகலமும் காங்கிரஸே என்கிற காலம் மலையேறி விட்டது. காங்கிரஸ் கட்சியார் பதவி யில்லாத காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியை வகுப்புவாத ஸ்தாபனமென்றும், தேசத்தைக் காட்டிக் கொடுக்கும் கட்சி யென்றுமெல்லாம் வசைபுராணம் பாடி வந்தார்கள். ஆனால், அவர்கள் பதவிக்கு வந்ததும் ஜஸ்டிஸ் கட்சியின்மேல் என்னென்ன பழிகள் அவர்கள் சுமத்தி வந்தார்களோ, அதேப் பழிகளை இப்பொழுது தங்கள்மேல் சுமத்திக்கொண் டிருக்கிறார்கள். சீர்திருத்தத்தை உடைப்போமென்று சொல்லி உள்ளே நுழைந்தவர்கள் அணுகளவேனும் பிசகாமல் சீர்திருத்தத்தை, ஆங்கிலேயர் பாராட்டும்வண்ணம் நடத்தி வருகிறார்கள். காங்கிரஸ் கட்சியின் வகுப்பு வாதம் எங்கும் சந்தி சிரிக்கிறது. காங்கிரஸ் பத்திரிகைகளே காங்கிரஸிலுள்ள வகுப்பு வாத நாற்றத்தைப் பொறுக்க முடியவில்லை யென்று பத்தி, பத்தியாய் எழுத ஆரம்பித்து விட்டன. தோழர் சிவசைலம் பிள்ளை கார்ப்பொரேஷன் காங்கிரஸ் கட்சியினிடத்தில் பட்டபாடு உங்களெல்லோருக்கும் தெரியும். காலியான இடங்களிலெல்லாம் தேசியத்தின் பெயரால் பார்ப்பனர்களே புகுத்தப் படுகின்றனர். நகர சபைகளில் வரி கொடுப்போர் கூக்குரலையும் கவனியாது பார்ப்பனர்கள் சம்பந்தப்பட்ட கம்பெனிகளுக்குக் கண்ட்ராக்ட் கொடுக்கப் படுகிறது. பிராமணரல்லாத காங்கிரஸ் தலைவர்கள் தலைகாட்ட முடியவில்லை. நண்பர் சாமி வெங்கிடாசலம் காங்கிரஸ் துரோகியாகி விட்டார். நண்பர் விநாயக முதலியாரும் காங்கிரஸ் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். தேர்தல் சமயத்தில் தென்னாட்டு ஜவஹர்லாலென புகழப்பட்ட நண்பர் நாடிமுத்துப் பிள்ளை இப்பொழுது இருக்குமிடம் தெரியவில்லை. இவ்வளவிற்கும் காரணம் காங்கிரஸில் பிராமணர்களது ஆதிக்கம் அளவிட முடியாதபடி வேரூன்றி விட்டதால் தான். 'தாயைப் பழித்துவிட்டு மகள் விபசாரியானாள்' என்னும் பழமொழிக்கு ஒப்பிடவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது. காங்கிரஸ் வகுப்புவாரிச் சட்டத்தை நாங்கள் ஒன்றும் செய்யவில்லை யென்று சொல்லிக்கொண்டே 25 மிருக வைத்தியர்களில் 19 பிராமணர்களும், 10 க்கு 10 காப்பரேஷன் ஸ்கூல் தலைமை உபாத்தியர்களையும் பிராமணர்களாகவே அமர்த்தி வந்ததால்

வகுப்புவாரிச் சட்டத்தின்படி நடந்தவர்களாவார்களா? இதை எடுத்துக் கூறுவோமானால் நாம் வகுப்புவாதியாகின்றோம். அவர்களுடைய வகுப்புவாதச் சண்டித்தனம் தேசியப் போர்வையினால் மூடப்பட்டு விடுகிறது. ஆனால், அவர்களது தேசியப் போர்வை வரவர நழுகிக்கொண்டு வருகிறது. இப்பொழுது தேசியத் தலைவர்களின் உண்மை சொரூபம் மக்கள் கண்களுக்குப் புலப்படுகிறது. பலரைப், பலநாட்கள் ஏமாற்றலாம். ஆனால், எப்பொழுதும் ஏமாற்ற முடியாது. பொதுமக்கள், பிராமணர்கள் வகுப்புவாத வெறி கொண்டலைவதை நேரில் கண்டு கொண்டார்கள். ஆகையால் பிராமணரல்லாதார்கள் இனிமேல் இத்தகைய மர்மத்தை உணர்ந்து தங்களைத் தாங்களே காட்டி கொடுத்துக் கொள்ளக் கூடாதென எச்சரிக்கை செய்கின்றோம்.

## பிரதம மந்திரியின் பிடிவாதம்

நமது பிரதம மந்திரியினிடத்தில் எதேச்சாதிகாரம் தலைவிரித்தாடுகிறது. தமிழர்களது சம்மதத்தைப் பெறாது, அவர்களது வெறுப்பையும் கவனியாது, உணர்ச்சியையும் உணராது, உண்ணாவிரதத்தாலும் மனம் இளகாமல், சத்தியாகிரகத்தையும் சிந்திக்காமல் ஹிந்திக் கட்டாயப் பாடத்தை நுழைத்தே தீருவேனென்று நமது முதன் மந்திரி கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார். ஹிந்திக் கட்டாயப் பாடத்தை எதிர்த்து தமிழர்கள் விடுத்த வினாக்களுக்கு விடை பகர வழி தெரியாது விழிக்கிறார். இரு தமிழ் வீரர்கள் ஹிந்திக் கட்டாயப் பாடத்தை எதிர்த்து உண்ணாவிரதமிருக்கிறார்கள். இன்னும் அநேகர் உண்ணாவிரதமிருக்க, தலைவர்களின் உத்தரவை எதிர் பார்த்தவண்ணமிருக்கின்றனர். இந்தியால் பிரதம மந்திரியார் கோரும் பயன்களை ஒன்றையேனும் பெற முடியாதென்று பல அறிஞர்கள் புட்டுப்புட்டுக் காட்டிவிட்டார்கள். ஆனால், ஆச்சாரியாரது பிடிவாதம் தளர்வடையவில்லை. தமிழர்களனைவருமே ஒன்று திரண்டு ஹிந்தி கட்டாயப் பாடத்தை எதிர்ப்பது தெரிந்திருந்தும் இது ஒன்றிரண்டு தேசத் துரோகிகள் செய்யும் சூழ்ச்சியென்று நெஞ்சறிந்த பொய் சொல்கிறார் ஆச்சாரியார். உண்ணாவிரதமிருப்பதை இரட்டைப் பலாத்காரமென்கிறார் மகாத்மா பட்டம் பெற்றக் காந்தியார். ஹிந்தியை எதிர்ப்பவர்களைப் போலீஸ் படைகொண்டு நசுக்க வேண்டுமென்கிறார் விளம்பர மந்திரி கனம் ராமநாதன். கரைத்தால் கல்லும் கரையும். ஆனால், ஆச்சாரியாரின் உள்ளம் கரையாது போலும். பழங்குடி பெருமக்களாகிய தமிழர்கள் இனிமேல் ஆச்சாரியாரது எதேச்சாதிகாரத்திற்கு பயப்படமாட்டார்கள். தமிழர்களது ஆதிகால உணர்ச்சியை மீண்டும் பெற்றுவிட்டார்கள். உயிரினும் பெரிதாய்த் தமிழ்த் தாயை மதிக்கின்றார்கள். கண்ணியமான முறையில் அறப்போர் தொடுத்து கட்டாய ஹிந்தியை ஒழித்து தமிழை



யும், தமிழரது கலையையும், தமிழரது நாகரிகத்தையும் காப்பாற்ற முன்வந்து விட்டார்கள். தமிழர்கள் இவ்வறப் போரில் வெற்றிமாலையுடன் மீளுவர். இல்லையேல் தமிழ்த் தாயுடன் தாங்களும் மடிவர்.

கடைசி முறையாகக் காங்கிரஸ் மந்திரி சபைக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். தமிழர்களது உணர்ச்சியின் வேகம் அதிகரித்து விட்டது. இனி அவர்களது உணர்ச்சியை அடக்க, ஹிந்திக் கட்டாயப் பாடத்தை ஒழிப்பதைத் தவிர நேர்மையான வழி வேறில்லை. இதை நமது பிரதம மந்திரியார் உணரும்படி வேண்டிக் கொள்கிறோம்.

## காங்கிரஸ் ஆட்சியில் ஹரிஜனங்கள் படும்பாடு

'தீண்டாமை என்னும் பேயை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்ய முனைந்திருப்பது காங்கிரஸ் கட்சிதானென்று தாராளமாக பிரசுரம் செய்கிறார்கள் காங்கிரஸ் கட்சியார். ஹரிஜனங்களுக்கு உழைப்பதே முக்கிய பணியாகக்கொண்டிருக்கிறேனென்கிறார் மகாத்மா காந்தி. ஆனால், நம் தென்னாட்டுக் காங்கிரஸ் கட்சியார் ஹரிஜனங்களுக்குச் செய்துவரும் நன்மைகள் யாவை? திருவாங்கூரைப் போற்றிய ஆச்சாரியார் பூரண அதிகாரம் பெற்ற ஆட்சியிலிருந்தும் ஆலயப் பிரவேசத்தை அனுமதிக்கவில்லை. காரைக்குடி ஹரிஜன கௌன்சிலருக்குச் சாப்பாட்டின் பொழுது தனியாக வைத்து உண்பிக்கச் செய்தார்கள். மாயவரத்தில் ஹரிஜன மெம்பரை நகரசபைத் தலைவராகப் பொருக்கும்படி பொதுஜனங்கள் கேட்டுக்கொண்டும், காங்கிரஸ் கமிட்டியார் செவி சாய்க்கவில்லை. பேரளத்தில் சொக்கலிங்க பண்டாரம் குமாரர்கள் திருவள்ளுவர் படத்தைக்கொண்டு ஊர்வலம் நடத்த ஆசைப் பட்டனர். அவ்வூரிலுள்ள காங்கிரசாருக்கு அது பிடிக்கவில்லை. இச்செயலை அவர்கள் ஒழுக்கத்திற்கு விரோதமாக மதித்தனர். உடனே நன்னிலம் சப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டிற்கு ஓடினர். ஹரிஜனங்கள் வள்ளுவர் படத்தை வைத்து ஊர்வலம் விட்டால், ஹரிஜனங்களுக்கும், மேல் ஜாதிக்காரருக்கும் வீண் மனத் தாங்கல் உண்டாகுமென்றும், அதனால் சமாதானத்திற்குப் பங்கம் நேரிடுமென்றும் விண்ணப்பம் செய்துகொண்டனர். மாஜிஸ்டிரேட்டாகிய ஐயா. உடனே மேல் ஜாதிக்காரருக்கு நீதி வழங்கி விட்டார். வள்ளுவர் படத்தை வைத்து ஊர்வலம் விடுவது சமாதானத்திற்குப் பங்கம் நேரிடுமென்று தாம் கருதுவதால் வள்ளுவர் படத்தை வைத்து ஊர்வலம் விடக்கூடாதென்று ஹரிஜனங்களுக்கு 144-வது பிரிவுப்படி தடையுத்தரவு பிறப்பித்து விட்டார். உலகம் போற்றும் வள்ளுவர் படத்தை வைத்து ஊர்வலம் விடுவது சமாதானத்திற்குப் பங்கம் நேரிடுமென்று மேல் வகுப்பார் கருதுவரானால் இதைப் பொது மக்கள் நம்புவர்களா? இது மேல் வகுப்பார்

# விவசாயக் கடன் மசோதா நியாயமானதா?

விவசாயக் கடன் மசோதாவானது ஏழை விவசாயிகளுக்கு ஒரு நன்மையும் உண்டு பண்ணவில்லை. இம்மசோதாவால் முதலாளிகளுக்கும் கடன் வாங்கி வியாபாரம் செய்தவர்களுக்கும் நன்மையை உண்டுபண்ணி யிருக்கிறது. இம்மசோதாவால் விவசாயிக்குக் கடன் கிடைக்கவில்லை அப்படி கிடைப்பினும் 100-க்கு 200 ரூபாய்க்கு எழுதிக் கொடுத்தால்தான் கிடைக்கின்றது இதற்கு அஞ்சியவன் நிலத்தை குறைந்த விலைக்கு விற்க வேண்டியவனாகின்றான். கிராமத்தில் விவசாயிகளிடம் ஒரு ஆயிரம் இரண்டாயிரம் என்று பல பேர்களிடத்தில் கடன் வாங்கி ரைஸ் மில் வைத்து நெல்லு வியாபாரம் செய்துவரும் வியாபாரி வாங்கிய கடனுக்கு வட்டியைக் கொடுத்துக்கொண்டு தானும் சொத்துக்களை விருத்தி செய்துக்கொண்டு வரும் வியாபாரியானவன் ஒரு ஏக்கர் நஞ்சை நிலத்தை வைத்துக்கொண்டு நான் விவசாயி நான் 50 வருஷமாய் கடனுக்காக வட்டி கொடுத்திருக்கிறேன் என்று சொல்லி பூரா கடனையும் ஏமாற்றிவிட்டு ஒரு லக்ஷ ரூபாய்க்கு முதலாளியாவதற்கு விவசாயக் கடன் மசோதா உதவி யளிக்கிறது. ஏழை விவசாயிகளின் பணம் பறிமுதல் ஆய்விடுகின்றது. இத்தகைய விவசாயிக்குப் பயனற்ற மசோதாவை முன்பின் யோசியாமல் அரசியல் ஞானம் குறைந்தவகையில் அவசரமாய் இந்தியாவின் பொதுச் சட்டத்தில் மாகாண மந்திரி தலையிட்டு சட்டம் செய்தது மிக தவறானதாகும்.

தாம் செய்த சட்டம் தவறு என உணர்ந்தும் மாற்றுதல் பலயீனத்தைக் காட்டும் என நினைத்தோ அல்லது தாம் செய்ததை திருத்தக் கூடாது என்ற மனப்பான்மை கொண்டோ வாளாவிருப்பார்களானால் அநீதி யிழைத்ததாகும். பிடிவாதம் இல்லாத மந்திரிகளே நாங்கள் என்பதைக் காட்டும் பொருட்டு மாரிடோரியம் பில்லை வாபீஸ் வாங்கினர். சம்பளக்கட் பில்லை நிறுத்திக்கொண்டனர், கோர்ட்டுக் குறைப்பைத் தடுத்துக் கொண்டனர் எண்டோமெண்ட் ஆபீஸ் நிவர்த்தி மசோதாவை கைநழுவ விட்டனர். ஆகிய

---

ஹரிஜனங்கள் மேல் கொண்டுள்ள வெறுப்பை யல்லவோ தெற்றன விளக்குகிறது. காங்கிரஸ் கட்சியார் பதவியி லிருக்கையில் இவ்வித அக்ரமங்கள் நடப்பதைக் கண்டு ஊரார் சிரிக்கின்றனர். காங்கிரஸ் பத்திரிகைகளும் கண்டனம் செய்கின்றன. தீண்டாதாருக்கு ஆச்சாரியார் ஆலயப் பிரவேச மளிப்பா ரென்று ஹரிஜனங்கள் எத்தனை நாளைக்கு எதிர் பார்த்துக்கொண் டிருப்பதோ? காங்கிரஸ் கட்சியில் பிராமணர்கள் இத்தகையச் செய்கைகளை எத்தனை நாளைக்குச் செய்துவர முடியும் என்பதை கவனிப்பார்களா?

---



இன்று நமது நாட்டைக் கவனியுங்கள்! நம்மையும் கவனியுங்கள்! நாடு நலனிழந்துவிட்டது. நம்மை—உன்னிப் பாருங்கள்—ஒரு காலத்தில் சிறப்புற வாழ்ந்த நாம்—இன்று சீரழிந்து வாழ்கின்றோம். சுதந்தர மிழந்த நாம் எவ்வளவு காலம் துயில் கொள்வோம்! விழிமின்! எழுமின்! வெற்றி பெறும்வரை விழாது உழைமின்!

ஐயோ! கூறவும் மனம் கூசுகின்றதே! குடியைப் புகுத்தினான்; கூத்தியைப் பெருக்கினான்; தேசபக்தர்களைச் சிறையி லிட்டான்; நீதியைக் கொன்றான்; நெறியைப் புதைத்தான்; உண்மையை ஒழித்தான்; குற்றமற்ற நம் ராணி பத்மாவதி தேவியாரைச் சிறையிலிட்டு மறிக்கச் செய்தான். இவை யனைத்தையும் உணர்ந்தும், நாம்,—இந்த நாட்டில் பிறந்த நாம்,— இந்த நாட்டில் வளர்ந்த நாம்,— இந்த நாட்டில் உணவுகொண்ட நாம்,— இந்த நாட்டில் உடுத்த நாம்,— இந்த நாட்டில் சுதந்தரத்துடன் வாழ்ந்த நாம், இன்றைய இழி நிலைக்குக் காரணபூதனாகிய அந்தச் சண்டாள சபாநாயகத்தைக் கண்டதுண்டமாக்காமல், கண்ணிருந்தும் குருடர்களாய்க், காதிருந்தும் செவிடர்களாய், வாயிருந்தும் ஊமையராய் வாழ்கின்றோம்! வாழ்கின்றோம்!! வாழ்கின்றோம்!!!' என்றவாறு இந்துபாலா மேலும் பேசப்புகுந்த பொழுது அவள் கைது செய்யப்பட்டாள்.

ஜனங்களிடையே மிகுந்த பரபரப்பேட்டது. பெரிய கலகம் ஏற்பட்டுவிடும்போல் தோன்றிய நிலையில் பற்பல போலீஸ் வீரர்கள் புகுந்து கலகமுண்டாகாமற் காத்தனர். ஆயுத பலமற்ற அந்நாட்டு மக்களால் அப்பொழுதென்ன செய்தல் கூடும்? சபாநாயகத்தை வாயார வைதனர்.

இச் சம்பவம் நடந்து ஒரு வாரம் கழிந்தது. வீரபுர சாம்ராஜ்யத்தி லிருந்து வெளிவரும் சமாசாரப் பத்திரிகைகளில் ஒன்றில் பெரிய எழுத்துக்களில்,

### தேசியக் கூட்டத்தில் குழப்பம்

இந்துபாலா கைது செய்யப்பட்டாள்

ஊர் முழுதும் ஒரே பரபரப்பு

(வெற்றி புரியில் நிகழ்ச்சி)

இவ்வூர் பிரபல குடும்பத்தைச் சார்ந்த ஜெயசேகர் அவர்களின் குமாரி ஸ்ரீமதி இந்துபாலா, சென்ற வெள்ளிக்கிழமை யன்று பெரிய

தொரு கூட்டத்தில் தேசிய உணர்ச்சி ததும்பச் சொற்பொழிவொன்று நிகழ்த்திய பொழுது திடீரெனக் கைது செய்யப்பட்டாள். காரணம் வீரபுர சாம்ராஜ்யமக்கள் உணர்ச்சிபெற்று தங்களின் விடுதலைக்காக ஒருமித்துப் போராட நேர்ந்தால் அகிலாண்டநாதனின் ஆட்சிக்குட்பட்ட வீரபுரசாம்ராஜ்யம் விடுதலை பெற நேரிடுமாதலால் மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதி சபா நாயகம் அவர்களின் பதவிக்கு ஆபத்துகளையும் எண்ணும் ஐயம் போலும்! அது எவ்வாறாயினும் ஆகுக. ஆனால், பொது மக்களைக் கட்டுப்படுத்தி அடக்கி ஆளும் நோக்கத்தோடு, அவர்கள் நெஞ்சிலிருந்து தேசப்பற்றை அடியோடு அகற்றும் எண்ணங்கொண்டு திடுக்கிடும் ஓர் சம்பவத்தை நிகழ்த்த இராஜப் பிரதிநிதி துணிவு கொண்டுள்ளதைக் கூறினால் ஒவ்வொருவரின் இதயமும் இக்ஷணமே வெடித்துவிடும். என்றாலும், எவ்வாறு எழுதாமலிருத்தல் கூடும்? அழகும், அழகுக்கேற்ற அருங்குணமும், அதற்கேற்ற தேசப்பற்றும் கொண்ட ஸ்ரீமதி இந்துபாலாவை நடு ரஸ்தாவில் பகிரங்கமாகச் சித்திரவதைச் செய்துகொல்லத் திட்டம் போட்டிருப்பதாகத் தெரிகிறது.

பொதுஜன சேவைக்காக ஏற்பட்ட இப் பத்திரிகை தனது சொந்த அபிப்பிராயத்தைக் கூறவேண்டுவது இன்றியமையாததாகும். ஆனால், அதிகமாகக் கூறினால் பத்திரிகைக்கு ஆபத்தேற்படுவது திண்ணம். என்றாலும், அதனைப் பொருட்படுத்தாது ஒரு சில வார்த்தைகள் கூறுவோம்.

மேன்மைதங்கிய இராஜப் பிரதிநிதியின் இத் திட்டம் பெரிதும் கண்டிக்கற்பாலதே. ஒரு வேளை இந்துபாலாவைக் கொல்லாது விட்டால் அது அவரின் நற்காலமென்பதற் கையமில்லை. அன்றிக் கொல்லப்பட்டாலோ அவரின் கதி அதோ கதியாகி விடுமென்பதற் கையமில்லை. தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்க வேண்டாமென்று இராஜப் பிரதிநிதிக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

என்று அச்சடிக்கப் பெற்றிருந்தது. இவைகளை வாசித்துணர்ந்த மக்கள் பட்டபாட்டை எழுதுவதென்றால் எம்மாலாகாது! பொது மக்களின் மனமே அவ்வாறு புண்பட்டதென்றால் அவளின் தாய் தந்தையர் உற்றார் உறவினர் நிலையை வருணிப்ப தெங்ஙனம்? அன்றி இச் செய்தியை அவள் காதலன் நம் சுந்தரநாதன் உணர்வானானால் அவன் மனோவேதனையை யாரே அளவிட முடியும்?

இவர்கள் நிலை இவ்வாறாக, இச்செய்தியை உணர்ந்த தேசத் துரோகிகள்—சபா நாயகத்தின் சகாக்களின் மனோ நிலையைச் சற்று நோக்குவோம். ஒரு மகானுபாவன், 'பெண் கழுதைக்கேன் இந்த வன்பு! 'சிவசிவா'வென்று வெந்ததைத் தின்று வீட்டிலுள்

# செங்கல்பட்டு ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்

செங்கல்பட்டு ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் நடைபெறப் போவதால் அதற்கு தகுந்த நபரை ஏற்பாடு செய்ய வேண்டியது காங்கிரஸ் தலைவராகிய கனம் முத்துரங்க முதலியாரின் கடமையாகும். தானும் டிஷ்டிரிக்ட் ஜில்லா போர்டில் ஒரு அங்கத்தினராய் இருப்பதால்தான் தலைவர் பதவியை எக்காரணங் கொண்டும் தலைவர் என்ற ஓதாவில் நிற்கக் கூடாது அப்படி ஆசை யிருந்தால் தமிழ் நாடுக் தலைவர் பதவியை ராஜிநாமா செய்ய வேண்டும் கனம் முத்தையா முதலியார் முன் தலைவராய் இருந்திருக்கிறார். ஆதலால் அவருக்கும் தலைவர் பதவி கொடுத்தலாகாது தற்சமயம் காங்கிரசில் நேர்மையானவர் என்று சொல்லக் கூடியவர்களில் முதன்மை ஸ்தானம் பெற்று பொது மக்களுக்காக வேலை செய்ய முன் வந்துள்ளவர்களில் வக்கீல் கனம் C. நரசிம்மாச்சாரியாரும், கனம் வெங்கட்சாமி நாயுடுவும் ஆகிய இருவரில் ஒருவரை தலைவராக ஏற்படுத்துவது சிறந்ததும் ஜில்லாவிற்கு நலமானதாகவும் இருக்கும் இதை கவனிப்பார்களா?

---

தானே இருக்க வேண்டும்! கூட்டம் போட்டாளாம்! பிரசங்கம் பண்ணினாளாம்! வேண்டும்!' என்பான். இதைக் கேட்கும் அவன் தோழன், 'ஆமாண்ணே! இந்தக் கழுதைக்கேனய்யா இந்தக் கவலை! இந்த ராஜ்யம் சுதந்தரமடைந்தாலென்ன! நாசமாய்ப் போனாலென்ன! பட்டும்! பட்டால்தான் தெரியும்!' என்பான். இதனைக் கேட்கும் இன்னொருவன், 'இவள் எம்மாத்திரம்! இவள்தான் சபா நாயகத்தைத் தொலைக்கும் மனுஷியோ! பெண் புத்தி பின் புத்தி தானே!' என்பான்.

நண்பர்காள்! அவர்கள் எவ்வாறு பேசினும் பேசுக! எடுத்துச் செயல்புரியினும் புரிக! ஆனால், எந்த நாட்டிலும் சரி—எந்த தேசத்திலும் சரி இந்த மாதிரி அறிவிலிகள் இல்லாமலில்லை. இவர்கள் வாய் வேதாந்திற்காக எவரும் பயப்பட வேண்டியதில்லை. பயந்திருப்பின் பயனேற்படாது. இவைகளுக்கும் இவை போன்ற வேறு பல சொற்களுக்கும் செவி சாய்க்காது நமது கடமையை—தொண்டைத் துணிந்து ஆற்றிப் பயன்பெற முனைவதே சீரிய காரியமாகும். சிறப்புள்ள பணியாகும்.

(தொடரும்).

# 'சொர்க்கத்துக்கு அனுப்பிய சீதனம்'

[ஜி. ஆர். கிருஷ்ணன் சிங்கை.]

**ப**கல் பன்னிரெண்டு மணியிருக்கும், சித்திரை மாதமானதால், வெப்பத்தின் கொடுமை பொருக்கமாட்டாமல், வெளியில் நடமாடும் ஜனங்களெல்லாம், தரையில் கால்வைக்க முடியாமல், துள்ளிக் குதித்து ஓடுகின்றனர்.

கண்ணபுரத்தின் வீதிகளில் ஒன்றில் வழிப்போக்கன் ஒருவன் வெய்யலில் நடக்க முடியாமல் ஓடிவந்து, ஒரு வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். வெய்யலில் வந்த களைப்பால் அப்படியே படுத்து விட்டான். தன்மேல் உள்ள வியர்வையை மேல் துண்டால் துடைத்துக்கொண்டே அங்கே காற்று ஜில்லென்று வருகிறதைப் பார்த்து, 'உஸ், அப்பா சொர்க்கம் மாதிரி யிருக்கே' என்றான்.

* * *

இந்த வீடு சுந்தரம் ஐயர் என்றவற்கு சொந்தமானது. அவன் பரமலோபி. ஆனால், கொழுத்த பணக்காரன். இந்த வீட்டில் ஐயரின் மனைவி, மீனாக்ஷி அம்மாள் மாத்திரம் தானிருந்தாள். அவளுக்கு சுமார் எட்டு வயதுள்ள நீனு என்ற குழந்தை இருந்தது. அதற்கு மணம் செய்த ஒரு மாதத்திற்குள் இறந்து விட்டது. அது இறந்து ஆறே மாதமானதால் அதே கவலையாய்ப் படுத்திருந்தாள். இந்த வழிப்போக்கன் 'சொர்க்கம்மாதிரி யிருக்கே' என்று சொல்லியவுடன் தன் கணவர் 'குழந்தை நீனு, சொர்க்கம் போயிருக்காள்' என்று அடிக்கடி சொல்லுவது நினைவிற்கு வந்தது. அவளும் தன் பெண் சொர்கம் போயிருக்கிறதென்றே நினைத்துக்கொண்டிருந்தாள். ஆகையால் உடனே வெளியில் ஓடிவந்து வழிப்போக்கனைப் பார்த்து, 'வாருங்கள்! சொர்கத்திலிருந்தா வர்ரேள்? அங்கே என் குழந்தை நீனுவைப் பார்த்தேளா? நன்னா யிருக்காளா? என்ன சொன்னாள்' என்று அதிக அவசரத்துடன் கேட்டாள்.

வழிப்போக்கன் பலே பேர்வழி யாகையால், இவளிடம் ஏமாற்றி, ஏதாவது அடித்துக்கொண்டு போகலாமென்று நினைத்துக் கொண்டு 'ஆமாம், அம்மா நான் சொர்க்கத்திலே தங்கள் மகளைப் பார்த்தேன். இங்கு ஒரு வேலையாக வந்தேன். அப்படியே இங்கே வரும்படி உங்கள் மகள் சொன்னதால் தான் வந்தேன். மிகவும் இளைத்துப் போய்விட்டது. என்னிடம் அனேக சங்கதிகள் சொல்லிற்று. நான் அவசரமாகப் போகவேண்டி யிருப்பதால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அதிருக்கட்டும் தாங்கள் அதை சொர்கத்திற்கு அனுப்பியபொழுது அதன்மேல் உள்ள நகைகளை யெல்லாம் அவிழ்த்துக்கொண்டு அனுப்பி விட்டார்களாமே? அதைச் சொல்லித் தான் மிகவும் விசனப்பட்டது.' என்று மிகவும் இரக்கமாகச் சொன்னான்.



உடனே மீனாக்ஷியம்மாள் 'அதற்கென்ன? கொஞ்சம் நேரத்திலே ஐயா வந்திடுவார். அவாளிடம் சொல்லிவிட்டு, குழந்தையுடைய நகைகள் துணிமணிகள் எல்லாம் கொடுக்கிறேன். கொண்டு போய் கொஞ்சம் தயவுசெய்து கொடுத்து விடுங்கள்' என்றாள்.

வழிப்போக்கன் ஒரே பிடிவாதமாய் 'ஐயோ! முடியவே முடியாது. நான் அவசரமாய் சொர்க்கம் போகணும். ஐயா வரும்வரையில் காத்திருக்க முடியாது. இப்பொழுது கொடுப்பதா யிருந்தால் கொடுங்கள்.' என்று சொல்லிவிட்டு 'நான் போய் வருகிறேன்' என்று சொல்லியபடியே திண்ணையை விட்டிறங்கி நடக்கலானான். எங்கே போய்விடுகிறானோ என்று அம்மாளுக்கு பயம் உண்டாய் விட்டது. உடனே அவனைத் தருவதாகக் கூப்பிட்டு வீட்டிலுள்ள நல்ல துணிகள், நகைகள் யாவையும் ஒரு மூட்டையாகக் கட்டி அவனிடம் கொடுத்து, 'இதைக் கொண்டுபோய் என் மகள் நீனுவிடம் நான் சீதனமாகக் கொடுத்ததாய்க் கொடுங்கள். ஐயர் வருவதற்குள்தான் அவசரப் படுரேள். அவாளிருந்தால் இன்னும் ஏதாவது கொடுப்பார். எதற்கும் இன்னுமொரு தடவை வந்தால் இங்கு வாருங்கள்' என்று மீனாக்ஷியம்மாள் சொன்னாள். 'நான் பத்திரமாய் கொண்டுபோய் கொடுக்கிறேன்' என்று சொல்லிக் கொண்டே வழிப்போக்கனும் நடக்கலானான்.

இவன் போன சற்று நாழிகைக் கெல்லாம் சுந்தரமையர் வீட்டுக்கு வந்தார். அவர் வாசற்படி ஏறுவதற்குள்ளாகவே மீனாக்ஷியம்மாள் அவரிடம் போய், 'என்ன கேட்டேளா சமாச்சாரத்தை! சொர்கத்திலே யிருந்து ஒருவர் வந்திருந்தார். நம் குழந்தை நீனுவைப் பார்த்தாராம்! உடம்புலே ஒரு நகையும் இல்லையாம். அவள் சொர்க்கம் போகச்சே நகையெல்லாம் பிடுங்கிக் கொண்டோமென்று சொல்லி அழுதாளாம். நீங்கள் வந்தவுடன் நகை, துணி முதலியவைகளைக் கொடுத் தனுப்பலாமென்று நினைத்தேன். அவர் மிகவும் அவசரப்பட்டதால் என் நகைகள், குழந்தை நகைகள், துணிகள் யாவையும் மூட்டைக்கட்டி அனுப்பி விட்டேன்' என்று ஐயர் நடுவில் பேசவிடாமல் பேசி முடித்தாள்.

இதைக் கேட்டதும் ஐயருக்கு சப்த நாடியும் அடங்கி விட்டது. 'அடி பாவி! சொர்க்கமாவது, குழந்தையாவது, நீனுவாவது, போகவாவது குடியைக் கெடுத்தாயடி' என்று கத்துகிறார். இந்தச் சமயத்தில் அம்மாளுக்கு கோபம் வந்துவிட்டது. உடனே 'யாருக்கு அள்ளிக் கொடுத்து விட்டேன், நம்ம குழந்தை சொர்க்கத்திலே கஷ்டப் படுரேதேன்னுதானே அனுப்பினேன். என்பதற்குள் ஐயர், அவன் எந்தப் பக்கம் போனான்? சொல்லித் தொலையடி சீக்கிரம் என்றார். அம்மாளும் அவன் போன வழியைக் காட்டினாள்.

உடனே ஐயர் குதிரை லாயத்திற்கு ஓடி, நன்றாய் ஓடக்கூடிய தாகிய தன் குதிரையை அவிழ்த்து அதன்மேல் ஏறிக்கொண்டு, அம்மாள் காட்டிய வழியே ஓட்ட ஆரம்பித்தார். வெகு தூரம் சென்றதும் மூட்டையுடன் வழிப்போக்கன் போவதைக் கண்டார். அவனும் இவர் தன்னைத்தான் துரத்தி வருகிறார் என்பதைத் தெரிந்துகொண்டு பக்கத்தில் உள்ள மரம் ஒன்றில் மூட்டையுடன் ஏறிக் கொண்டான்.

சுந்தரம் ஐயரும், மரத்தடிக்கு வந்துவிட்டார். அவருக்கு பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது, 'அடே படவா, பொம்மனாட்டியை ஏய்த்து வந்ததுமல்லாமல் மரத்திலா ஏறிக்கொண்டாய்' என்று சொல்லிக்கொண்டே, அந்த மரத்திலிருந்து தழைத்து தொங்கிய கிளை ஒன்றில் குதிரையைக் கட்டி, தானும் மரத்தில் ஏறினார். அவர் பாதி மரம் ஏறுவதற்குள்ளாகவே, அவன் குதிரை கட்டியிருந்த கிளைக்கு வந்துவிட்டான். இவர் மரத்தின்மேல் போன உடன் வழிப்போக்கன் கிளையிலிருந்து குதிரைமேல் குதித்து மூட்டையுடன் குதிரையை அவிழ்த்துவிட்டு ஓட்டலானான்.

சுந்தரமையர், 'இனிமேல் நம்மால் இவனைப் பிடிக்கமுடியாது என்பதை அறிந்துகொண்டு மரத்தின்மே லிருந்தபடியே 'ஓய் நில்லுங்காணும், ஒரே ஒரு சமாசாரம். என் பெண் நீலண்டே போய் உங்கம்மாள், நகை, துணிகள், சீதனம் கொடுத்தாள். உங்கப்பா ஏறிண்டுவர குதிரைக் கொடுத்தார்' என்று சொல்லுங் காணும்' என்றார்.

வழிப்போக்கனும் குதிரை சவாரி செய்துகொண்டே சிரித்துக் கொண்டு, 'சரி நான் போய் சொல்லுகிறேன். நீர் பத்திரமாய் இறங்கி போங்காணும்' என்றான்.

இனம்! இனம்!! இனம்!!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் எழுதிய

**அனுபவ வைத்திய நூல்**

**பழைய இரண்டாம் பாகம் இனம்**

வேண்டுவோர் 4 அணா தபால் தலை (ஸ்டாம்பு) அனுப்பினால் 1 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பி வைக்கப்படும்.

**'தமிழரசு' புத்தகாலயம்,**

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# தமிழ்ப்பட முதலாளிகள் கவனிப்பார்களா?

[இ. மாணிக்கம்]

சினிமாக் கலை மேல்நாட்டவர்களால் கண்டு பிடிக்கப்பட்டு முதலில் மௌனப் படமாக இருந்து, பிறகு பேசும் படமாகி அந் நாட்டு மக்களுக்குக் காட்டப்பட்டு வந்தது. நாம் அதைக் கேள்வியுற்றபொழுது நம் நாட்டவர்களும் இவ்விதப் படக் கலையில் இறங்க மாட்டார்களா என நினைத்து எதிர் பார்த்திருந்தோம்.

தமிழர்களும் படமெடுக்க ஆரம்பம் செய்தனர். பல படங்களும் வெளிவந்தன. படங்கள் எடுத்ததில் முதலாளி வர்க்கத்தினர் கொள்ளை கொள்ளையாக இலாபம் சம்பாதித்துப் பொருளைப் பெருக்கினர். ஆனால், ஒரு படமேனும் உயர் நோக்கங்கள் கொண்டதாயில்லை. அனேகமாக எல்லா படங்களிலும், தமிழர்கள் என்றென்றும் அடிமைகளாக, அறிவிலிகளாக, மதப்பித்தர்களாக,



'கந்தலீலா'வில்

சாதி வெறியர்களாக, காமுகர்களாகத் தூண்டக்கூடிய கீழ்த்தர உணர்ச்சிகளே நிறைந் திருக்கின்றன.

தமிழ்ப் பட முதலாளிகளே உங்களுக்குத்தான் சொல்லு கிறேன். நீங்கள் பணம் சம்பாதிப்பதற்காகவே படமெடுத்துப் படக் கலையைப் பாழ்படுத்துகிறீர்கள். இல்லாவிடில், உங்கள் மன சாட்சிக்கு விரோதமின்றிச் சொல்லுங்கள். உங்களுக்கு உண்மையி



தமிழ் 'துகாரா'மில் நடிக்கும் சீதா

லேயே கலையில் பற்று இருக்குமானால் அர்த்தமற்ற ஆபாசப் படங் களைப் பிடித்து வெளியிடுவீர்களா? உங்கள் தேகத்தில் தமிழரின் வீர இரத்தம் ஓடினால், தமிழருமை உணர்த்தாத தமிழர் நடை உடை பாவனைகள் அல்லாத அன்னியர் போன்ற உடைகள் அன்னவர்களின் ஆபாச நாகரிக வழக்கங்களை வேண்டு



மென்றே தமிழ்ப் படங்களில் புகுத்தி அவைகள் அழிந்து ஒழிந்து போகவென் முன் வந்திருக்கிறீர்கள்?

தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை. எதிரிக்கு இரண்டு கண்களும் போக வேண்டு மென்றே பேராசையுடன் போட்டி போட்டுக்கொண்டு ஒருவன் எடுக்கும் பட[illegible]



'என் காதலி'யில்

ஆசை கொள்வீர்களா? நம் நாட்டில் கதைகளுக்குப் பஞ்சமா வந்து விட்டது. பின் ஏன் ஒவ்வொரு கதையும் படமாக வரும்பொழுது இரட்டைப் பிறவிகளாகி விடுகின்றன? இது உங்களது பொருமைக் குணத்தை எடுத்து காண்பிக்கிறதல்லவா?

இரண்டொரு மோசமான படங்களை வைத்துக்கொண்டு கொட்டகைக்காரர்களுக்குக் குறித்த நாளில் தருவதாக வாக்

களித்துவிட்டு, அவர்கள் விளம்பரம் செய்தபிறகு, படங்களைக் குறித்த காலத்தில் அனுப்பாமல், அவர்களைப் பணம் விரயமாவதற்கும், மான மழிந்து மதிப்புக்குறைவதற்கும் ஆளாக்குவது மன்றி, அதைப்பற்றிக் கேள்வி எழுந்தால்; நொண்டிச் சமாதானம்கூறி மழுப்புவதும் பொறுப்புள்ள முதலாளிகளின் செய்கையா? நீங்கள் மோசமாக எடுக்கும் எல்லா படங்களுக்கும், முன் போலவே ஜனங்கள் பார்ப்பதற்கு வந்து கூடுவார்கள் என்று நினைப்பது சுத்த முட்டாள்தனம். படங்கள் பேசினால் போதுமென்ற காலம் போய்விட்டது, ஜனங்கள் சினிமாவை ரசிக்கத் தொடங்கி விட்டனர். இனிமேல் உங்கள் பாச்சா பலிக்காது. இரக்கமற்ற படமுதலாளிகளே இனிமேலும் நீங்கள் ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்ச முடியாது என்பதைத் திண்ணமாக அறிவீர்களாக.

இனிமேலாவது நீங்கள் படமெடுக்க யோசனை செய்தவுடன் நல்ல கதை எழுதக்கூடிய ஒருவரைத் தேர்ந்தெடுப்பீர்களா? அவசரப்படாமல் கதை எழுதச்செய்து, நடிகை நடிகர்களைத் தேர்ந்தெடுத்து கலா அனுபவம் வாய்ந்த உயர்ந்த தமிழ் டைரக்டரின் கீழ்ப் பார்வையில்விட்டு டைரக்டருக்கும், நடிகை, நடிகர்களுக்கும் பூர்ண சுதந்தர மளித்துப் படத்தை வெற்றியுடன் எடுக்க முயலுவீர்களா? தமிழ்ப் படம் எடுக்கும் முதலாளிகளில் அனேகர் பகுத்தறிவற்ற பண மூட்டைகளாக இருந்துகொண்டு தனக்குத் தெரியாவிட்டாலும் தெரிந்த அறிவாளிகளின் யோஜனைகளையும் கேட்காமல், ஜனங்கள் எவ்வெக் காலங்களில் எந்தெந்த விதமான படங்களை ரசிக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ளாமல், தமிழ்ப் படம் ஆரம்பித்த காலத்தில் இருந்தே ஒரே விதமான கண்ணாடி முத்துகளையும், அட்டை முடிகளையும் கொண்ட பைத்தியக்கார உருவங்களும், காலிக் கூத்துக்களும், ஆபாசக் காட்சிகளும் நிறைந்த படங்களையே பிடித்து வருகிறார்கள். இவ்விதப் படங்களை ஆயிரக் கணக்காகப் பிடித்துத் தள்ளினாலும் அதனால் யாருக்கு என்ன பிரயோஜனம்? ஒன்றே செய்யினும் நன்றே செய்க என்பதை கருத்தில் கொண்டு ஒரு படமெடுத்தாலும், நம் தமிழர் அறிவு வளர, அஞ்ஞானம் ஒழிய, தமிழ்க் கலை வளர, விபசாரம், பால்ய மணம் இவைகள் ஒழிய, மறுமணம் வளர, சாதிமதச் சண்டைகள் அழிந்து நாட்டின் ஒற்றுமை வளர, கல்வி அபிவிருத்தி அடைய, சுகாதாரம் ஓங்கித் தழைக்கப் படங்கள் எடுத்து நம் நாட்டவர்களுக்குச் சித்திரித்துக் காட்ட எந்த முதலாளியாவது முன்வர மாட்டார்களா?

தமிழ் நாட்டின் இத்தகைய நிலையை அறிந்துதான் நம் தமிழ்க் கவி பாரதிதாஸனும் மனம் நொந்து,



'படக்கலைதான் வாராத எனநினைத்த நெஞ்சம்
பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால்,
பக்கலையாம் சனியொழிந்தால் போதுமென எண்ணும்!
பயன் விளைக்கும் விதத்தினிலே பல செல்வர்கூடி
இடக்க கற்றிச் சுயநலத்தைச் சிறிதேனும் நீக்கி
இதயத்தில் சிறிதேனும் அன்புதனைச் சேர்த்துப்
படமெடுத்தால் செந்தமிழ் நாடென்னும் இளமயிலும்
படமெடுத்தாடும்; தமிழர் பங்கமெலாம் போமே!'

என்று கூறி இருக்கின்றார். இவைகளை எல்லாம் தமிழ்ப் பட முதலாளிகள் கவனிப்பார்களா?

---

குடிகாரன் ஒருவன் கள்ளைக் குடித்துவிட்டுத் தெருவில் அட்டகாசம் பண்ணினான்.

போலீஸ்காரன் அவனைப் பார்த்து நீ செய்த அட்டகாசத்திற்கு ஒரு ரூபாய்க் கொடுத்தால் மன்னிக்கின்றேன். இல்லாவிடில் ................என்று சொன்னான்.

குடிகாரன்:—போலீசாரே என்னிடத்தில் கொஞ்சம் கள்ளுதான் இருக்கிறது. பணமில்லை. அந்தக் கள்ளைக் கொடுப்பதற்கும் மனசு வரவில்லை.

—சி. ஆர். துரைராஜ்

---

ஆ! அவைகளை எல்லாம் ஞாபகப்படுத்த வேண்டாம்! இந்த ஞால வாழ்வு நாடகம் போலாகும்! அதற்குள் மனிதர் கட்டுவது மனக்கோட்டை! எண்ணியபடி எதுவும் நடக்காது! கண்ணால் காண்பதும் பொய்! காதால் கேட்பதும் பொய்! நானும் பொய்! நீங்களும் பொய்! இந்த நானிலமும் பொய்! நிற்பது, நடப்பது, கற்பது, கேட்பது, கருதுவது எல்லாம் அற்பமாயைகள்! இது......

**சொற்பன உலகம்**

—சுந்தரி.

ஆக்கியோன்:—

**V. இராமநாதன்,**

தேவக்கோட்டை.

வெளி வருகிறது! எதிர்பாருங்கள்!

**ஓர் சிறந்த நாவல்!**

**சொற்பன உலகம்**

# 'சினிமா' கிண்டல்

[நாகன்]

## யாரையா இவர் !

இவர் யார் என்பது நான் சொல்லாமலே தெரியவில்லையா? அம்மையார் டி. பி. ராஜலட்சுமி தான். மௌனப்பட மனோன்மணி. பேசும் படப் பெருமாட்டி. ஊமைப்படக் காலத்தில் சினிமாவுக்குத்



தைரியமாக இவர் முதலில் நடிக்க முன் வந்த சினிமா ராணி. பேசும் படத்திலும் அப்படியே. இவர் பல படங்களிலும் நடித்துப் புகழ் பெற்றவர். ஆனால், கொஞ்சகாலம் இவர் திரை முன் வராமல் இருந்தார். அதற்குக் காரணம் யாதோ? பழைய ஜோடியான (படத்தில்) வி. ஏ. செல்லப்பாவோடு இப்போது 'மதுரை வீர'னில் நடிப்பது நமக்குச் சந்தோஷம். நிற்க, இவர்களிருவரும் ஹாஸ்யப் பாகத்திலும் தோன்றுவதாகக் கேள்வி. இருந்தாலும், பிரதம வேடம் தரிக்கும் இவர்கள் ஹாஸ்யத்திலும் நடிக்க முன்




வந்தது இதுதான் முதல் தடவை என்பது குறிப்பிடத் தக்கது! 'மதுரை வீர'னுக்கு முன்பே, அம்மையார் நடித்த 'நந்தகுமார்' தமிழ்ப் படம் பிராட்வேயில் சீக்கிரம் வந்துவிடும்போலிருக்கிறது. பார்ப்போம் இவரது நடிப்புத் திறமையை. நடிக்குங் காலையில் முக பாவம், அங்க அசைவு முதலியவைகளில் கைதேர்ந்தவர்தான். ஆனால், சங்கீதத்தில் அவ்வளது போதுமா வென்பது எனக்குச் சந்தேகமே. இருந்தாலும் நடிப்பு ஒன்று இருக்கிறதல்லவா!

இதற்கு முன் இவர் நடிக்குங் காலத்தில், எந்த டைரக்டராக யிருந்தாலும் அவருக்குக் கீழ்ப்படியாமல் இருந்ததாகவும் கேள்வி. அவர் எந்தச் சங்கை ஊதினாலும் தன்னிஷ்டப்படியே நடிக்கும் பழக்க முடையவர் என்றும் சொல்லக் கேள்வி. ஆனால், 'நந்தகுமா'ரில் அப்படியில்லையாம். டைரக்டர் துரை எது சொன்னாரோ அதை அப்படியே நடிப்பில் சித்திரித்திருக்கிறாராம். தேவ வாக்கென்று நினைத்திருந்தாராம். குருவினிடத்தில் (உண்மை) சிஷ்யன் எப்படி பாடம் கற்றுக்கொள்ள விரும்புவானோ அதே மாதிரி அம்மையாரும் அதுசமயம் டைரக்டர் சொன்னபடி கேட்டு நடித்திருக்கிறாராம். எல்லாம் எதற்கு? தன்னுடைய பெயர் சினிமா உலகில் மறுபடியும் அடிபட வேண்டும் என்னும் எண்ணந்தானே. சினிமா உலகில் ராஜலட்சுமி அம்மையாரைத் தெரியாதார் யாரும் இல்லையென்றே தைரியமாகச் சொல்லலாம். இருந்தாலும், நடிப்பில் அவ்வளவு சோபிக்கவில்லை என்பது ஜனங்களுக்கு அதிருப்தி. அந்த அதிருப்திகளை யெல்லாம், 'நந்தகுமா'ரில் உதறி தள்ளிவிட்டாராம். 'மதுரை வீர'னில் மிகமிகக் கவனித்து நடித்து வருகிறாராம். 'மதுரை வீரன்' படப்பிடிப்பிற்குப் போகுமுன்போ அல்லது 'நந்தகுமா'ருக்கு நடிக்கப் புறப்படுவதற்கு முன்போ ஜனங்கள் இவரை நினைத்தது என்னவென்றால், அம்மையாருக்குச் சினிமா உலகம் சலித்துவிட்டது; நடித்து விட்டார், கதை எழுதி விட்டார், தானே டைரக்ஷனையும் கைகொண்டார். அதுவும் சொந்தப் படத்திலேயே. இப்பொழுது முற்றிலும் ஓய்வு எடுத்துக் கொள்கிறார்போலிருக்கிறது! ஏது, இனி இவரைத் திரையில் சந்திப்பது? என்று உறுதியாகவே நினைத்து விட்டார்கள். இவைகளை எப்படியோ மனோ சக்தியால் ஊகித்துக் கொண்டு 'இதோ வந்துவிட்டேன்' என்று 'நந்தகுமா'ரில் தோன்றினார். (படம் விரைவில் பிராட்வேயில் வரப் போகிறது) தற்சமயம் பம்பாயில் வி. ஏ. செல்லப்பாவுடன் 'மதுரை வீர'னில் நடித்துக் கொண்டிருக்கிறார். பிறகு, 'மீனாட்சி கல்யாண'த்திலும் நடிப்பார் என்று விளம்பர வாயிலாகத் தெரிகிறது. எப்படியும் இவரது நடிப்பைப் பார்த்து நீண்ட நாட்களாகிவிட்டன. எப்படியும் இவரை வரவேற்க ஜனங்கள் தயாராகத்தானிருக்கிறார்கள்.

## இந்தச் சூரன் யாரையா!

இந்தச் சூரனை எங்கெங்குச் சந்தித்திருக்கிறீர்கள். சொல்லுங்கள் பார்க்கலாம். ஒன்றும் யோசிக்க வேண்டாம். நானே சொல்லி விடுகிறேன். 'மார்க்கண்டேயர்', 'பட்டினத்தார்', 'சுந்தரமூர்த்தி நாயனார்', 'கண்ணப்ப நாயனார்' முதலிய படங்களில் நடித்துப் புகழ் பெற்ற பிள்ளையாண்டான் தான். பெயர் வி. என். சுந்தரம்.



இப்போது மற்றொரு தமிழ்ப் படத்தில் நடிக்க ஒப்பந்தம் நடந்து கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது எவ்வளவுதூரம் உண்மையென்பது கொஞ்சம் போனால் தான் தெரியும். பையனுக்கு நடிப்பு ஒவ்வொரு படத்திலும் 'பாதகமில்லை' என்றளவில் தான் இருந்து வந்திருக்கிறது. முற்றிலும் கடைசியாகக் 'கண்ணப்ப நாயனா'ரில் அவனுடைய பெயர் கெட்டு விட்டதென்றே சொல்லப்படுகிறது. படம் இன்னும் சென்னைக்கு வந்தபாடில்லை. வந்தவுடன் நமக்கும் வெட்ட வெளிச்சமாகிவிடும். நல்ல நடிக்கக்கூடிய—முன்னுக்குத் தலை நீட்டக் கூடிய குழந்தைகள் யெல்லாம் ஏன் கெட்டு விடுகிறது என்பது புலப்படவில்லை. பால்ய நடிகனாயிருந்தாலும், வயோதிக நடிகனாயிருந்தாலும், ஆசாமிக்குத் தகுந்தாற்போல் வேடம் தரிக்க வேண்டும். இதை விட்டுவிட்டு முதலாளிகள் என்ன வேடம் கொடுக்கிறார்களோ அதைத் தாங்க முயற்சிப்பது முற்றிலும் தவறென்றுதான் எண்ணுகிறேன். இதைப்பற்றி எவ்வளவோ பேர் எடுத்துரைத்து விட்டார்கள். ஈண்டு மறுபடியும் சொல்வது உசிதமன்று.

---

## கனகம்

[T. மருதாச்சலம்]

மனோரம்மியமான மாலை நேரம். கதிரவன் தனது கிரணங்களை ஒடுக்கிக்கொண்டு மேற்றிசையில் மறையலானான். எங்கும் ஒரே தங்க மயமாக இருந்த காக்ஷி இயற்கை யழகை பன்மடங்கு சோபிக்கச் செய்தது. புள்ளினங்களும் தத்தம் வீடுகளை யடைந்து குஞ்சுகளுடன் குலாவிக்கொண் டிருந்தன. காதலர்கள் ஆங்காங்கு தம்மையும் மறந்து வீற்றிருந்தார்கள். இயற்கை யின்பத்தைப் பருகுவதுபோல் விளங்கிற்று.

ராவ்பகதூர் சுந்தரம் பிள்ளையின் மாளிகையில் எங்கும் நிசப்தமே குடிகொண் டிருந்தது. அம் மாளிகையின் பின்புறத்திலுள்ள பூங்காவின் இயற்கை இன்பத்தையும், அப்பொழுதுதான் மலர்ந்த புஷ்பங்களின் சுவாசத்தைப் பருகும் இன்பத்தில் ஈடுபட்ட வண்டினங்களின் ரீங்காரத்தையும் எவனும் அனுபவிக்கவில்லை

அதோ! அங்குக் காணப்பட்ட கல்திட்டின்மீது துயரமே உருவென வீற்றிருந்த 16 வயதும் நிரம்பப்பெறாத பெண்பாவை யாரோ தெரியவில்லையே! தேவகன்னிகையோ என ஐயமுறச் செய்யும் அவள் வதனம், கண்டவுடன் காமுறச் செய்யும் அவள் சுந்தர ரூபம், அவ்வாறு துயருற்றிருக்கக் காரணம் என்ன?

புதூரில் ரங்கசாமிக் கோனாரை அறியாதார் எவரும் இலர். அவரே அவ்வூர் தனவந்தர்களில் பிரதானமானவர். மிகவும் சாத்வீக முள்ளவராயும், தர்ம சிந்தனை யுள்ளவராயு மிருந்தார். அவர் வார்த்தையை மீறியவர்கள் அவ்வூரிலிலர். அவரது வாழ்க்கைத் துணைவியான கருப்பாத்தாளோ, பெயரைப் போலல்லாது மிகவும் எழில் வாய்ந்தவள். நகமும் சதையும் போன்று, இணை பிரியாது, இன்புற்று, இல்லறம் நடத்திவந்த அத் தம்பதிகளுக்கு ஒரே ஒரு பெண் உண்டு. சாயலையும் குணத்தையும் ஒட்டி அவளுக்குக் 'கனகம்' எனப் பெயரிட்டனர். குழந்தைப் பருவம் நீங்கி மங்கைப் பருவம் அடைந்ததும் கனகத்தைப்பற்றி அவர்கள் சிறிது கவலையுற ஆரம்பித்தனர். அவளைக் கண்ட இளைஞரனைவரும் தமக்கே அவளை விவாகம்செய்து கொடுக்க வேண்டுமென மன்றாடியதால், பழிப்புக் கிடமின்றி அவளை விவாகம் செய்து கொடுப்பதைப்பற்றிச் சதிபதிகள் கவலை கொள்ளலானார்கள்.

கோனாரும், பிள்ளையவர்களும் சிறுவயது முதல் ஒரே பள்ளியில் பயின்றவர்கள். பிள்ளையவர்கள் புதூரின் அருகாமையிலிருந்த மருதூரைச் சேர்ந்தவராகையால், இவர் வீட்டாருக்கும் அவரது வீட்டாருக்கும் விசேஷ நட்பு உண்டு. இருபத்தைந்தும் நிரம்பப் பெறாத பிள்ளையவர்கள் தமது தந்தையின் கௌரவத்தாலும், தமக்

கிருந்த செல்வத்தின் மதிப்பாலும் அவ்விளவயதிலேயே 'ராவ் பகதூர்' பட்டமும் பெற்றார். ஆனால், சமூக சீர்திருத்தத்தில் வைத்திருந்த அவரது மனம் அப் பட்டத்தை அபேக்ஷிக்கவில்லை. தந்தையின் சொல்லிற்குக் கட்டுப்பட்டுப் பட்டத்தை ஏற்றாராயினும் மறு வருடமே அதை வெறுத்துத் தள்ளினார். சமூக முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டு வந்தார். முட்டுக்கட்டைகள் போன்றிருந்த மதக் கட்டுகளைச் சிறிது சிறிதாகத் தகர்த்து வந்தார். இதற்கெனவே தனது இல்லத்தில் அவர் கீழ்ப்பட்ட 'வர்ணத்திற்' எனக் கருதுபவரை வேலைக்கு அமர்த்தி யிருந்தார். அவரது தோட்டக்கார முனியன் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவன். அவனுக்கு வீராயி என்னும் ஒரே மகள் உண்டு. அவளும் முனியனுடன் வந்து வேலை செய்துகொண்டிருந்தாள். ஊரிலெங்கும் மூன்று நாள் சுரம் பரவியிருந்தபோது முனியனும் அந் நோய் வாய்ப்பட்டான். அவனைப் பிழைக்க, பிள்ளையவர் அரும் பாடுபட்டும் பயனில்லாமல் போயிற்று. இறக்கும் தருவாயில் முனியன் பிள்ளையவர்களிடம் வீராயியை ஒப்புவித்து அவளைக் காப்பாற்றுமாறு மன்றாடினான். சந்தோஷத்துடன் பிள்ளையவர்களும் அவ்வாறே செய்வதாக உறுதி கூறவே, முனியன் ஆவி அவனது உடலைவிட்டு நீங்கிற்று. அவனது சந்தோஷம் அப்பொழுதும் அவனது முகத்தில் விளங்கிக்கொண்டிருந்தது. பிள்ளையவர்கள் தன் வீட்டிற் கருகாமையில் ஒரு குடிசை கட்டுவித்து அதில் வீராயியை வீற்றிருக்கச்செய்து, அவளைத் தமது சொந்தச் சகோதரி போலவே கவனித்து வந்தார். உபாத்தியாயினி ஒருத்தியை நியமித்து, அவளுக்குக் கல்வியும், பெண்களுக்கு அவசியமான வித்தைகளையும் கற்றுவித்தார். ஆகவே, மங்கைப் பருவமெய்திய வீராயி, கண்டோர் பிரமிக்குமாறு, விசேஷ குணங்களுடன் விளங்கினாள்.

ரங்கசாமிக்கோனார், பிள்ளையவர்களுடன் பழகி வந்ததால் அவரது அரிய குணங்களைக் கண்டு பெருதும் மகிழ்வுற்றார். தம்மாலான உதவியை அவ்வப்பொழுது செய்து வந்ததுயன்றி, தமது அரும் புதல்வியை அன்னவருக்கே கல்யாணம் செய்து கொடுக்கவும் இச்சித்தார். பிள்ளையவர்களும் கோனாரின் எண்ணத்தைக் கேட்டு ஆனந்தக் கடலி லாழ்ந்தார். தான் மேற்கொண்ட கொள்கைக்குத் தானே உதாரணமாக விளங்குவதுடன், தான் அருமையாகப் பார்த்துவரும் வீராயிக்கும் தாய் ஸ்தானத்தில் 'கனகம்' விளங்குவாளென பெரிதும் மகிழ் வெய்தினர். கனகத்தின் சந்தோஷத்தையும், சம்மதத்தையும் முகக் குறிப்பாலறிந்த அவள் தாயாரும், தனது ஆசையை யடக்கிக்கொண்டு, பிள்ளையவர்களுக்கு அவளைக் கொடுக்க இசைந்தார். ஆகவே, தனது அண்ணன் மகன் ராமகிருஷ்ணக் கோனாருக்குக் கனகத்தைக் கொடுக்க இதுவரை கருப்பாத்தா



எண்ணி யிருந்தாலும், குணத்தில் மிகவும் சிரேஷ்டரான பிள்ளையவர்களின் பிரஸ்தாபத்தைக் கேட்டதும் தனது எண்ணத்தை விட்டு விட்டாள்.

அடுத்த சுப முகூர்த்தத்திலேயே சுந்தரம் பிள்ளையவர்களுக்கும், கனகத்திற்கும் விவாகம் இனிதே நிறைவேறியது. பிள்ளையவர்களின் சமூகத் தொண்டின் பலனாக, சங்கு கட்டுவது, குற்றம் கொடுப்பது, பெரிய கிழவினிடம் முறையிடுவதென்றெல்லாமிருந்தவை, கோனார் ஜாதியில் முன்னமேயே ஒளிந்து மறைந்தனவாகையால், இருதரத்தாரும் கல்யாணத்திற்கு வந்திருந்து தம்பதிகளை மனங்குளிர வாழ்த்தினர். பிள்ளையவர்களின் அரிய தொண்டையும், கோனாரின் உயரிய குணங்களையும் உலகமே அறியுமாகையால் வாழ்த்துகளும், பரிசுகளும் மணமக்களை நாடிவந்து குவிந்தன. இவ்வளவு சந்தோஷத்தி னிடையே ஒரு மனது மாத்திரம் துடித்துக் கொண்டிருந்தது. பொறாமையால் சூழ்ச்சிகளில் தலைப்பட்டது. அது இராமகிருஷ்ணக் கோனாருடையதெனச் சொல்லவும் வேண்டுமா?

பிள்ளையவர்கள் மருதூரில், தம தரும் மனைவி கனகத்துடன் இனிதே காலம் கழித்து வந்தார். அவரது காதல் பெருக்கால் சமூக சேவையும் ஒரு வருஷ காலமாக மிகவும் குறைத்துக்கொண்டு, வீராயியைக் கவனிப்பது தவிர, பாக்கி நேரங்களில் கனகத்தையே மகிழ்வித்து வந்தார்.

வீராயி, திடீரென நோய்வாய்ப் பட்டாள். சுரம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. பிள்ளையவர்களுக்கு இது பெரும் கவலைக்கு இடமாயிற்று. மேலும், கனகத்திற்கு இவ் விஷயத்தைத் தெரிவித்து அவளது மாசில்லாத இன்பத்தைக் கலங்கச்செய்ய தாம் இஷ்டப் படாததால், வீராயிக்கு வேண்டியவற்றைத் தாமே கவனித்து வந்தார். வைத்தியருக்காகவும், அவள் ஆகாரம் முதலியவற்றிற்காகவும் தாமே அலைந்துகொண்டிருந்ததால், அவர் வீட்டிற்கு வருவது அரிதாயிற்று. சென்ற இரண்டு மூன்று தினங்களாக அவள் படுக்கை யண்டையே யிருந்து, உறக்கமின்றிக் கவனித்து வந்ததால், அவள் சிறிது குண மடைந்து கண்களை மெல்லத் திறந்து நோக்கினாள். தன்னை இதுகாறும் காப்பாற்றி வந்த பெரியாரின் மடியில்தான் தலைவைத்துப் படுத்திருப்பதை அறிந்ததும் நாணத்தால் எழுந்திருக்க முயன்றாள். ஆனால், முடியாததால் மீண்டும் படுத்து விட்டாள். 'வீராயி! உனக்கு என்ன வேண்டும்' எனப் பரிவுடன் கேட்டார் 'இவ் வேழையின்மீது இவ்வளவு அன்பு வைத்த தங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். என்றென்றும் இவ்வன்பு நீடித்திருக்குமாறு இறைவனை வேண்டுவதே போதுமான'தென அன்பு ததும்பிய குரலில் வீராயி மெதுவாகச் சொன்னாள். வீராயிக்கு ஆகாரம் சிறிது கொடுத்தார்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவள் அயர்ந்து தூங்கிவிடவே, மெது வாக அவளைப் படுக்கையில்விட்டு விட்டு, கனகத்தைப் பார்த்துவரச் சென்றார்.

என்றும் புன்முறுவலுடன் வரவேற்கும் கனகம் அன்று வெளிப் பக்கம் காணாததால், சிறிது திகில் கொண்டார். 'கனகம், கனகம்' எனக் கூவிக் கொண்டே வீடுமுழுவதும் தேடினார். ஆனால், பயன் படவில்லை. பின்புறம் சென்று தோட்டத்திலும் தேட லானார். அங்குக் கல்திட்டின்மேல் துயர்வடிவா யிருந்த கனகத் தைக் கண்டதும், வாரியணைக்க ஓடோடியும் சென்றார். ஆனால், இவரைக் கண்டதும் கனகம் சரேலென எழுந்து பின்னால் நாலடி நகர்ந்து முகத்தைத் திருப்பிக் கொண்டனள். நான் இந் நான்கு நாட்களாக வராத காரணத்திற்காகக் கோபிக்கிறாயா? அப்படி யிருப் பினும் நம்முடைய காதலைவிட மிகவும் அவசியமான விசேஷம் நேரிடாவிடில் உன்னை விட்டிருந்திருக்க மாட்டேன் என்பது உனக்குத் தெரியாதா? சங்கதியை அறிந்து கொள்ளாமல் இவ்விதம் பின் வாங்குவானேன்! எனக் பணிவுடன் சொன்னார்.

நீங்கள் சமூக முன்னேற்றத்தில் ஈடுபடாமல், பெண்களின் தொண்டில் ஈடுபடுவது இன்றல்லவோ எனக்குத் தெரிந்தது! ஐந்தும் இரண்டும் ஏழு என்பது உலக மறிந்ததுதானே! என்னு டைய செவிகளையே நான் நம்பாமல் உங்கள் கற்பனையை நம்பச் சொல்கிறீர்களா? கலியாணமாகி ஒரு வருஷத்திற்குள்ளாகவே நீங்கள் என்னை மறப்பது, காதல் முன்னேற்றத்தில் தடைப்பட்டது மன்றி, அதை நானும் காதாரக் கேட்க நேரிட்டதே! எனப் பெரு மூச்செறிந்தாள்.

'நீ சொல்வது எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே. உன்னை வஞ்சித்ததாக நீ நினைத்தாயானால் அது முற்றிலும் தவறு' என்றார் பிள்ளை.

'நானே அப் பழியை உங்கள்மீது சுமத்த வேண்டா மென்றாலும் உங்கள் தோற்றம் எல்லோரையும் அவ்வாறு செய்யச் சொல்லும். அதுவு மன்றி என் கண்கூடாகக் கண்டதை என்னை நம்ப வேண்டாமென்று சொன்னால் அது விந்தையிலும் விந்தையே' என்றாள் கனகம்.

அருகாமையி லிருந்த செடியில் சத்தம் கேட்கவே, இருவரும் அப் பக்கம் திரும்பிப் பார்த்தனர். ராமகிருஷ்ணன் வெட்கத்தால் தலை குனிந்தானாலும் தைரியத்தைக் கைவிடாது மெல்ல அவர்களை நோக்கி வந்தான். அவள் ஒளிந் திருந்த காரணத்தைப் பிள்ளையவர் கள் வினவுமுன், கனகம் இடைமறித்து, அவனை நோக்கி 'ராம கிருஷ்ணா, நீ நிரூபித்துக் காண்பித்ததை இவரிடம் சொல்ல எனக்கு



வாய்க் கூசுவதால் நீயே சொல்' என்றாள். ராமகிருஷ்ணன் செய்வது தோன்றாது திகைத்து நின்றான்.

ராமகிருஷ்ணன் தம்மைச் சென்ற நான்கு தினங்களாகக் கவனித்து வந்ததையும், கனகத்தை ஏமாற்றி வீராயின் குடிசை யண்டை கூட்டிக்கொண்டு வந்ததையும், அவன் வந்திருந்தபோது தானும், வீராயும் பேசிக்கொண் டிருக்க, அவள் கேட்க நேர்ந்ததை யும், அதைத் தப்பாக அவள் எண்ணிக் கொண்டதையும் உணர்ந்த தும் பிள்ளையவர்கள் தன்னையு மறந்து, விழுந்து விழுந்து சிரித்தார்.

கனகா! என்னே பெண் புத்தி! நீ இவ்வளவு விவேகியா யிருந் தும் இவ்வல்ப விஷயத்தில் பொறுமை கொண்டனையே! என்று சொல்லி வீராயின் வரலாற்றை விவரமாக உரைத்தார்.

தான் செய்த தவறை யறிந்த கனகம், ராமகிருஷ்ணனை வெறுத்து நோக்கினாள். இனித் தன் முகத்தில் அவன் என் றென்றும் விழிக்கலாகா தெனக் கடிந்துரைத்தாள்.

தனது கெட்ட எண்ணம் தன் நன்மதிப்பையே அழித்ததை உணர்ந்த ராமகிருஷ்ணன், பிள்ளையவர்களின் அடிபணிந்து, தான் அவருக்கிழைத்த தீங்கை மன்னிக்குமாறு வேண்டினன். பிள்ளை யவர்கள் அவனை மார்புறத் தழுவி, நீ செய்த நன்றிக்குப் பதிலாக உனக்கு, கனகத்தைவிடப் பன்மடங்கு சிறந்தவளான வீராயியை மண முடித்து வைக்கப் போகிறேன் என்றார்.

கனகத்தின் வேண்டுகோளால் வீராயி இவர்கள் வீட்டிற்கே கொண்டு வரப்பட்டாள். அன்புடன் அவர் கவனிக்கவே வீராயி அதிவிரைவில் குணமடைந்து முன்னிலும் அதிகமாகச் சோபித் தாள். வீராயின் அருங் குணம் ராமகிருஷ்ணனை அடிமையாக்கியது விந்தையோ!

ஆனி மாதத்தில் அவர்கள் திருமணத்திற்கு நாள் குறிப்பிட்டு, கலியாணம் சுகமே முடிந்தது.

---

நடேசன்:—ஒரு நாள் நாவிதன் கடையில்போய்ச் சேவிங் செய்துவிட்டு ஒரு அணா கொடுத்தான்.

நாவிதன்:—என்னாங்கோ நேற்று ஆறுமுகம் 2 அணா கொடுத் தார், நீங்கள் ஒரு அணா கொடுக்கிறீர்களே!

நடேசன்:—அவனுக்கு ஆறு முகம் ஆகையால் 2 அணா கொடுத்தான். எனக்கு ஒரு முகம்தான். 4 பைசா போக 8 பைசா மீதி கொடு.

—சி. கோபால்.

# 'போடப்பா இரண்டரை'

[கா. தி. ஸ்ரீ.]

இதென்ன சுத்தக் கர்னாடக நாடகக் கோமாளிப் பாட்டா. அல்லது குடிகாரன் கேட்கும் டிராம் அளவா. ஒரு வேளை, திருநாள் சந்தடியில் வகைப்பிரட்டாய் அகப்பட்டுக்கொண்டு வலியது மெலியது தெரியாமல் அறைபட்ட விமர்சனமா. இல்லை. இல்லை. அந்த ஏழரை நாட்டுச் சனியன் என்பார்களே அதைப்போன்று.... எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். என்போன்றவருக்கு எல்லாம் தகும்!

'நான், ஒருவரைபோல் அனாவசியமாய்ச் செலவு செய்பவனில்லை. ஏராளமாய்ப் பொருளுமில்லை. என்னைச் சுக்குச் செட்டு' என்றே சொல்லுவார்கள். சாமான்கள் பேரம் வாங்குவதிலோ, ஷாப்புச் சரக்கோ, பலசரக்கோ, ஜவுளி தினுசோ எதுவானாலும் ஒன்றுக்கு நான்கு கடைகள் விசாரித்தே சரசமான விலையில் முடிப்பேன். ஆகையால், பெரிய விசேஷங்களில் பஜாருக்கு என்னை இட்டுக்கொண்டே போவார்கள். எனக்கு வயதுகூடச் சொற்பமாயிருந்த போதிலும் நான் என்னமோ ஒரு சமர்த்துப் பேர்வழி என்பது இப் பக்கத்தில் பிரசித்தம்.

சித்திரை மாதம் சைத்ரோத்ஸவம். திருமாலிருஞ்சோலை கள்ளழகர் வைகையிலிறங்குவது வெகு விமரிசையல்லா! அதை ஒரு தடவைப் பார்த்துவிட்டு வரலாமென என மனது தூண்டியது. கையில் சுமார் நாலைந்து ரூபாய் சில்லரை. சாப்பாட்டைப்பற்றியோ கவலையில்லை. பின் என்ன, சுருக்கமாய்ச் செட்டாகச் செலவை ஒடுக்கிக்கொண்டு திரும்பிவிடுவது என்று தீர்மானித்தேன். நல்ல வேளையாக மூட்டை முடிச்சு ஒன்றுமில்லாமலே ஒரு துண்டு, ஒரு வேஷ்டி இரண்டையும் சுருட்டிக்கொண்டு கிளம்பினேன்.

நான் மதுரையில் 'இரயிலைவிட்டு இறங்கும்போது எலக்டிரிக் கடிகாரத்தில் மணி ஒன்றடித்து நாற்பது நிமிஷம். தூக்கம் கண்களை இருட்டிற்று; பாசஞ்சர் ஷெட்டில் ஜனங்கள் கால்மாடு தலைமாடாய்ப் படுத்து தூங்குகின்றனர். சற்று காப்பி வாங்கிச் சாப்பிட நினைத்து ஐயர்வாளைக் கூப்பிட்டேன். 'ஒரு அரைகப்—அரைகப்' கொடும்; சூடாயிருக்கா, என்றேன். அந்த மின்சார விளக்கின் ஒளியில் ஒருதரம் தூக்கிவிட்டு ஆற்றும்போது பேஷாயிருக்குமென்று எண்ணிக் கொண்டேன். ஒரு வீசம்படி போலுள்ளதைச் சப்பிக் குடித்து நாக்கையும் சுட்டு கொண்டபின் ஓரணாவை எடுத்துக் கொடுத்தேன். ஐயர் அதை மடியில் போட்டுக்கொண்டு கம்பியை நீட்டினார். 'ஓய், ஓய், பாக்கி எங்கே' என்றேன். என்னசார், ஒரு கப் அல்லவா, பாக்கி ஏது? என்றார்.



நான். 'அரை கப்தானே கேட்டேன்' என்றேன். 'ஒரு கப் கேட்டதாய் என் காதில் விழுந்தது, கொடுத்தேன்' என்று கூறி மறுபடியும் நடந்தார். 'ஓய், நான் இரண்டு தடவை, அரைகப், அரைகப் என்றேனே காதில் விழவில்லையா' என்று கூறிக்கொண்டே முன் சென்று வழி மறித்தேன்.

'என்ன, ஓய், கீய், அரையும் அரையும் ஒன்று. கணக்குச் சரிதானே. உம் இஷ்டம்போலவே வைத்துக்கொள்ளும். இரண்டு தடவை அரை எவ்வளவு ஆச்சு, சுத்தப் பட்டிக்காடு' எனக் கூச்சலிட்டுக்கொண்டே கிளம்பினார் ஐயர்.

சரிதான், இனி நம் பாச்சா பலிக்காது எனப் பேசாமல் அடிவயிற்றைத் தடவிக்கொண்டே வெளியேறினேன். போகும்போதே 'இவ்வூர் படுமோசக்கார ஊர் அப்பா, நாம் எதற்கும் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்' என யோசனை செய்துகொண்டே நடந்தேன்.

வழியில் ஒரு எலக்டிரிக் தீப ஸ்தம்பத்தினடியில் சுமார் முப்பது வயதுள்ள ஒரு பெண், சிறு கண்ணாடிகள், மண்யானை, பொம்மைகள், கில்க்கு, ஒரு டார்ச்லைட், சிறு ஜப்பான் தகரப் பெட்டிகள், பித்தான் முதலியன வைத்து விற்றுக்கொண்டிருந்தாள். நான் பாக்கெட்டிலிருந்த மணிபர்ஸ் கீழே விழாமலிருக்க ஒரு சேப்டி பின் வாங்கலாமா என்று நினைத்து நின்றேன். உடனே அவள் 'எந்தச் சாமான் எடுத்தாலும் காலணா' என்றாள். நான் ஆச்சரியத்துடன் காலணா கொடுத்து டார்ச்சைத் தூக்கப் போனேன். அதற்குள் அவள் தடுத்து சில சீட்டுச் சுருள்களைப் பெட்டியிலிருந்து எடுத்த பாவனையாகக் கொடுத்தாள். அந்த நான்கு சீட்டுகளில் ஒரு பாட்டரிலைட், ஒரு விநோலியா சோப், ஒரு தகரப்பெட்டி, ஒரு சேப்டி ரேசர் என எழுதியிருந்தது. அதன்படி அவைகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு கிளம்ப ஆரம்பித்தேன்.

'ஐயா, ஐயா—அது கட்டாது' இந்தாங்கோ எட்டணா—வாபஸ்—இது சின்ன செட், பெரிய செட் சீட்டுகள் இங்கே இருக்கின்றன. இதில் பன்னிரண்டு எடுங்கள். தேவையில்லை என்றால் வாபஸ் பண்ணலாம் என்றாள். அப்பொழுது எனக்கு உதவி செய்வதாய் எங்கிருந்தோ ஒருவன் வந்து சேர்ந்தான். 'சீட்டை எடுங்கள் சீக்கிரம். இரண்டு அரை ரூபாய்க் கொடுங்கள் பார்ப்போம். நல்ல சாமான் கிடைக்கும். சரியில்லாவிட்டால் வாபஸ் செய்யலாம். தைரியமாய்க் கொடுங்கள் சார் கொடுங்கள்' என்றான். அவன் சொன்ன மாதிரியில் மதிமயங்கித் திடீரென இரண்டரை ரூபாயைத் தூக்கிக் கொடுத்துவிட்டுச் சீட்டுக்களைப் பிரித்தேன்.

ஒரு பித்தான், ஒரு சேப்டி பின், ஒரு பென்சில் இவ்விதமாகத் தம்படிச் சாமான்களே அகப்பட்டன. அவைகளைப் போட்டுவிட்டுத் திரும்பவும் எடுத்தேன். அதிலும் ஒரு சிலேட்டுக் குச்சி, ஒரு பெப்பர்மின்ட், ஒரு தகரக் கண்ணாடி முதலியனவே இருந்தன. மறுபடியும் வாபஸ். மூன்றும் முறை பிரைஸ் பிரயோஜனமில்லை. இப்படியாக ஐந்து தடவை ஆயிற்று. முன் காலணாவில் கிடைத்த பாட்டிலேட் முதலியன எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டன. முகம் மூன்றும் பேஸ்து போலானது.

கடைசியில் வந்த உபயோக மற்றவைகளையும், வாபஸ் செய்து விட்டு 'இரண்டரை ரூபாய் கொடு' என்றேன். கூடவிருந்த சனீஸ்வரபகவான், 'போங்கள் ஐயா, சுத்த அதிர்ஷ்டம் கெட்டவர் சார், பணம் யாரேனும் திருப்பித் தருவார்களா. தாசிக்குச் சென்ற பணம் போலத்தான்' என்றான். மேலும், அவளை நோக்கி, 'அவர் தோற்றவர் வருத்தப் படுவார், ஏதேனும் ஒரு நல்ல சாமானைய் அந்தத் தகரப் பெட்டியைக் கொடு' எனச் சொல்லி ஒரு சிறு இரண்டணா மதிப்புள்ள தகரப் பெட்டியைத் தூக்கி என் மடியில் வைத்து, 'சிவனே என்று நடங்கள்' என்றுகூறி அப்பால் சென்றான்.

நான் என் தலைவிதியை நொந்துகொண்டு நாலாபக்கமும் திரும்பிப் பார்த்தவண்ணம் தடுமாற்றத்துடன் நடந்துகொண்டே போய் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு ஆலோசித்தேன். 'ஓஹோ இரண்டு அரை ரூபாய்க்கு இரண்டரை யல்லவோ கொடுத்து விட்டேன். காலணா சாமானில் வாபஸ் எட்டணாவைக்கூட வாங்கவில்லையே. அந்தப் பெண் காலணாச் சாமான் சீட்டுகளை வாங்கி வேறு பெட்டியிலல்லவா போட்டாள். ஒரு வேளை அந்த மனிதன் அவள் கணவனோ! அட ராமா திரும்பிப்போக ரயில் சார்ஜ்கூட இல்லையே—புலப்பம்—புலப்பம்—ஐயோ இரண்டரை—ஒரே புலப்பம்—இடையே ஒரு பாட்டு.

'காட்டிப் பறிக்கும் ஐயர் அம்மம்மாரே
காணாமல் பறிக்கும் கள்ளர் அழகர் நீரே
நாட்டில் நம்பி நலிந்தவர் அநேகம் பேரே
நாணாமல் நலமடைவ தென்னாள் ஐயாவே'

நீங்கள் யாரேனும் தப்பித் தவறி இங்கு வந்தால், தயவு செய்து என்னைக் கண்டு மனம் இறங்குவீர்களா புண்ணியவான்களே!

---

வாங்குபவர்:—இதுவரைக்கும் யாரும் 'பாடாத' பிளேட் வேண்டும்.

கடைக்காரன்:—பீங்கான் பிளேட் விற்பதில்லை.

—பி. வி. மோஹன்.

# பரமானந்தர் அல்லது குளவிக் கூட்டம்

[R. A. இராமன் B. A., R. A., இரங்கூன்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

## ஹைபோடெர்மிக் இன்ஜெக்ஷன்

காரிருளில் இரண்டு மோட்டார் எமன்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் துரத்திக்கொண்டே சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்தன.

'நம்மைப் பிடித்து விடுவார்கள் போலிருக்கே சார். காரைச் சற்றுத் துரிதமாய் விடுங்கள்' என்றான் முகுந்தன். வெங்கோபர் அப்போதுதான் கொஞ்சம் கவலைகொண்டார். தம்மைப்பற்றியும், முகுந்தனைப்பற்றியும் அவர் கவலைப்பட்டாரில்லை. பரமானந்தர், தீனதாரிணி இருவர் கதியும் என்ன! முகுந்தனைத் தம்முடைய சீட்டுக்கு வரச் சமிக்ஞை செய்தார். 'முகுந்தா! நீ காரை விடு நான் மற்றக் காரியத்தைப் பார்த்துக் கொள்கிறேன்' என்று கூறிக் கொண்டே காரின் பிடியை அவனிடம் கொடுத்தார். அடுத்த நிமிடம் காரின் டாப்பின் மீது ஏறினார் வெங்கோபர். காரின் தலை பக்கம் காலை நீட்டிக்கொண்டு, பின்பு துரத்திவரும் காரைக் கவனித்தவண்ணம் கார் டாப்பின் மேலேயே படுத்துக் கொண்டார். முன்பாகவே முகுந்தனிடம் ஏதோ இரகசியமாகச் சிலது கூறியிருந்தார். அதன் பிரகாரம் மோட்டார் சற்று மெதுவாகச் சென்றது. பின்னேவரும் மோட்டாரோ அதே வேகத்துடன் வருகிறது. வெங்கோபர் சரியாகக் குறி வைத்துப் பின்னால்வரும் மோட்டாரின் முன் பக்க டயர்களைப் பார்த்து இரு முறை சுட்டான். பின்னால் வரும் காரில் ஒருவனும் இதே மாதிரி முன்னால் ஓடும் மோட்டாரின் பின் பக்க டயர்களை இரு முறை சுட்டு மூன்று முறை வெங்கோபரை நோக்கியும் சுட்டான்.

ஆனால், வெங்கோபர் இதற்குத் தப்பினார். வெங்கோபர் சுட்டதால் பின்னால் வந்த காரின் டயர் வெடித்துத் திசை தப்பி நின்றது. அக் கார் மறு முறை சுட்டபின்பு 'ஓட்டு சீக்கிரம், இப்பொழுது தப்பினால் தான் முடியும்' என்று கூறிக்கொண்டே பின்னால் வந்த காரைக் கவனித்தார். அந்த வண்டி ஒரு கால்வாயில் விழுந்திருந்தது. தப்பித்தோம், பிழைத்தோமென்றும் முகுந்தன் வேகமாகக் காரைவிட்டான். சில மைல்கள் சென்றபின், வழி சரியாகத் தெரியாததால் காரை ஒரு சிறிது மெதுவாக விடவேண்டி நேர்ந்தது. மீண்டும் காரை வெங்கோபர் ஓட்ட ஆரம்பித்தார். கார் சென்னையை அணுகவும், மீண்டும் முகுந்தன் காரை ஓட்ட ஏற்றுக் கொண்டான்.

வெங்கோபர் பின்சீட்டை அடைந்து, பரமானந்தருடன் பேச ஆரம்பித்தார்.

'அந்தப் படுபாவிகள் மயக்க மருந்து கொடுத்து விட்டார்கள்! கடவுளே என் மகள் சொஸ்த மடைய வேண்டுமே. டாக்டருக்கு பிடிபட வேண்டுமே இந்த வியாதி' எனப் பிரலாபித்தார் பரமானந்தர். வெங்கோபர் அவரை உற்சாகப்படுத்த வேண்டிக் கவலைப்பட வேண்டாம் சார்! போலீசு லாகாவில் பெரிய டாக்டர்கள் இருக்கிறார்கள். சொஸ்தமாகி விடும்' என்று தைரியம் கூறிக்கொண் டிருந்தார்.

'வெங்கோபரே! நீங்கள் என்ன அறிவீர்கள்! இவர்கள் சங்கத்தின் மர்மம் எனக்கல்லவோ தெரியும். இதை நாம் வேரோடு அகற்று விட்டால் சென்னையிலேயும் இவர்கள் சங்கம் நிரந்தரமாக ஸ்தாபிதமாகிவிடும்' எனப் பரிதாபகரமான குரலில் கூறினார் பரமானந்தர்.

'நம்மா லானவற்றைச் செய்வோம். இதுவரை எல்லாம் சரியாகவே நடந்து வருகிறது. அது கிடக்கட்டும். சார் நேராக கமிஷனர் ஆபீசுக்குப் போவதில் உங்களுக்கு ஆட்க்ஷேபனை இல்லையே' என வெங்கோபர் வினவ, 'என்னைப்பற்றி ஒன்றுமில்லை. ஆனால், தீனதாரிணியோ' எனக் கேட்டார் பரமானந்தர்.

'அதற்கென்றேதான் அங்கே போவது. தகுந்த டாக்டர்கள் அங்கேதான் கிடைப்பார்கள்'

எல்லோரும் போலீசு லாகாவை அடைந்தனர். தீனதாரிணி உள்ளே தூக்கிச் செல்லப்பட்டாள். வெங்கோபரையும், அவரைப் போன்றே உடை அணிந்திருந்த முகுந்தனையும் கண்ட பராங்குசத்துக்கு உண்மை வெங்கோபரைக் கண்டு கொள்ள முடியவில்லை.

'என்ன! இன்ஸ்பெக்டர்' என்று சிரித்த வண்ணம் வெங்கோபர் மற்றிருவரையும் பராங்குசத்துக்கு அறிமுகமாக்கி வைத்து 'பிள்ளைவாள்! இங்கே நேராக வந்ததன் காரணம் முதலில் தீனதாரிணி பரமானந்தரின் புத்திரியின் அசௌக்யத்தைச் சீக்கிரத்தில் கவனிப்பதற்கே. நம் ஆபீசு டாக்டர்களை வரவழையுங்கள்' என்றார் வெங்கோபர்.

அடுத்த அறையில் இரு டாக்டர்கள் இருக்கிறார்கள். மாதவன் கூட இருக்கிறான் எனப் பகர்ந்தார் பராங்குசம்.

'என்ன! மாதவனா! என்ன தகவல் என்ன உடம்பு' வெங்கோபரின் உள்ள மகிழ்ச்சி புன்னகை யெல்லாம் பறந்தது. எல்லாம் கூடிவரும் சமயத்தில் மாதவன் அங்கு இருப்பதும் இரு டாக்டர் கூட இருப்பதும்,



'இல்லை சார் மாதவனுக்கு ஒன்றுமில்லை. அவன் தன்கூட தேவிசரணரைக் கூட்டிவந்தான். தீனதாரிணிக்குக் கண்டிருப்பது போல அவருக்கும் மயக்கம் கண்டிருக்கிறது' என்றார் பராங்குசம்.

வெங்கோபரின் கவனம் மீண்டும் தீனதாரிணியின் மேல் சென்றது. மெல்லிய கருந்த கூந்தல் அடர்ந்த மான்விழியாள் என விளங்கும் அழகு வாய்ந்த அந்நங்கை நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் சமயத்திலும் வெகு தெளிந்த பார்வையுடனும் வசீகரத்துடனும் விளங்கினாள். இவ்வளவு தூரம் சிரமப்பட்டபின் சதிகாரர்களிடமிருந்து தப்புவித்த பின்பும், அவளுடைய உடம்பைச் சோதித்துத் தேற்றுமுன்பாக! அவள் இறந்துபட்டால்'

பராங்குசம் எதிரேயுள்ள ஒரு அறையின் கதவைத் திறந்து உள்ளே நுழையும் சமயம் அதே தருணம் விஷ வைத்தியத்தில் நிபுணரான டாக்டர் கோபிநாத் வெளியே வந்து, தலையை அசைத்த வண்ணம் 'எல்லாம் கடந்தாய்விட்டது; இதற்கு மருந்தேயில்லை. பிழைக்க மாட்டார்' என்று கூறிவிட்டார். அடுத்த நிமிடம் அவருடைய பார்வை தீனதாரிணியின்மீது விழுந்தது 'மற்றொரு விபத்தா' என்று கூறியவண்ணம் தீனதாரிணியை நெருங்கிய கோபிநாதிடம் ஏதோ சிலதை ரகசியமாகப் பேசினார் பராங்குசம்.

டாக்டர் கோபிநாத்தைபற்றி மற்றிருவர் வெளிவந்தனர். ஒருவர் சர்ஜன் லக்ஷ்மண சர்மா. சென்னையிலேயே டாக்டர் கோபிநாத்துக்கு அடுத்து விஷ வைத்தியத்தில் கைதேர்ந்தவர் சர்ஜன் சர்மா என்பது சென்னை முழுவதும் பிரசித்தம். மற்றவன் மாதவன் ஒருமுறை புனைவேட முகுந்தனை முறைத்து பார்த்தவண்ணம் மறுவினாடி வெங்கோபரைக் கண்டு கொண்டவனாய் அவரை அணுகினான். சில நிமிடங்களில் இருவரும் தாம்தாம் செய்தவற்றைக் கூறிக்கொண்டனர். மாதவன் தான் செய்தவற்றைக் கூறிக்கொண்டனர். மாதவன் தான் செய்தவற்றைக் கூறும் தருணம், டாக்டர்கள் இருவரும் தீனதாரிணியைப் பரீக்ஷை செய்தனர். 'அதே போன்றுதான் இந்தியாவிலே எந்த டாக்டராலேயும் சொஸ்தப்படுத்த முடியாது.'

'ஐயோ! அப்படிச் சொல்லாதீர்கள் டாக்டர், எப்படியாவது இவர்கள் பிழைக்கக்கூடும் வழியைச் சொல்லுங்கள்' என அவர்களைக் கெஞ்சி கேட்டுக் கொண்டார் பரமானந்தர்.

'ஆம் ஒரு வழி யுண்டு. இது விஷம் வைக்கப்பட்டதுதான். இதில் சில குறிகள் காணப்படுகின்றன. இதே குறி கண்டுள்ள சில விஷ கேசுகள் பர்மாவில் குணப்பட்டு வருகின்றன. இந்த முறை இங்கே இன்னும் தெரிய வரவில்லை. பர்மாவிலே [illegible]கைய சிகிச்சை தெரிந்தவன் டாக்டர் லின் [illegible] ஏன் [illegible] என்று கேள்வி' என்றார் கோபிநாத்.

தமிழ்நாடு [illegible] நூலகம்
202866
Chennai-600 008
[illegible]

‘என்ன! பர்மாவி லிருக்கும் டாக்டர் ஸின்டன்பாவா?’ என ஆச்சரியத்துடன் கூவினார் வெங்கோபர்.

‘ஆம். அப்படியே, நீங்கள் கேட்பதைப் பார்த்தால் உங்களுக்கு அவரைத் தெரிந்திருக்கும்போ லிருக்கிறதே’ என ஆச்சரியமுற்றவராய்க் கேட்டார் கோபிநாத்.

‘ஆம். தெரியும். எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறேன். முதலில் பரமானந்தர் ஆரம்பிக்கட்டும்’ என வெங்கோபர் கூறவே, பரமானந்தர் ஆரம்பித்தார்.

ஆம். ஸின்டன்பாவை நான் நன்று யறிவேன். அவன் குளவிச் சங்கத்தைச் சேர்ந்தவன். அவனே இதைச் செய்திருக்கிறான். இத்தனை காலமாக நான் அவர்களுடன் போராடி அவர்களைத் துரத்தியடித்தது எனக்கே துன்பம் விளைத்தது. ஆனாலும், இப்பொழுதும் நான் அவனை அடக்கியே தீருவேன்’ எனக் கர்ஜித்தார் பரமானந்தர்.

ஒரே ஒரு புதல்வி, செல்வமாக வளர்க்கப்பட்டவள். சிறு வயதிலேயே தாயைப் பரிகொடுத்தவள், கட்டழகி, இத்தகையதோர் செல்வி இச்சமயம் விஷம் வைக்கப்பட்டு இறக்கும் தருவாயில் இருந்தால் எந்தத் தந்தையின் மனம்தான் சாந்தமா யிருக்கும்.

‘பரமானந்தர்! பதறாதேயுங்கள். எதையும் யோசித்து செய்வோம். ஏன் டாக்டர், இவ்விருவர் தேக நிலையும் ஒன்று இரண்டு மணிகளுக்குள் ஆபத்து ஒன்றும் நேரிடாதே? இதற்கு ஏற்ற மருந்து ஒன்று கிடைத்தால் அப்போது இவர்கள் பிழைக்க வழி உண்டோ. பார்த்துச் சொல்லுங்கள்’ என வினவினார் வெங்கோபர்.

அதற்கு டாக்டர் கோபிநாத், ‘இந்தவிதம் விஷம் வைக்கப்பட்டவர்கள் இரண்டு மூன்று வாரங்கள்கூட உயிரோடிருப்பார்கள்’ என்றார்.

‘நல்லது டாக்டர், இப்போது பரமானந்தர் விவரமாக வாக்குமூலம் கொடுப்பார். எல்லோரும் அதை கேட்க வேண்டும்’ என்று கூறிப் பரமானந்தரை நோக்கினார். பராங்குசம் ஒரு நோட் புத்தகத்தை எடுத்துக்கொண்டு எல்லாவற்றையும் எழுதிக்கொள்ளத் தயாராக யிருந்தார்.

‘நண்பர்களே! எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் நான் உங்களுக்குக் கூறுவது எனக்கே தீமையை விளைவிக்கலாம். குளவிச் சங்கத்தார் அவ்வளவு கொடிய கிராதகர்கள். நான் பர்மாவி லிருக்கும்போது இக்கூட்டத்தை எதிர்த்து நின்றதுண்டு. அச்சமயம் மிகத் திடுக்கிடும்படியான பல கொடிய செயல்களை நான் பார்த்திருக்கிறேன். அச்சமயம் இக்கூட்டத்தாருக்கு விரோதமாக எனக்கு உதவிபுரிய வந்த பலர், இவர்கள் கையால் கொலையுண்டனர். நான்



சென்னைக்குப் பயணமாகும் அதே சமயம் என்னையும் இவர்கள் பயமுறுத்தினார்கள். அச்சமயம் இந்தக் குளவிச் சங்கத்தில் பல வருஷங்களுக்கு முன் ஒரு அங்கத்தினனாய் இருந்து பின்பு அதிருஷ்ட வசத்தால் இச்சங்கத்தாரின் கொடிய செயல்களை வெறுத்து, இச்சங்கத்தார் அவனுடைய அந்தரங்கக் கருத்தை அறிந்தவர்களாய்ப் பலமுறை இவனைக் கொல்லப் பிரயத்தனப்பட்டும் முடியாமல், கடைசியாக இவனுடைய மனைவியை மாத்திரம் தூக்கி ஓடிவிட்டார்கள். ஆகவே, தரம்தாஸ் லாலா என்னுடைய நண்பனாய் மாறினான். அவனுடைய ஒரே விருப்பம் என்னவென்றால் இக் குளவிச்சங்கத்தாரைத் தொலைத்து விடுவதே. இவனுடைய உதவியைக் கொண்டே நான் சென்னையை அடைந்தேன். தரம்தாஸ் எனக்கு எந்தச் சமயத்திலும் உதவிபுரிய ஒப்புக்கொண்டான். அவன்தான் இந்த முறையும் இக் குளவிச்சங்கத்தார் என்னை ஒரே அடியாகத் தொலைத்துவிடவும், இந்தியாவிலும் தங்களுடைய ஸ்தாபனங்களை ஏற்படுத்தவும் உத்தேசித்திருந்ததை எனக்கு அறிவித்தது. நானும் தரம்தாஸும் இரண்டு வாரங்களாக இவர்கள் சூழ்ச்சியைக் கண்டறிந்து இவர்களை எதிர்த்து வேரோடு தொலைத்துவிடத் தீர்மானித்திருந்தோம். அதற்கு வேண்டிய சூழ்ச்சிகளை நாங்கள் யோசித்து வந்தோம். வெளியுலகத்துக்குத் தரம்தாஸ் லாலா இறந்தவனாக மதிக்கப்பட்டான். இக் குளவிச் சங்கத்தாருக்கு இவ்வுண்மை தெரியாது. என்னைப்பற்றியவரை இவர்களுடைய சூழ்ச்சி யெல்லாம் என் சொத்தை அபகரித்து, என்னை ஓட்டாண்டி ஆக்குவதே. தரம்தாஸ் இவர்களை நன்கு அறிந் திருந்தபடியால் நாங்கள் இருவரும் இக் கூட்டத்தாரை ஒழிக்க ஒரு சூழ்ச்சியை ஆலோசித்து வைத்திருந்தோம். நாங்கள் குறிப்பிட்டு வைத்திருந்த ஒரு நாளைக்கு நாங்கள் ஒருவருடைய உடையை மற்றொருவர் மாற்றிக்கொள்ள வேண்டியது. அதே சமயம் நான் தரம்தாஸ் வேடத்துடன் வெங்கோபரை அணுகி அவருடைய உதவியையும், அவர் மூலம் போலீசார் உதவியையும் நாட வேண்டியது. ஆனால், இவ்வளவு சீக்கிரத்தில் முதலிலேயே அவர்கள் கொலை புரிய துணிந்திருப்பார்கள் என்று நாங்கள் எண்ண வில்லை. அவர்கள் மாத்திரம் அன்று கொலை புரிந்திராவிட்டால் மறுநாளே அவர்களைக் கைது செய்யப் போதிய சாக்ஷியங்களை நாங்கள் தயார் செய்து வைத்திருந்தோம். ஆனால், நாங்கள் யோசித்துக் குறி வைத்திருந்த சில மணிகளுக்கு முன்பாகவே அவர்கள் தங்கள் வேலையை ஆரம்பித்துவிட்டார்கள். முதலில் பென்னட் ஹால் டான்ஸுக்குச் சென்ற தினதாரிணி மறைந்தாள். தரம்தாஸ் இதனை உடனே அறிந்தான். தேவிசரணரிடம் இதைக் கூறி சில முக்கியமானவைகளைத் தயார் செய்து வைத்திருந்தேன். தேவிசரணர் சென்ற பின்தான் தரம்தாஸ் என்னிருப்பிடத்துக்கு வெகு இரகசியமாக வரவும், நாங்கள் முன்பே யோசித்தவாறு ஒருவருடைய

உடையை ஒருவர் மாற்றிக்கொண்டு மற்றும் தோற்றத்தையும் ஏற்றவாறு மாற்றிக்கொண்டோம்........'

அதே சமயம் யாரோ ஒருவன் வெளிக் கதவைத் தட்டும் சப்தம் கேட்கவே, பரமானந்தர் பேச்சை நிறுத்தினர். பராங்குசம் கதவைத் திறந்து அங்கு ஓர் சேவகன் நிற்பதைக் கண்டு என்ன சமாசார மென்று வினவினர். அச் சேவகன் 'இதோ பாருங்கோ! சார்! இந்தக் கடிதாசியை யாரோ ஒருவன் அவசரமாகப் பரமானந்தர் என்ற ஒருவரிடம் கொடுக்க வேணும்முனு சொல்லி கொடுத்துட்டு போனுங்கோ. இந்த மனுஷ்யரு இங்கேதான் இருக்காருன்னு சொன்னரு அந்த ஆளு' என்று கூறிக்கொண்டே ஒரு கடிதத்தை அளித்தான் பராங்குசத்திடம்.

பரமானந்தரிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தார் இன்ஸ்பெக்டர். கடிதத்தைப் படித்த பரமானந்தர் வெகு நடுக்கத்துடன் அதைத் திருப்பி இன்ஸ்பெக்டரிடம் அளித்தார். அச்சமயம் பரமானந்தரைப் பார்த்தவர்கள் அவர் ஏதோ பெரிதும் ஏமாற்ற மடைந்தவர்போல் காணப்பட்டார் என்றே அறியக்கூடும்.

அழகிய சிவந்த லெட்டர் பேபரில் கடிதம் முழுவதும் நீர் குறியால் கருத்த உடலுடன் கூடிய ஒரு குளவியின் உருவம் பல கால்களுடன் வரையப் பெற்றிருந்தது. கடிதத்தில் ஆங்கிலத்தில் சில வரிகள் எழுதப்பட்டிருந்தன. அதில் கண்டது பின்வருமாறு:—

நண்பரே !

நீங்கள் இறப்பது நிச்சயம். தப்பித்துக் கொள்வது முடியாத காரியம். இக் கடிதம் கிடைத்த 6 மணி நேரத்துக்குள் நீங்கள் எங்களிடம் வந்து சேர்ந்தால் இன்னமும் உமது குமாரியும் தேவி சரளாவும் பிழைக்கக்கூடும். இல்லாவிட்டால் இறப்பது நிச்சயம். வேண்டுமானல் டாக்டர் மதுரானாத் வீட்டுக்கு வரவும்.

'நானும் கூட வரலாமா' என வினவினர் வெங்கோபர்.

'ஆகா! ஆனல், இப்போது நான் சொல்கிறபடியே நீங்கள் நடக்க வேண்டும். அக் கொடியவர்கள் சொன்னசொல் தவற மாட்டார்கள்' என்றார் பரமானந்தர்.

பராங்குசம் பரபரப்புடன் இச்சமயம் அந்த மாளிகையை முழுதும் சோதனையிட வேண்டும். கூட சில துப்பறி இலாகா உத்யோகஸ்தர்களையும் அழைத்துப் போவோம். மற்றும் ஆவடி மோகன மாளிகை' எனக் கூறி முடிக்கு முன் பரமானந்தர்,

'இன்ஸ்பெக்டர்வாள்! பதறாதீர்கள். இவர்களின் சூழ்ச்சியைப் பூராவும் நீங்கள் அறிய மாட்டீர்கள்' என்றார்.



தற்பெருமை கொண்ட பராங்குசம் 'என்ன வெங்கோபரே! நாம் என்ன பர்மாவிலா இருக்கிறோம் இவ்வாறு பயப்பட. இன்னும் யோசித்துப் பார்த்தால் நாம் இருவரும் போய்க் காரியத்தை முடித்து வரலாம். பரமானந்தர் இங்கேயே இருக்கட்டும்' என்றார்.

வெங்கோபர் நாற்காலியை விட்டு எழுந்து யோசனை செய்தவராய் உலாவ ஆரம்பித்தார். யாவரும் வெங்கோபர் சொல்லப் போவதையே எதிர்பார்த்தனர். வெங்கோபர் மௌனத்தைக் கலைத்தார்.

'நண்பரே! மதுரானாத் வீட்டைப் பரிசோதனை இட இது சமயமல்ல. இப்போது நான் பரமானந்தரைக் கொலைக் குற்றத்துக்காக நான் கைது செய்யப் போகிறேன். தரம்தாஸின் கொலையில் சம்பந்தப்பட்டதாகக் கைது செய்யுங்கள். காலையில் வெளிவரும் நாளை பத்திரிகைகளிலெல்லாம் இது அச்சிடப்பட்டிருக்க வேண்டும். இவ் விஷயம் தக்க ஆதாரங்களுடன் கமிஷனர் ஆபீசு மூலம் கிடைத்ததாகப் பத்திரிகைகளில் கண்டிருக்க வேண்டும். அவ்வளவு தான் பரமானந்தரைப் பற்றியவரை' எனக் கூறி முடித்தார் வெங்கோபர். (தொடரும்)

---

போட்டோ பிடித்துக் கொண்டவர்:—ஏன் ஸார்! நீங்கள் சொன்னதெல்லாம் முற்றும் பொய்யாக விருக்கிறதே?

போட்டோ பிடிப்பவர்:—அப்படி என்ன? படம் கறுப்பாயிருக்கா! அன்றி முற்றும் வெண்மையா யிருக்கா?

போட்டோ பிடித்துக் கொண்டவர்:—அப்படி யில்லை! 'அப்படியே' போட்டோவில் இருக்கும் என்று சொன்னீரே அது பொய் தானே? நான் அன்று 'செண்ட்டு' போட்டுக்கொண் டிருந்தேன். படத்தில் ஒருவித வாசனையும் காணும்? நான் கட்டியிருந்த கைக் கடியாரம் புதியது; படம் பிடிக்கும்போது நடந்துகொண் டிருந்தது.

—C. M. உத்திராபதி.

கணவன்:—(தன் மனைவியைப் பார்த்து) கண்ணே உனக்கு என்னென்ன மாதிரி சேலைகளெல்லாம் வாங்கித் தரனுமென்று எனக்கு ஆசை இருக்கிறது தெரியுமா? ஆனா........

மனைவி:—ஆனல் என்ன? அந்த ஜவுளிக் கடைக்காரனெல்லாம் தங்களுக்குச் சும்மா அழமாட்டேன் என்கிறானே என்றுதான் வருத்தமா இருக்கிறது. —எஸ். எஸ். கே. இப்ராஹிம் பீர்மகம்மது.

தாயார்:—டேய் சும்மா விளையாடிக்கொண்டே யிருக்கிறயே, குளிக்க வாடா. வெந்நீர் ஆறிப்போகிறது.

பையன்:—இப்பொழுது வரமுடியாது. வென்னீர் ஆறினல் பிளாஸ்கில் கொட்டிவை அம்மா. —N. R. தேவநாதன்.

# ‘உத்தமத் தோழன்’

[சேன்]

குமாரின் பாட்டன் ஓர் கோடீஸ்வரன். அன்று பிறந்த குழந்தைகளுக்குக்கூட அவர்களின் குடும்பத்தைத் தெரியும். அதற்குக் காரணம் அவர்கள் மிதமிஞ்சி செய்த தருமமே. தர்மத்தினால் குறைந்தது செல்வம். குறையாதது பேரும் புகழும். ‘தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை’ என்பார்களே அது போலவே குமாரும். இல்லை யென்று அவன் சொல்லி யறியான். தன் உயிரைக்கூடப் பிறருக்கென்றே வைத்திருப்பவ னென்று சொல்லலாம்.

தர்மத்தினால் அவர்கள் குடும்பம் தேய்பிறை சந்திரனாயிற்று. நாளை யென்பது அவர்களுக்குக் கிடையாது. கண்ணுக் கெட்டின வரையி லிருந்த நஞ்சையும் புஞ்சையும் கூப்பிடு தூரத்திற்கு வந்து, கடைசியில் அதுவும் பூஜ்யமாயிற்று. அப்பொழுதாவது புத்தி வந்ததா? அது ஏன் வருகிறது. ஹிமயம் முதல் கன்யாகுமரிவரை அக் குடும்பத்தின் பெயர் பரவி நின்றதற்குத் தர்மமே காரணம்.

பேரும் புகழும் பெருத்தது. கடன் பலுத்தது. கடனைக் கட்ட வழி யுண்டா? நினைவுண்டா? தர்மவானின் குடும்பத்தின்மேல் இறக்கம் கொண்ட மனிதனுண்டா? அவர்களை அண்டிப் பிழைத்த ஆண்டிகள் அரசனாகததுண்டா? ஆனால், உலகமே நன்றி கெட்டது என்று இன்னும் குமார் அறிந்து கொள்ளவில்லை. அதிகமாகச் சொல்வானேன்! அவன் கொடையில் கர்ணனே.

வர்மா ஒரு லோபியின் மகன். பணத்தின் கஷ்டம் தெரிந்தவன். செல்வோம் என்னும் தன்மையை உடைய செல்வத்தை, தன்னை விட்டுச் செல்லாதபடி வைத்துக் கொண்டவன். அது அவனது பிதுர் ராஜிதம். அவனை, எச்சல் கையால்கூட காகத்தை ஓட்ட மாட்டானென்று ஜனங்கள் கூறுவது தவறு. அவனது வேதாந்த மெல்லாம் எச்சல் கையால் காக்கையை விரட்டுவது பாப மென்பதே. இனம் இனத்தைச் சேரு மென்பார்கள். ஆனால், அதற்கு நேர் விரோதமாக வர்மா குமாருடன் நெடுநாளாகப் பழகி வந்தான். பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெரும் என்பார்கள். ஆனால், வர்மா வுடன் சேர்ந்த குமார் லோபியாகவில்லை. குமாருடன் சேர்ந்த வர்மாவும் தர்மிஷ்டனாகவில்லை. ‘சங்கு சுட்டாலும் வெண்மை தரும்’ என்பதுபோல் அவரவர்கள் குணம் அவரவர்களைவிட்டு நீங்கவில்லை. குமாரும் வர்மாவும் ஒரே வயது. அத்யந்த நண்பர்கள். இணை பிரியாத் தோழர்கள்.

சாந்தாவைக் கண்டால் கண்ணைக் கூசச் செய்யும். மனதைக் கலங்கச் செய்யும். அந்த வடிவழகி சாந்தாவை மணந்து கொண்ட



வன் உண்மையில் ஓர் அதிர்ஷ்டக்காரன்தான். அவன் வேறு யாரு மல்ல. குமார்தான். குமாரின் முன்னோர்களும், குமாரும் செய்த தர்மத்திற்கு ஈடாகத்தான் கடவுள், அவனுக்கு ஒப்பிட வேறொரு பொருளையும் படைக்காமல் அவளைக் குமாருக்குப் பரிசாக வழங்கினார் போலும். ஆனால், வர்மாவின் மனைவியோ இறந்த நெருப்பின் நிறத்தாள். சீமானின் புதல்வி. ரொம்ப செட்டுக்காரியங்கூட. பெயர் சிக்கம்மாள். வர்மா அந்த அழகு சுந்தரியைக் கலியாணம் செய்து கொள்ள மறுக்காததற்குக் காரணம் ‘சீர் வரிசைகள்’ தான். அவளது அப்பனும் ஓர் லோபிதான். ஆனால், அவர் தன் ஏகபுத்திரியின் விஷயத்திலே வயசு நான்கை குறைத்துச் சொன்னதைத் தவிர வேறொரு லோபித்தனமும் செய்ததாகக் கூற முடியாது. சிக்கம்மாள் குணத்தில் நல்லவள்தான். ரொம்ப கறார் பேர்வழி. அவளது கொள்கை ‘வெட்டு ஒன்று துண்டு இரண்டு’.

* * *

மாலையின் மந்தமாருதம் வெகு மனோகரமா யிருந்தது. கதிரவன் தன் பொன்னொளியை வித்தியாசமின்றிக் கூரை வீடுகளின் மீதும், கோபுரத்தின் மீதும் பரப்பிக்கொண் டிருந்தான். அந்த முதிர்ந்த மாலையில் வேலையால் மேனி நொந்தவனைப்போல் குமார் தன் நண்பன் அகத்தை நோக்கி நடந்தான். வாடிய மலரேபோல் அவன் முகம் இருந்தது. வயலிலே நூற்றுக் கணக்கான ஆடவர்களும் ஸ்திரீகளும் வேலை செய்துகொண் டிருந்தனர். அவர்களைக் கண் காணித்துக்கொண் டிருந்தான் வர்மா, ஒரு கால் ஒடிந்த கட்டிலில் உட்கார்ந்து கொண்டு.

‘வாப்பா குமார்! இப்படி உட்கார்! என்ன இன்றைக்கு ஒரு மாதிரியாக இருக்கிறாய்’ என்றான் வர்மா.

‘ஆம். ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறேன். உன்னை நம்பித்தான் வந்திருக்கிறேன். எனக்கு அவசரமாக இருபதினாயிரம் ரூபாய் வேண்டும். இல்லை யென்று சொல்லப்படாது!’ என்றான் குமார்.

வர்மா:—இருபதினாயிரமா? எத்தனை நாள் வாய்தாவிற்கு?

குமார்:—அதிக மில்லை. அடுத்த ஞாயிற்றுக்கிழமை தந்து விடுகிறேன்.

வர்மா:—குமார்! மனிதனைப் பொல்லாதவனாக்குவது பணம் தான். ஆகவே, பணம் பொல்லாதது. அது விஷயத்தில் நான் எப்பொழுதுமே சர்வ ஜாக்கிரதையாக இருப்பேன். உனக்கு எதற்காகப் பணம் இப்பொழுது?

குமார்:—எனது நண்பன் ஒருவன் சேலத்தில் பெரிய மளிகைக் கடை ஒன்று வைத்திருந்தான். வியாபார மந்தத்தினால் எதிர்பாராத நஷ்டமாய் விட்டதாம். அதை ஈடுசெய்வதற்காகவே நான் பணம் அனுப்புவதாக வாக்களித்து விட்டேன். நான் பணம் அனுப்பி விட்டால், அவன் தற்கொலை செய்து இறந்து விடுவான். ஐ. பி. கொடுக்கிற நிலைமையில் வந்துவிட்டான்.

வர்மா:—யார்? அந்த இராஜ ரத்தினம்தானே!

குமார்:—ஆம். அவன்தான். ரொம்ப நல்லவன். ஆட்களை நம்பி மோசம் போய்விட்டான். பாவம்!

வர்மா:—என்ன குமார்! அவனா ஏமாந்து போகிறவன்? சொத்தையெல்லாம் தன் மனைவியின் பேரில் ஏற்கெனவே எழுதி வைத்துவிட்டான். ஐ. பி. கொடுத்து, இருக்கிறவர்கள் வாயில் மண்ணைப் போடலாமென்ற யோசனையுடன்தான் அவன் கடை வைத்ததே. என்னமோ அப்பா! நீ கேட்கிறாய். நான் இல்லையென்று சொல்ல வில்லை. ஆனால், உனக்காக வட்டியைமட்டிலும் குறைத்து விடுகிறேன். நாளை மாலை வா! அவசியம் தருகிறேன். வட்டியை வழக்கப் பிரகாரம் முன்னதாகக் கொடுத்துவிடு. வட்டி அதிகமில்லை. நூறு ரூபாய்தான்.

குமார்:—'ரொம்ப சந்தோஷம். அப்படியானால் நான் வரட்டுமா?' என்று கூறிச் சென்றான். அவனைப் பார்த்து நகைப்பது போலிருந்தது கதிரவன். நூறு ரூபாய்தானா தர்மராஜனாகிய குமாருக்குக் கிடைக்காது.

* * *

அரபிக் கடலினுள் குதித்த ஆதித்தவன் வங்காளக்குடாக் கடலில் தன் தலையை நீட்டினான். குமார் நூறு ரூபாய்க்காக வெளியே கிளம்பினான். தன்னைப்போலவே எல்லோரும் ஆய்விட்டனரோ என ஐயமுற்றான். அவன் போகாத இடமில்லை. கேட்காத ஆளில்லை. நூறு ரூபாய்க்கு அக் கிராமத்தவர்கள் அவனை மதிக்க வில்லை. நூறு சல்லி—அதில் ஓட்டின தூசிகூட அவனுக்குக் கிடைக்க வில்லை.

மறுநாட் காலையில் வெறுங் கையுடன் அவன் வர்மாவிடம் சென்றான். 'குமார்! நீ நூறு ரூபாய்ப் பெறாதவனாய் விட்டால் நூறு ரூபாய்க்கு மதிக்காத உன்னை நான் எப்படி நம்பி ரூபாய் 2500 தருவது. ஆனால், நான் உன் நண்பன். நீ மோசம் செய்யமாட்டாயென்று எனக்குத் தெரியும். மற்றும் நீ உலகத்தை அறியாதவன். இதோ நீ விரும்பும் தொகை. ஆனால், ஒரு நிபந்தனையின்மேல் தருகிறேன். ஒரு வார வாய்தா கேட்டாய். ஒருமாத வாய்தா



கொடுக்கிறேன். இந்த முப்பதாம் நாள் நீ அவசியம் பணத்துடன் வரவேண்டியது. தவறினால் உன் மனைவி சாந்தா என் வீட்டிற்கு வந்துவிட வேண்டும். அவள் அந்த பணத்திற்கு ஈடு, தெரிந்ததா?' என்றான் வர்மா.

அந்த வார்த்தைகளைக்கேட்ட குமார் திடுக்கிட்டான். நிலத்தில் கொட்டியது அவன் கண்களிலிருந்து ஜலம். பணத்தை எடுத்துக் கொண்டு பதில் ஒன்றும் கூறாமல் ஊமையனைப்போல் சென்றான். தன் விஷயத்தில் நம்பிக்கையோ இரக்கமோ கொண்டு ஒருநூறு ரூபாய் தராதவர்களைவிட வர்மாவே சிறந்தவனென்று அவன் நினைத்தான். பணம் கொடுக்காமலே அவன் மனைவி சாந்தாவைக் கேட்டிருந்தால்கூட அவளை வர்மாவிற்குக் கொடுத்துவிடக் கூடியவன் குமார்.

* * *

வெள்ளிக்கிழமை போய் சனிக்கிழமை வந்தது. அதுவும் போனால் ஞாயிறு வந்துவிடும். அன்றுதான் பெற்ற பணத்தை திருப்பிக் கொடுக்க கெடு. பணம் பெற்றதால் கவலை நீங்கியது. ஆனால், மறுபடியும் குறிப்பிட்ட நாளில் பெற்ற பணத்தைத் திருப்பித் தர வழியில்லா குமார் மறுபடியும் கவலையென்னும் சாகரத்தில் குதித்தான். ஆனால், அந்தத் தர்மாத்மாவிற்கா வழியொன்று பிறக்காது. கடவுளருளால் இருபத்தைந்தாயிரம் ரூபாய் பெறும்படியான மனைவியொருவள் தனக்கு வாய்த்ததற்காகச் சந்தோஷப்பட்டான். அவளைக் காண நடந்தான் விரைந்து. மனமும் விரைந்தே வேலை செய்ய ஆரம்பித்தது.

சாந்தாவின் தகப்பனார் வர்மாவின் பண்ணையாள். அழகி சாந்தாவிற்கு வயது ஈரேழே ஆகிறது. அடுத்த மாதத்தில் சாந்தி. தூரத்திலே தன் கணவன் வருவதைக் கண்ட அவள் முகம் சூரியனைக் கண்ட தாமரை போலானது. 'நாறுயிசு!' என்று அவள் மெதுவாகச் சொன்னாள். குமாரும் வந்து சேர்ந்தான். திண்ணையில் அவன் அமர்ந்ததும், 'சாந்தா! நான் உன்னை அடைந்தது என் முன்னோர்கள் செய்த தவப் பயனே யாகும். நான் நூறு ரூபாய்ப் பெறாதவன். நீயோ இருபத்தைந்தாயிரம் ரூபாய் பெருமானவள். வைரக் கல்லை பித்தளையில் பதிப்பதைக் காட்டிலும் தங்கத்திலே பதிப்பதுதான் மேலானது. அந்த வைரம் ஏழையிடத்திலே இருந்தாலும் போலியாகவே கருதப்படும். என் பிரிய சாந்தா! நீ எனக்கு உகந்தவள் அல்ல. என் பிரிய நண்பனாகிய வர்மாவிற்கு, நற்குண கணவன் சொல் மீறாத—பூஷணமாகிய உன்னை ரூபாய் 25000க்கு விற்று விட்டேன். காலதாமதம் செய்யப்படாது. நான் உன்னை இப்பொழுதே என் நண்பனிடம் சேர்த்து விடவேண்டும். உன்மேல் இச்சைகொண்ட என் நண்பனையும் கேவலமாக கருதி விடாதே.

உனக்குச் சம்மதமில்லாவிட்டால் சொல்லிவிடு. நான் உன் முன்னிலையிலேயே இறந்து விடுகிறேன்' என்றான்.

'நாதா! தங்களுயிர்த் தோழர் தங்களின் மனைவியை விரும்பினால் அது தெய்வச் செயல்தான். உங்கள் இஷ்டப்படியே நடக்க நான் கடமைப் பட்டவள். ஆயினும், பிராணபதி! உலகம் என்ன சொல்லும்! தன் கணவன் ஏழ்மை ஸ்திதியை அடையவே குபேர அந்தஸ்த்துள்ளவனைப் பிடித்துக் கொண்டாளென்றல்லவா கூறும். அதுதான் சிறிது யோசனையைக் கொடுக்கிறது. ஆயினும், நான் உலகத்தை லக்ஷியம் செய்யவில்லை. தாங்கள் என்னை அவரிடம் ஒப்புவித்துவிட்டால் நமக்குள்ள பந்தம் ஒழிந்து விடுகிறது. அதற்குப்பின் தாங்கள் என்னைப்பற்றிக் கவலை கொள்ளக்கூடாது' என்றாள் சாந்தா வருத்தத்துடன்.

'சாந்தா! இப்படிச் சொல்லுவதா புத்திசாலிக் கழகு! நீ வர்மாவிடம் ஒப்படைக்கப்பட்டபின் தற்கொலை செய்து கொண்டு இறந்தால் அந்தப் பழியும் பாவமும் என் நண்பனையல்லவா சாரும். அதற்கு நானாளாக மாட்டேன். நீ உறுதி கூறினால்தான் நான் உன்னை என் நண்பனிடத்தில் ஒப்படைப்பேன். நீ என் நண்பனுக்காக வாழ். நான் உங்களிருவருக்காக வாழ்கிறேன். நேரமாகிறது. புறப்படு!' என்றான் குமார்.

குமார் முன்னே செல்ல, சாந்தா அவன் பின்னே சென்றாள். ஆயிரக்கணக்கான எண்ணங்கள் அவள் மனதில் தோன்றின. தன அந்தியகாலம் சமீபத்து விட்டதாக அவள் கருதினாள். தம்பதிகளிருவரும் ஊமையைப் போலவே சென்றனர்.

* * *

தோட்டத்திலுள்ள வீட்டில் வர்மா தன் நண்பனின் வரவை எதிர்பார்த்து, முன்னும் பின்னுமாக உலாவிக்கொண்டிருந்தான். அவன் எதைப்பற்றிச் சிந்தனை செய்துகொண்டிருந்தானோ தெரியாது. ஆனால், யோசனை மட்டிலும் பலத்தது என்று அவன் முகம் விளம்பரப் படுத்தியது. பைத்தியக்காரனைப்போல் சில சமயங்களில் தன்னையறியாமலே சிரித்தான். மணி எட்டடித்தது. சாந்தாவும் குமாரும் அவன் முன்னே நின்றனர். சாந்தாவின் முகத்தைக் கண்ட வர்மா திடீரென்று வெளியே சென்று நீலவானிலேயுள்ள அம்புலியைப் பார்த்தான். 'குமார்! பாக்கியசாலி நான்தான். ஏககாலத்தில் நான் இரண்டு சந்திரன்களைக் கண்டேன். மதிபோன்ற முகமென்று உலகத்திலே கூறுவார்கள். ஆனால், அது தவறு. சாந்தாவின் முகத்தைப் போன்ற மதியென்றேதான் சொல்ல வேண்டும். என் அன்புள்ள சாந்தாவிடத்தில் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறாயல்லவா? சாந்தா உனக்கு என்மேல் பிரியம் தானே!' என்றான் வர்மா.



அவள் மனம் எரிந்தது. ஆனால், குமார் சொன்னான். 'இந்த நிமிஷம் முதல் சாந்தா உமது மனைவி' யென்று. அந்த வார்த்தைகள் அவன் வாயிலிருந்து எளிதில் வரவில்லை. அப்பொழுது வர்மா அவ்வார்த்தைகள் தன் காதில் விழாவண்ணம் தன் காதுகளை கைகளில் பொத்திக் கொண்டான்.

'குமார்! நீ சாந்தாவைப் பராமரிப்பதைவிடப் பன்மடங்கு உயர்வாக நான் பராமரிப்பேன். அதுதான் எனதாசை. நீ உத்தமன். உன் நண்பன் நானும் அப்படித்தானே! சரி! இனி நீ போகலாம்!' என்றான் வர்மா.

குமார் மெல்ல நடந்தான். நிலத்தை அளந்து செல்வதுபோல் தோன்றியது. தன்னரும் பெருவதற்கரியதோர் பேரழகியைவிட்டுச் செல்லத்தான் அவன் மனம் எப்படித் துணிந்ததோ! கொஞ்சதூரம் சென்றதும் வர்மா அவனைக் கூப்பிட்டான். அவனோடு காதோடு காதாக 'நானெப்படி இன்று என் மனைவியுடன் இந்த இரவைக் கழிக்கப் போகிறேனோ அதுமாதிரியே நீயும் உன்மேல் நெடுநாளாக மையல்கொண்ட ஒரு பெண்ணுடன் இன்றிரவைக் கழிக்க வேண்டியது. சரியாக இரவு 10 மணிக்கு என் பங்களாவிற்கு வா! இருட்டறையில்தான் நீங்கள் விடப்படுவீர்கள். நானும் சாந்தாவும் இங்கேதானிருப்போம். எக்காரணத்தைக் கொண்டும் அந்த அறையில் வெளிச்சத்தை உண்டுபண்ணக் கூடாது. இது கண்டிப்பான வார்த்தை. மறந்து விடாதே. இது எனது உத்தரவு. நீ அவசியம் கீழ்ப்படிந்துதான் நடக்க வேண்டும்' என்றான் வர்மா.

சாந்தா கதவின் மறைவில் நாணிக்கோணி நின்றுகொண்டிருந்தாள். திண்ணையின்மேல் வர்மா அமர்ந்ததும் 'சாந்தா! உன்மேல் நான் கொண்டிருக்கும் அன்பானது எத்தகையது என்று அறிய உனக்குச் சக்தி கிடையாது. அந்த அன்பிற்கு அளவு கிடையாது. நீ புத்திசாலியாக இருந்தும் உன் கணவனை நல்வழியில் திருப்ப முடியாமல் போனது ஆச்சர்யமே. சாந்தா! கடவுளறிய சொல்லுகிறேன். எனது ஆஸ்தியில் பாதி உன்னுடையது இன்று முதல். என்மேல் உனக்குப் பிரியமில்லையா?' என்றான்.

'தாங்கள் என் எஜமானர். தங்கள் காசைத் தின்று வளர்ந்தவள் நான். தங்களின்மேல் எனக்குப் பிரியமில்லாமல் போனால் என்னைக் காட்டிலும் நன்றி கெட்டவள் இவ்வுலகில் வேறொருவளிருக்கமாட்டாள். நான் என் கணவனை உயிருடன் இழந்து விட்டேன். அது தங்கள் சித்தம்தான்' என்று கூறி அழுதாள்.

* * *

நீல வானிலே பூரண சந்திரன் புன்னகைப் புரிந்துகொண்டிருந்தான். அவன் இரவைப் பகலாக்கினான். வர்மாவின் பங்களாவின்

மேன்மாடியில் அந்தகாரம் குடிகொண் டிருந்தது. அதுபோலவே ஓர் இருட்டறையில் விடப்பட்ட சாந்தாவின் மனமும். தன்மேல் மோகங்கொண்ட வர்மா அந்த அறையில் நுழைந்ததும் அவளுக்குத் தெரியும். அவனின் கட்டளையை மீற அவளால் முடியாது. தன் தேகத்தை அவன் வசம் ஒப்புவித்த பின்னர் தன்னுயிரைக் காலன் வசம் ஒப்புவிக்க அவள் தீர்மானம் செய்து விட்டாள். அறையில் நுழைந்த ஆடவன் தன்னை அணுகாம லிருந்தது அவளுக்கு வியப்பைத் தந்தது. ஆயினும், அவள் கடமை அவள் முன்னே நின்றது. சாகப் போவதாகத் தீர்மானம் செய்த அவள் அவனை நெருங்கினாள். அவள் ஹிருதயம் வெடித்து விடும்போலிருந்தது. அவனது கால்கள் நடுங்கின. நெஞ்சம் வஞ்சகத்திற்கு ஆளாகவில்லை. என்னமோ சொல்ல அவன் வாயெடுத்தான். சாத்தியமா அது?

வர்மாவின் மனைவி சிக்கம்மாள், கையில் ஓர் துப்பாக்கியுடன் மேன்மாடியை அடைந்தாள். அந்த அறையில் நடப்பது அவளுக்குத் தெரிந்து விட்டது. அந்த அறையை அவள் சமீபத்ததும் 'யாரது அங்கே! நில்!' என்றது ஒரு குரல் அதிகாரத்துடன்'. என்னை யாரென்று கேட்க நீ யார்? உனக்கு இந்த அகால வேளையில் இங்கென்ன வேலை? பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சா பாதகனுக்கு நீயும் உடந்தையோ?' என்று கடுமையாகக் கூறினள்.

'நான் எஜமானரின் அடிமை. இந்த அறையிலே யாரையும் விடப்படா தென்ற கடுமையான உத்தரவு. கட்டளையை மீற முடியாது. தாங்கள் எஜமானி என்று தெரிந்து கொண்டேன். மன்னிக்கவும்' என்றான் அந்தக் காவலாளி.

சிக்கம்மாள்:—அப்படியானால் என் உத்தரவிற்குக் கீழ்ப்படிய மாட்டாயா? நான் இந்த அறையினுள்ளே செல்ல வேண்டும். தூரப் போ!

காவலன்:—அம்மா! அடியேன் அசக்தனா யிருக்கிறேன். மன்னிக்க வேண்டும்! தாங்கள் எதற்காக இவ்வறையினுள் செல்ல வேண்டும்?

சிக்கம்மாள்:—எதற்காகவா! என் கணவன்—உன் எஜமான் ஓர் துரோகி. மகா பாவி! சண்டாளன்! கல் நெஞ்சம் படைத்த பாதகன். நண்பனின் மனைவியை—என் உடன் பிறவா சகோதரியை விரும்பினான். அவள் கற்பை யிழக்க நான் பார்த்துக்கொண் டிருக்க மாட்டேன். விலகு! நான் செல்ல வேண்டும்!

காவலன்:—அம்மா அழகுள்ள பெண்களின்மேல் காதல் கொள்வது ஆடவர்களுக்கு இயற்கைதானே. ஆண்களுக்குக் கற்பு என்பது கிடையாதல்லவா! உள்ளே சென்று தங்களால் அவரை என்ன செய்ய முடியும்?



சிக்கம்மாள்:—நீ ஓர் அறிவிலி. மற்றொரு பெண்ணைத் தீண்டிய அக்கரங்களால் நான் தீண்டப்பட விரும்ப வில்லை. என்னை மோசம் செய்தான் என் பர்த்தா. உயிர்த் தோழனையும் மோசம் செய்தான். மோசக்காரனின் மனைவி யென்று உலகத்தாரால் கூறப்பட நான் விரும்பவில்லை. உலகம் இகழும் புருஷன் எனக்குத் தேவையில்லை. என்னைத் தடை செய்யாதே! தடை செய்தாயானால் இக் கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப் படுவாய்!' என்று கூறி திடீரென்று அக் காவலனைக் கீழே தள்ளி தன் பலங் கொண்ட மட்டும் அக் கதவைத் தள்ளினாள். அக் கதவும் அவளது கோபத்திற்கு ஆளாகாமல் படாரென்று திறந்து கொண்டது. உள்ளே நுழைந்த அவள் அந்த இருட்டிலே ஒன்றும் தோன்றாமல் 'சாந்தா என் பிரிய சகோதரியே! உன் கற்பைக் கெடுத்த அப் பாதகனைக் கொல்ல இதோ நான் வந்திருக்கிறேன். எங்கே அவன்?' என்று சினந்து கூறினாள்.

அவளுக்குப் பதில் சொல்ல அந்த அறையிலுள்ள மின்சார விளக்குகளெல்லாம் திடீரென்று பற்றிக்கொண்டன. அந்த அறையில் அவள் கண்டதென்ன? சாந்தாவும் குமாரும் அவ் வறையில் இருந்தனர். வெளிச்சத்தில் வர்மா வென்று நினைக்கப்பட்டவன் தன் காதலனாக இருப்பதைக் கண்டாள் சாந்தா.

'ஹா நாதா! தங்களின் நண்பரின் சோதனையே சோதனை. அம்மா! தங்களின் அன்பிற்கும், ஆதரவிற்கும் பாத்திரமான என்னை இவ்விதமா சோதனை செய்வது? ஆயினும், எஜமானரின் நல்லுள்ளத்தை அறிய முடியாமல் போனது எங்கள் குற்றமே. கொல்லாமலே செய்வார் பெரியோர் என்பது வாஸ்தவமே. ஹா! எனது எஜமானனின் பெருந் தன்மையே தன்மை' என்று கூறி ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.

'என் பிரிய நண்பா! என் மனைவியே என்னை அறிந்து கொள்ளாத பொழுது உலகத்தை அறியாத நீ எப்படி என்னை அறியக் கூடும். சாந்தா என் சகோதரி போன்றவளல்லவா? உங்களது சாந்தி கலியாணத்தை எனது இல்லத்திலேயே நடத்த எண்ணங் கொண்டே நான் இவ்விதம் அதைச் செய்தேன். மற்றும் அது ஓர் பரிசோதனையாகவும் முடிந்தது. வஞ்சகம் நிறைந்ததே பிரபஞ்ச மென்பதை அறிந்து கொள். இனிமேலாவது புத்திசாலித்தனமாக உலகத்தோடொத்து வாழ்வா யென்று நம்புகிறேன். சாந்தா! அன்று நானுனக்கு வாக்களித்த பிரகாரம் எனது ஆஸ்தியில் பாதி உன்னுடையதே. சிக்கம்மாவை ஓர் சாதாரண பெண்ணென்று நினைத்தேன். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்றான் வர்மா.

# கமல சுந்தரன் அல்லது காரிகையின் வெற்றி

[G. R. ஜயலக்ஷ்மி]

'**என்னருமைக்** கமலா! இந்த ஜன்மத்தில் உன் மனக் கோலத்தைக் காண உன் அன்னையும் நானும் கொடுத்து வைக்காத பாவி யானோம். இருப்பினும், என் மனதி லிருந்த ஓர் எண்ணத்தையாவது உன் மூலம் முடிக்க உத்தேசித்திருந்தேன். அதற்குள் காலன் என்னை யணுகி விட்டான். என் ஆத்ம திருப்திக் காக நிச்சயமாய் என் நண்பன் அதை நிறைவேற்றி வைப்பானென் பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. கமலா! இனி யானுனக்குக் கடைசி யாகக் கூறும் மொழி யாதெனில், 'நீ உன் மனோதிடத்தினாலும், கூரிய அறிவினாலும் உன் அத்தை புருஷன் கேட்ட வரதக்ஷிணையை எவ்வாறேனும் அவனிட மிருந்து பறித்து, பிறகு உன் மனதிற் கிசைந்த அத்தான் சுந்தரத்தையே மணாளனாக அடைய எல்லாம் வல்ல இறைவனையே துணை புரியுமாறு வேண்டிக் கொள்கிறேன். கண்மணி கமலா! இனி இவர்தான் உன் பிதா. என்னருமை நண்பா! உன்னை நம்பித்தான் கமலாவை விட்டுச் செல்கிறேன். நீதான் என் ஆத்மாவைத் திருப்தி செய்விப்பாய்........' என்று கூறியவாறே திரும்பாத் தியானத்தில் ஆழ்ந்தார் கோபாலையர்! என்னே வரதக்ஷிணையின் கொடுமை!!

காலச் சக்கரம் சுழன்று கொண்டே வந்து பல வருஷங்கள் ஆயிற்று. ஓர் தினம் சென்னை யெங்கும் ஒரே அல்லோல கல்லோ லம்! காரணம், அன்று சர்க்கஸ் (Circus) கொட்டகைத் தீப்பற்றிக் கொண்டதே! அதில் அநேகருக்கு உயிர்ச் சேதம். சிலருக்குக் காயம். இன்னும் சிலருக்கு அங்க ஹீனம். இவ்வாறு நேரவே, எங்கும் அழுகையே குடிகொண் டிருந்தது. அதில் முக்கியமாய் நாம் கவனிக்க வேண்டியது நம் வரதையரின் குடும்பமே!

என்று மில்லாது அன்றையதினம் தம் ஏகபுத்திரன் சுந்தரன் சர்க்கஸுக்குப் போய்த் தீயில் அகப்பட்டுக் கொண்டதால் அவ னுக்கு ஏற்பட்ட பலத்த காயங்களைக் கண்டு மனம் புழுங்கி, தம் மகனுக்கு இவ்வாறு நேர வேண்டு மென்று பாகா யுருகினார் வரதையர். எவ்வாறோ சற்று மனந் தேறியவராய்ப் பெரிய ஸர்ஜன் களை (Surgeon) அமைத்துத் தம் மகன் சுந்தரனுக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்து வரலானார்.

என்ன செய்தும் என்ன பலன்! அவர் யாவரும்கூடி அதிக சிரத்தையுடன் கவனித்து வந்ததில், மீண்டும் பழைய ரூபத் துடனும், உயிருடனும்தான் சுந்தரத்தை வரதையரிடம் ஒப்புவிக்க முடிந்ததே யன்றி, அவர்களால் அவன் கண்ணுக்கு நேர்ந்த சிறு



இன்னலைமட்டும் சிறிதும் களையவே முடிய வில்லை. மனிதருக்கு முக்கியமான இரு கண்களையுமே பிரதானமாய் இழந்த நம் சுந்தரத் தினுடைய மன வியாகூலத்தை யாரால்தான் அளந்துகூற முடியும்? தன்னைத்தானே தற்கொலை செய்து கொள்ளவும் சித்தமானான்.

அப்பொழுதுதான், தம்முடைய மகன் இவ்வாறான நிலைமைக்கு வந்ததற்குத் தான் காரண மென்று வரதையர் உணர்ந்தார். ஆதியி லேயே, அவன் காதலித்த கமலாவை மணம் புரிந்து வைத்திருந் தால், தற்சமயம் இக்கதிக்கு ஆளாக நேர்ந்திருக்கா தல்லவா? ஏதோ பணப் பேயின் தூண்டுகோலால் அன்று தன் மைத்துனரின் வேண்டுகோளுக்குச் செவி கொடாது திரும்பியதும், பிறகு அவர் அதே ஏக்கத்தால் உயிர் விட்டதும், இதை யறிந்த தன் மகன்தான் கமலாவைத் தவிர வேறொரு மங்கையைக் கண்ணெடுத்தும் பாரேன் என்று தன்னிடம் சபதம் கூறியதும், முடிவில் தான் பயந்து கமலாவை அழைத்து வர அவளிடத்திற்குச் சென்று பார்க்க, அவள் அங்கில்லாது போனதும், அதைத் தன் மகனுக்குத் தெரிவிக்குந் தருவாயில், சர்க்கஸில் மிகப் பிரசித்திப் பெற்றிருக்கும் மிஸ். கமல லோசனி யென்னும் பெண் அன்று நடிக்கப் போவதாய்ச் செய்தி எட்டவே, சுந்தரன் அவளொருக்கால் தன் காதலியா யிருக்கக் கூடு மென்று நினைத்து அங்கு செல்ல அவனுக்கு நேர்ந்த விபத்தும், தற்சமயம் அவனிருக்கும் நிலைமையும் படிப்படியாய் அவர் மனக் கண்முன் தோன்றி அவரைத் திகைக்கச் செய்தது. 'இனி நான் அவன் முன்னிருப்பதுவும் பாபமே. அவனை நான் இந்நிலையில் வைத்துக் காண்பதைவிட என் உயிரை மாய்த்துக் கொள்வதுதான் சரியான முடிவு' என்று எழுந்தார்.

அதே சமயம் சுவரி லிருந்த டெலிபோன் (Telephone) மணி கணகண வென்று அடிக்கவே, ரிசீவரை (Receiver) எடுத்து காதண்டை வைத்துக்கொண்டு சங்கதியை விசாரித்தார். சற்று நேரத்திற்கெல்லாம் ரிசீவரை இருந்த இடத்தில் வைத்துவிட்டு மிகவும் குதூகலத்துடன் தன் மனைவி யருகில் வந்து, 'மீனாக்ஷி! நமக்கு நல்லகாலம் பிறந்துவிட்டது. இப்பொழுது என்னுடன் பேசிய ஜெனரல் ஆஸ்பத்திரி சர்ஜன், மைலாப்பூர் 'வசந்த பவனம்' என்னும் பங்களாவில், காந்தாமணி யென்னும் பெண், கல்கத்தாவி லிருந்து கண்ணிற்காகவே படித்துப் பட்டம் பெற்று, சென்ற வாரம் தான் வந்து இறங்கி யிருக்கிறாள்' என்றும், அவளிடம் நம் பையனைக் காட்டினால் நிச்சயமாகச் சொஸ்தமாகும்! நான் போய் அவளை யழைத்து வருகிறேன். நீ சுந்தரத்தை ஜாக்கிரதை யாய்ப் பார்த்துக் கொள்' என்று கூறி விடை பெற்று சென்றார்.

காந்தாமணி:—நான் அங்கு வருவதைப்பற்றி யாதொரும்

தடையுமில்லை. அங்கு நான் வரும் ஒரு விஸிடிற்கு (Visit) ரூபாய்ப் பத்துக்குச் சம்மதித்தால் வரத் தடையேயில்லை.

வரதையர்:—பத்தல்ல, நூறு கேட்டபோதிலும் கொடுக்கத் தயார்! ஆனால், உங்களால்தான் அவனுயிர் நிலைக்க வேண்டும்.

எனப் பலவாறு பல்லவி பாடி அவளைத் தம் காரில் அழைத்துக் கொண்டு இல்லம் வந்து சேர்ந்தார். காந்தாமணி உள் நுழைந்ததும் நோயாளியைப் பரிசோதித்து அவனுக்குத் தேவையான ஒரு அறையைக் காலி செய்து, தன் கைவசம் கொண்டுவந்த மருந்தை வைத்துக் கட்டி, தேகத்தை அதிகம் அலட்டிக் கொள்ளாமலும் அடிக்கடி, வெளிச்சத்தைத் தரக்கூடிய கதவுகளைத் திறவாமலும் இருக்கத் திட்டம் செய்துவிட்டு வெளியில் வந்தாள்.

வரதையர்:—பையன் விஷயத்தில் ஏதேனும் குண மேற்படு மென்று தோன்றுகிறதா?

காந்தாமணி:—அநேகமாய் ஏற்படலாம். அதை இப்பொழுது எப்படிச் சொல்ல முடியும்? பூரண குணம் தெரிய இன்னும் இரண்டு வாரம் பிடிக்கும்.

வரதையர்:—எப்படியாவது பையனைக் காப்பாற்றுவது உங்கள் கடமை. பணத்தைப்பற்றி யோசிக்க வேண்டாம்.

காந்தாமணி:—என்னுடைய விஸிடிங் பீஸ் தவிர்த்து, ரூ. 1500 இந்தக் கேஸ் குண மடைந்ததும் தாங்கள் தர வேண்டிவரும்.

வரதையர்:—அதைப்பற்றிப் பரவாயில்லை. இப்பொழுதே வேண்டுமானாலும் பாங்கில் கட்டிவிடத் தயார்.

காந்தாமணி:—வேண்டாம் வேண்டாம்! அவசரமில்லை. நான் சென்று நாளைக் காலை வருகிறேன். அவரிடம் யாரையும் பேச விட வேண்டாம்.

வரதையர் 'அப்படியே' யென்றதும், சென்றுவிட்டாள். நாட்கள் பறந்துகொண்டே சென்றன. அதுவரையில் மனித சஞ்சார மற்ற வனாந்தரத்தில் வசித்து வந்ததாக எண்ணியிருந்த சுந்தரன், அப்பொழுதுதான் அடிக்கடி வீணாகானம் போன்ற ஓர் மதுரமான த்வனியைக் கேட்பதா யெண்ணினான். அவ்விதக் குரலோசையை யுடைய பெண்மணியைக் காண ஆவல் கொண்டான். மறுகணம் தான் காண நினைக்கும் பெண்மணி ஒருக்கால் தன் காதலி கமலாவாக இராதிருந்தால் என்ன பயனென்று வருந்தினான். 'இது வீண் கனவே! என் காதலியாவது, இவ்வித உயர்தர பட்டம் பெறவாவது! இது கனவிலும் கூடாத காரியமே! கண்மணீ கமலா! நீ எங்கு நின்று தவிக்கின்றனையோ? நானிங்கு அந்தகனாய் நின்று' தவிக்கின்றேன். இனி என் கண் திரும்பப் பெற்ற அடுத்த க்ஷணமே



உன்னைக் கண்டு பிடிக்க முயற்சிப்பேன். இது சத்தியம்' என்று அதிக ஆத்திரத்துடன் உரக்கக் கூவினான்.

அதுசமயம் அவனறைக்குள் நுழைந்த காந்தாமணி சுந்தரம் கூறியவைகளைச் செவியுற்று மனம் மிகவும் வருந்தியவளாய் அவனருகில் சென்று கண்கட்டுகளை அவிழ்த்துக் கொண்டே, 'தங்கள் கண் நாளை யிரவே குணப்பட்டுவிடும். இனி என் தயவு தங்களுக்கு வேண்டிய தில்லை. நாளை மாலை வந்து என் பீசை பெற்றுச் செல்வேன். பிறகு இரவு தங்கள் கண் கட்டுகளை அவிழ்த்து விடுங்கள். சரியாய்விடும்' என்று மிருதுவாய்க் கூறினாள்.

சுந்தரன்:—என் மாலை தாங்கள் செல்லும்போது அவிழ்த்து விட்டால் ஆகாதா? தங்களைப் பார்க்கக்கூடாத அபாக்கியம் நான் என்ன செய்தேனோ!

காந்தாமணி:—தாங்களேன் என் மீது வருந்துகிறீர்கள்? அப்படி யென்னைப் பார்க்க தங்களுக்கு அபேட்சை யிருந்தால் கட்டாயம் வருகைக்கு, என் ஏழைக் குடிசையின் படலம் திறந்தே வைத்திருப்பேன்.

சுந்தரன்:—அதைத் தாங்கள் கூறவும் வேண்டுமா! அப்படி நான் நினைக்காது தங்களைக் காண வராவிடில், கண் பெற்றும் அந்தகனாக அன்றோ ஆகிவிடுவேன். தங்களை என் உயிருள்ளளவும் மறவேன்.

மறுதினம் மாலை டாக்டர் மிஸ். காந்தாமணிக்குப் பல பேர் முன்னிலையில் மரியாதைப் பத்திரம் வாசித்துக்கூறி அவளுக்குரிய பீஸ் பணத்துடன் ஓர் தங்கப் பதக்கமும் தன் கையால் பரிசளித்தார் வரதையர். அதைப் பெற்றுக்கொண்ட காந்தாமணி அங்கிருந்த அனைவருக்கும் தன் வந்தனத்தைக்கூறி, சுந்தரத்தினிடமும் விடைபெற்றுக்கொண்டு, நேராக தபாலாபீஸிற்குச் சென்று, பெண்களின் கலை விருத்தியின் பொருட்டுத் தான் வாங்கின பணத்தை நன்கொடையாகக் கல்கத்தாவிற் கனுப்பிவிட்டு வெகு உற்சாக முகத்துடன் தன் மனைக்கு வந்து, தான் ஓர் பெரிய காரியத்தில் வெற்றி பெற்றது போலவும், இனி தனக்கு நிகர் யாருமில்லை யென்றும் மனமகிழ்ந்து ஓர் சாய்வு நாற்காலியில் சாய்ந்தாள்.

காந்தாமணி சொல்லிச் சென்ற பிரகாரம் சுந்தரன் இரவை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். வெகு சீக்கிரத்தில் இரவும் கிட்டிற்று. தான் இதுவரையிலிருந்த அறைக்குள் சென்று தன் கட்டுகளை யவிழ்த்து மெல்லப் பார்த்தான். உண்மையாகவே அச்சமயம் அவனால் தன்னை நம்பவே முடியவில்லை. பிறகு சிறிது சிரமப்பட்டு எழுந்து கடவுளைத் தியானித்து வணங்கினான். தன் காதலியைத் தன்னிடம் சேர்ப்பிக்குமாறு பிரார்த்தித்தான். தான் இனி செய்ய வேண்டிய முதல் கடமை காந்தாமணியைக் கண்டு தன் நன்றியறிதலை அவளிடம் தெரிவிக்க வேண்டியது. பிறகு தன்

காதலியைப்பற்றிக் கவனிப்பதென்று நினைத்து இரண்டடி முன் வைத்தான். அவனெதிரிலிருந்த மேசைமேல் ஓர் பழைய புத்தகமும் சிறிய தோல் பையுமிருக்கக் கண்டான். அதை யெடுத்துப் பார்த்த பொழுது அப் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த பெயரை நோக்கியதும், தானிருப்பது பூவுலகல்ல வென்றே எண்ணினான். அளவிலா ஆனந்தம் கொண்டான். அதில் வரைந்திருந்த விலாசத்தைத் தெரிந்துகொண்டு உடனே யாவற்றையும்விட்டுப் புறப்படலானான்.

தங்கள் செல்வன் மீண்டும், இழந்த கண்களைப் பெற்று களிப்புற்றிருக்கும் கோலத்தைக்காண வெகு ஆவலுடன் சென்ற பெற்றோர்கள், தனயனும் எதிரே வரவே, இருவரும் அவனைத் தழுவியவாறு ஆனந்த பாஷ்ப மென்னும் மழை மாரியைத் தங்கள் செல்வன்மீது பொழிந்தார்கள். தனயனும் வெகு வணக்கத்துடன் தன் பெற்றோர்களின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து ஆசி பெற்றான். பிறகு சந்தோஷ மிகுதியினால் பெற்றோர்கள் பேச்சின் களிப்பில் மூழ்கவே, தன் காரியத்தில் கவனம் செலுத்தின சுந்தரன் தன் பெற்றோர்களிடம் விடை பெற்றுக்கொண்டு காரில் ஏறி வெளியில் சென்றான்.

மாலை வீடு வந்து சேர்ந்த காந்தாமணி, சற்று களைப்பாறியவுடன் எழுந்து ஸ்நானம்செய்து சிறிது ஆகாரம் உட்கொண்டு தன் தினசரிக் குறிப்பெழுத புஸ்தகத்தை யெடுத்துவர வேலையாளை யேவி விட்டு, ஹாலில் போடப்பட்டிருந்த ஓர் சோபாவில் வந்தமர்ந்தாள். தான் ஏவி விட்டு அனுப்பிய வேலையாள், சற்று நேரமாயும் திரும்பி வாராதது கண்டு, சினத்துடன் மறுமுறை அவனை யழைக்க எழுந்த சமயம், வாசலில் ஒரு கார் அதிக வேகமாய் வந்து நின்றதைக் கண்டாள். அதி லிருந்து இறங்கிய அழகிய வாலிபனொருவன் அவசர அவசரமாக ஹாலிற்குள் நுழைந்து அங்கு நின்ற காந்தாமணியைக் கண்டு அவன் 'கண்மணி கமலா! இன்னும் நீ அளித்த கண் என் பிதாவுக்கே யன்றி எனக்கல்ல இனி நீ எனக்களிக்கப் போகும் பதில்தான் உண்மையான என் மனக் கண்ணாகும். காதலி! என் பிதா செய்த பிழையைப் பொறுத்து என்னை ஏற்றுக் கொள்வாயா?' என்று கட்டு மீறிய காதலுடன் தன் காதலியை யணுகினான் சுந்தரன்.

இதுவரையில் காந்தாமணி யென்றும் புனைப் பெயருடனிருந்த கமலா எதிர்பாராத விதமாய்த் தன்னருமைக் காதலன் வருகையைக் காணவே தன்னைத்தானே மறந்து, 'பிராணநாதா! இன்னுமா தங்களுக்குச் சந்தேகம்? தங்கள் வருகையை எச்சமயத்திலும் நல்வர வேற்க என் இருதயம் காத்துக்கொண்டிருக்கிறதென்று நேற்று கூறிய என் வசனத்தில் தாங்கள் நம்பிக்கை கொள்ளவில்லையா!' என அவனை யணுகினாள்.



இதை முக்கியமாய்க் கவனித்துக்கொண்டிருந்த சுந்தரன் புதையலைக் கண்டெடுத்த பிறவி தரித்திரனைப் போல, களிப்புற்றுத் தன் காதலியை மார்புறத் தழுவி அவள் அதரத்தில் முத்த மழை பொழிவித்தான். தன் காதலனின் இன்பத்தில் ஈடுபட்டிருந்த கமலா அசைவற்று நின்றாள்.

அச் சமயம் ஹாலில் தோன்றிய கமலாவின் வளர்ப்புத் தந்தை, 'இன்றுதான் என் நண்பன் கோபாலனின் ஆத்மா சாந்தியடையும்' என்று கூறித் தம்பதிகளை ஆசி கூறினார்.


வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

ஏது? ஏது?

ஈகல்  பிராண்ட்

பிடி (MM) மார்க்

ரிஜிஸ்டர்ட்

இது நல்ல பசியை யுண்டாக்கும், இருமலைப் போக்கும். பிடித்தவுடன் மற்ற பீடிகளால் வாயில் ஏற்படும் கெட்ட வாசனை இதில் இராது. வேண்டுவோர் மொத்தம் விலைக்கு எழுதி தெரிந்துக் கொள்ளவும்.

விலாசம்:—

எம். எம். பீடி ஆபீஸ்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# பத்மாவதி

[சி. கு. சாமி, ஆசாரிபள்ளம்]

மாலை சுமார் மூன்று மணி இருக்கும். துலக்குவதற்காகச் சில மண்பாண்டங்களை எடுத்துக்கொண்டு வீட்டின் பின்புறம் இறங்கினேன். அச்சமயம் எங்களுடைய வீட்டிற்கு அடுத்திருந்த ஒரு இடத்தி லிருந்து 'காந்திக்கு ஜே! காந்திக்கு ஜே!!' என்ற சத்தம் வெளிவந்துகொண் டிருந்தது. சாதாரணமாக எங்களுடைய கிராமத்தில் இவ்வித சப்தங்களை நான் கேட்ட தில்லை. ஆதலால், வெளியே என்ன நடக்கின்றது என்பதைப் பார்ப்பதற்காகச் சுவரண்டைக் கிடந்த ஒரு பெரிய விறகுக் கட்டையின் மீதேறி வெளியே உற்று நோக்கினேன்.

அங்குப் பெரிய கூட்டம் ஒன்று காணப்பட்டது. அக் கூட்டத்தை நோக்கி, கதருடை யணிந்த மூன்று மனிதர்கள் வந்துகொண்டிருந்தனர். அவர்களைப் பின்தொடர்ந்து வந்த சில வாலிபர்களிடமிருந்துதான் 'காந்திக்கு ஜே!' என்ற சத்தம் கிளம்பிற்று. அம் மூன்றுட்களும் கூட்டத்தின் நடுவில் வந்து சேர்ந்ததும், வயது முதிர்ந்த சிலரால் வரவேற்கப்பட்டனர். வந்தவர்கள் மூவரும் அவர்களுக்கென அமைக்கப்பட் டிருந்த ஒரு உயரமான பேடையில் அமர்ந்தனர். உடனே எங்கள் ஊர்வாசியான நாகேந்திரர் எழுந்து, வந்தவர்கள் மூவரையும் அங்குக் கூடியிருந்த ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தினர். பின்னர், வந்தவர்களில் ஒருவர் எழுந்து பின்வருமாறு பேசலானர்.

'சகோதரர்களே!

உங்களுடைய முன்னிலையில் நம் தாய் நாடாகிய இந்தியாவைப்பற்றிச் சில கூறலாம் என்று எண்ணுகிறேன். நம்மில் யாராவது ஒருவனை அழைத்து 'நீ யார்?' என்று வினவினல் 'நான் இந்தியன்' என யாதொரு தடையு மின்றிக் கூறுவான். ஆனல், நம் தாய் நாடு இச்சமயம் என்ன நிலையில் இருக்கின்றது? இந்திய மக்கள் எவ்வாறிருக்கின்றனர்? அவர்களின் குறைகளெவை? அவைகளை நீக்கும் வழிகளெவை? என்று கேட்கும்பொழுதுதான், 'நான் இந்தியன்' என்று இலகுவாகக் கூறியதின் பொருத்த மின்மையை அறிவான். முதலில் இந்தியர்களாகிய நமக்குச் சுதந்திரம் உண்டா? இல்லை. இரண்டாவதாக நம்மிடையில் ஒற்றுமையுண்டா? அதுவும் இல்லை. நாம் சுதந்திரம் பெற வேண்டுமென்றல் நம்மிடையில் ஒற்றுமை வேண்டும். ஆனல், நம்மிடையில் தற்சமயம் ஒற்றுமை இல்லை. இவ்வாறு ஒற்றுமை இல்லாமைக்குக் காரணங்கள் பல உண்டு. அவைகளில் முதல் முதலாகப் பல மதத்தினர்களிடையில் வீண் வாதங்களும், சண்டை சச்சரவுகளும் இருப்பதுவே. கடவுளை அறி



வதற்காக உதவும் மதத்தின் பெயரால் சண்டைகள் ஏற்பட்டு, அதன் காரணமாகப் பலர் மடிவாராயின் இதைவிடக் கேவலம் வேறு என்ன வேண்டும்? தவிரவும், ஒரே மதத்தைச் சார்ந்த ஆட்களிடையிலும் ஒற்றுமை இல்லை. இதற்குக் காரணம் ஜாதி பேதம், அனுவசியமான பழக்க வழக்கங்கள், அனுவசியமான பழக்க வழக்கங்களை எடுத்துக்கூறும் சமயம், நமது நாட்டிலேயே பிறந்து தேச பக்திக்கே ஒரு உதாரணமாகத் துலங்கிய சுவாமி விவேகானந்தரின் வாக்கியங்கள் இப்பொழுது என் ஞாபகத்தில் வருகின்றன. அவர் நம் நாட்டு விதவைகளைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றர். புருஷனை இழந்த பெண்ணை மொட்டை யடித்து, முக்காடிட்டு, முண்டையெனப் பெயர் கொடுத்து மூலையில் ஒதுக்கி விடுகிறேம். ஆனல், மனைவியை இழந்த அறுபது வயது கிழவனுனலும் அவனை மணம் செய்ய சம்மதிக்கின்றேம். என்ன நியாயமிது? இதில் கருணை என்பது கடுகளவேனும் இல்லை. ஆண் விதவைகளுக்கு ஆயிரம் கலியாணங்கள் வேண்டுமென்றலும் ஆகட்டும் என்கிறீர்கள். ஆனல், ஒன்று மறியாத பெண் விதவைகளுக்குப் புகலிடம் இல்லை என்கின்றீர்கள். ஒன்று மறியாத பால்வாய்ப் பசுங்குழந்தைகளுக்கு ஆசை மணம் செய்வித்து அழகு பார்த்தீர்கள். ஏதோ எதிர்பாராத ஆபத்தினிமித்தம் கணவன் இறந்து போகவே அதற்காக அந்த யுவதியை அலங்கோலமாக அப்புறமகற்றி விடுகிறீர்கள். ஒரு பாவமும் அறியாத பெண்கள் எதை நினைந்தழுவர்? யாரை நொந்துருகுவர்? மூலையிக் கிடந்து அழும் அவர்களி னழுகை வீண் போகுமா? சிந்தும் கண்ணீர் வெறும் மண்ணில் கலக்குமா? விதவையின் கண்ணீர், பாரத நாட்டின் ஒவ்வொரு சமுதாயத்தையும் வாளென அறுக்கின்றதே என்று ஓலமிட்டனர். சகோதரர்களே! இவ்வாறு ஒற்றுமை யின்மையாலும் சுதந்திர மின்மையாலும் வருந்தும் நம் நாட்டில் ஒற்றுமையையும் சுதந்திரத்தையும் நிலை நிறுத்துவதற்காக உழைப்பது காங்கிரஸ் ஒன்றுதான் என்பது யாவரும் அறிந்த உண்மை. இக் காங்கிரசின் கொள்கைகளைப்பற்றியும் அதன் வேலைகளைப்பற்றியும் இதோ என்னண்டையில் இருக்கும் திருவாளர் பெரியசாமி அவர்கள் கூறுவார்கள். அதை நீங்கள் கவனமாகக் கேட்குமாறு வேண்டிக் கொள்கிறேன்'.

இவ்வாறு கூறி முடிந்ததும் அவர் தனது ஆசனத்தில் அமர்ந்தார். உடனே ஜனங்கள் எல்லோரும் கரகோஷம் செய்தார்கள். இதனிடையில் காங்கிரசைப்பற்றிப் பேசுவதற்காகப் பெரியசாமியவர்கள் எழுந்தனர். அச்சமயம் 'என்னடீ அங்கே செய்கிருய்?' என்ற குரல் என்னண்டையில் கேட்டது. திரும்பிப் பார்க்கவும் எனது தாயார் மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டு 'நல்லாயிருக்கிறது! இம்மாதிரியுள்ள கூட்டங்களை யெல்லாம் உன்னைப்

போனுள்ள ஒரு பெண் பார்த்தால் கட்டாயம் கெட்டுப் போய் விடுவாள். நீ இதையெல்லாம் பார்க்கக் கூடாது. உன் வேலைகளைப் போய்ப் பார்' என்று கூறினாள். இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் அறிய வேண்டிய பல விஷயங்களைப்பற்றி அக்கூட்டத்தில் பேசிக்கொள்கிறார்கள். அதை நான் கேட்கக் கூடாதாம், கேட்டாலும் கெட்டுப்போய் விடுவேனாம்; இதுதான் எனது தாயார் படித்த படிப்பு என்றெண்ணிக் கொண்டே என் வேலைகளைச் செய்யத் தொடங்கினேன். ஆனால், வேலையில் என் கவனம் செல்லவில்லை. விதவைகள் மறுமணமில்லாது பரதவிக்கின்றனர் என்றும்; அவர்கள் மணம் புரிந்து சுகமாகக் காலம் கழிப்பது மிகவும் நல்லதென்றும் நான் எண்ணலானேன். ஆகவே, 'நான் ஏன் விவாகம் செய்து கொள்ளக் கூடாது? அதனால் என் தாய் தந்தையருக்கும், சுற்றத்தாருக்கும் என்ன கேடுதான் நேரிடப் போகின்றது? விவாகம் செய்துகொள்வதுதானே நல்லது!' என்று தோன்றிற்று.

நாட்கள் பல கழிந்தன. ஆயினும், அக் கூட்டத்தில் கேட்டவை என் மனதை விட்டகலவில்லை. எப்பொழுதும் 'நான் ஏன் விவாகம் செய்து கொள்ளக்கூடாது?' என்ற எண்ணம் என் மனதில் வந்து கொண்டிருந்தது. இவ்விஷயத்தில் அடிக்கடி என் கவனத்தைச் செலுத்தினதினால், எவ்விதமாவது கலியாணம் செய்துகொள்ள வேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்டேன். ஆயினும், இவ்விஷயத்தை என் தாய் தந்தையர்களிடம் கூறுவதற்கு மனம் வரவில்லை. ஆகவே, எப்பொழுதும் இதைப்பற்றி எண்ணி எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தேன்.

ஒரு நாள் இரவு சுமார் ஒரு மணி இருக்கும். தூக்கமே வரவில்லை. நான் எனது படுக்கையில் படுத்தவண்ணமாகவே எனது நிலைமையைப்பற்றிப் பின்வருமாறு சிந்திக்கலானேன். என்னை, என் தாய் தந்தையர்கள் எனது பன்னிரண்டாவது வயதில் விவாகம் செய்து கொடுத்தார்கள். விவாகம் முடிந்த அவ்வருடமே என் கணவர் இறந்தனர். அதற்குப் பிறகு இவ்வாறு வருடகாலமாக என்னுடைய வாழ்நாட்களை ஒரு அடிமைபோல் கழித்து வருகின்றேன். இப்பொழுது நான் ஆபரணங்கள் அணியக் கூடாதாம்; அழகான ஆடைகளைக் கட்டக் கூடாதாம்; வீட்டைவிட்டு வெளியே போகவும் கூடாதாம். இவ்விதமாக என் காலத்தை எவ்வாறு சரியாகக் கழிக்க முடியும்? விதவை என்ற நிலையிலிருக்கும் நான் ஆடவன் ஒருவனைப்பற்றி எண்ணுவதே கூடாது. அன்றியும் ஒருவனைத் தொடுவதென்றாலோ பாவம். ஆதலால் என் கஷ்டத்தை நீக்குவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கின்றது. அஃது என்னவென்றால் நான் விவாகம் செய்து கொள்வதுதான். ஆனால், இதற்கு என் தாய் தந்தையர்கள் சம்மதிப்பார்களா? அதுவுமில்லை. ஆதலால்



இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவிக்கும் என் மனம் நிம்மதியடைய வழிதானேது? என்றெண்ணிக்கொண்டே கிடந்தேன். ஆனால், எனக்கு வேறொரு எண்ணமுண்டு. அது என்னவெனில், கஷ்டங்கள் இருக்கின்றனவே என்றெண்ணி மூலையிலிருந்து அழுவதைவிட அக் கஷ்டங்களை நீக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதே ஓர் உத்தமியின் கடமையாகுமென்பதுதான். ஆகவே, இவ்விஷயத்தை என்னுடைய தந்தையிடம் சொல்ல வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன்.

மறுநாட் காலையில் பத்துமணிக்கு என்னுடைய தகப்பனாரிடம் சென்று சில கூறலானேன். நான் எனது தந்தையின் அறையினுள் சென்றதும் அவர் என்னை நோக்கி, 'பத்மா! என்ன வேண்டும்?' என்று கேட்டார்.

'இல்லை; ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி உங்களிடம் பேசலாமென்று எண்ணி வந்தேன். ஆனால்.......' என்று வார்த்தைகளை அரைகுறையாக முடித்தேன்.

'ஆனால், என்ன?'

'ஒன்றுமில்லை; தாங்கள் கோபிப்பீர்களோவென பயப்படுகிறேன்'

'சரி; அப்படியே கோபப்படுவதாயிருந்தாலும் விஷயமென்னவென்று அறிவதற்கு முன்பு எப்படி கோபப் படமுடியும்?'

'நீங்கள் மனவருத்தப் படமாட்டீர்களென்று நிச்சயமாகத் தெரிந்த பிறகுதான் என் மனதிலிருப்பதைக் கூறுவேன்'

'சரி; உன் எண்ணமென்னவென்றுதான் சொல் பார்ப்போம்.'

உடனே என் எண்ணங்களையெல்லாம் விவரமாக என் தகப்பனருக்கு எடுத்துக் கூறினேன். அவருக்கு ஆத்திரமும் கோபமும் வந்துவிட்டது. உடனே என் தாயாரை அழைத்து என்னுடைய காரியங்களைச் சொன்னார். அவ்விருவரும் சேர்ந்துகொண்டு என்னை நன்றாகத் திட்டினார்கள். சிறிது நேரம் சென்றதும் அழுதுகொண்டிருந்த என்னை நோக்கி என் தாயார் 'என்னடி அழுகிறாய்? இழிவான நடையில் நடப்பதற்கு ஆரம்பித்து விட்டாயா? நம்முடைய ஜாதி இன்னதென்று உனக்குத் தெரியாதா? நம்முடைய ஜாதியில் விதவைகளே விவாகம் செய்துகொள்ளக் கூடாதே. அதுதான் போகட்டும் கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்று நினைத்து நடக்கக் கூடாதா' என்றெல்லாம் பிரசங்கிக்க ஆரம்பித்துவிட்டாள். எனக்கு என் தாய் கூறினவை ஒன்றுமே பிடிக்கவில்லை. ஆதலால், அவர்களிடம் வீண் வாதம் செய்வதில் யாதொரு பலனும் இல்லை என்று எண்ணி அவ்வறையை விட்டகன்றேன்.

ஒருவிதத்திலும் எனக்குச் சமாதானம் வரவில்லை. என்ன செய்ய வேண்டுமென்று புலப்படவில்லை. மற்ற பெண்களைப்

போலிராமல் என் தந்தையாரிடம் நேரிலேயே எனது எண்ணத்தைக் கூறிய பின்னரும் அவர் எனது கோரிக்கையை மறுத்ததுமின்றி வெறுத்தும் பேசிவிட்டனர். அவருடைய எண்ணத்திற்கு மாறாக நடப்பதற்கும் மனம் வரவில்லை எனினும் விவாகம் செய்து கொள்ளாது இருப்பதும் முடியாத காரியமென்று தோன்றிற்று. எவ்விதத்தில் பார்த்தாலும் கஷ்டத்திற்கே இடையாயிருக்கும் நான் இருப்பதைவிட இறப்பதே நலனென்றெண்ணலானேன்.

அன்றிரவு பன்னிரண்டு மணி இருக்கும். எங்கும் கொடிய இருள் சூழ்ந்திருந்தது. வானத்தின்கண்ணுள்ள தாரகாகணங்கள் நெருப்புப் பொறிகளெனத் விளங்கின. உலகத்தார் யாவரும் துயிலும் அவ்வேளையில் நான் வீட்டைவிட்டு வெளியேறினேன். வீட்டை விட்டிறங்கியதும் பெருமூச் சொன்றெறிந்துகொண்டு ஒரு முறை வீட்டைப் பார்த்தேன். என்னுடல் நடுங்கிற்று. கண்களில் நீர் பெருகவே அவைகள் ஒளி இழந்தன. கண்ணீரை உதறித் தள்ளிவிட்டு வடக்கு நோக்கி விரைவாக நடந்தேன். நடந்த வேகத்தினால் என் கூந்தலவிழ்ந்துவிழ அதையும் வாரிமுடிக்காது விரைந்து நடந்து சிறிது நேரத்தில் எங்கள் ஊரின் வட எல்லையிலோடும் காட்டாற்றின் ஓரத்தில் வந்து சேர்ந்தேன். அவ்வாற்றின் இரு பக்கங்களிலும் கமுகு, தென்னை, மா, பலா முதலிய மரங்களடர்ந் திருந்தமையால் மற்ற இடங்களைவிட அங்கு இருள் அதிகமாகவிருந்தது. காட்டாற்றில் தண்ணீர் அதிவேகமாக ஓடினமையால் சோவென்ற சத்தம் அவ்வாற்றைச் சுற்றிய இடங்களிலெல்லாம் பரவி இருந்தது. இரவு பன்னிரண்டு மணி வேளை; எங்கும் கொடிய இருள்; காட்டாற்றில் கரைபுரண்டோடும் தண்ணீரின் சோவென்ற சத்தம்; இவைகளினிடையே தனிமையாக நின்ற எனக்குப் பயம் அதிகரித்தமையால் நடுக்க முண்டாயிற்று. சிந்தனா சக்தியையும் இழந்ததுபோல் தோன்றிற்று. ஆயினும், நான் எதற்காக அங்கு வந்தேன் என்பதை மட்டும் மறக்கவில்லை. புடவையை நன்றாகக் கட்டிக்கொண்டேன். அச்சமயத்தில் என்னுள்ளேயே ஒருவித உணர்ச்சி தோன்றிற்று. 'நான் ஏன் ஆற்றில் விழுந்து தற்கொலை புரியவேண்டும்' என்ற எண்ணம் உண்டாயிற்று. அதற்குமேல் அங்கு நிற்பதற்கு என்னால் இயலவில்லை. என் கால்கள் என்னை வீட்டிற்கு விரைவில் அழைத்துச் சென்றன. ஆகவே, வீட்டிலேயே, பெற்றோர் சொல்படி நடத்தல் என்றும் விலங்கினால் பிணிக்கப்பட்டு எனது நாட்களை அடிமைபோல் கழிக்க வேண்டியதாயிற்று. அந்தோ! என்னைப்போல் உலகில் எவ்வளவு பெண்கள் ஆசாரத்திற்கும், தாய் தந்தையர்களின் விருப்பத்திற்கும் இசைந்து, தங்கள் சுதந்திரத்தை இழந்து வருகின்றனரோ!

---

# மூட பக்தி

[குமாரன்]

எனது அன்புள்ள கமலாவுக்கு,

தோழீ! இந்தமாதிரி கடிதங்கள் எழுதத் தொடங்கியதிலிருந்து ஒரு பரீட்சார்த்தமாக நானும் பார்க்கிறேன்—ஓய்வு என்பதே எனக்குக் கிடைப்பது அரிதாகி விட்டது. சதாகாலமும் வெளியிலேயே சஞ்சாரஞ் செய்யும் என் கணவர்கூட இப்போது சில தினங்களாக வீட்டிலேயே இருந்து வருகிறார். குழந்தைக்கும் உடம்பு ஒரு நாள் இருந்தாற்போல் மறு நாள் இருப்பதில்லை. ஓயாமல் அதன் பச்சையுடம்பிற்கு ஏதாகிலும் வந்துகொண்டுதானிருக்கிறது. இன்னொன்று பார்; முன்னெல்லாம் என் மாமியார் அடுத்த வீட்டிற் கென்றும், கோவிலுக் கென்றும், குளத்திற் கென்றும் எங்கேயாவது போய்க்கொண்டிருப்பார்கள். இப்போது வீட்டைவிட்டு அசைகிறதேயில்லை. என்னதான் நான் படித்தவளாயிருந்தாலும் அவர்கள் முன்னிலையில் பேனாவுங் கையுமாக உட்கார முடிகிறதா?

அடடா! என்னமோ கதையை வளர்த்திக்கொண்டு போய்விட்டேனே. இப்படித்தான் வீட்டுத் தொல்லைகளைப்பற்றிப் பேசிக்கொண்டு போனால் நேரமே தெரிகிறதில்லை; எழுத ஆரம்பித்தாலும் வரிகள் முடிவு காணாது ஓடிக்கொண்டேயிருக்கும்.

ஒரு வெள்ளிக் கிழமையன்று நான் கோவிலுக்குப் போனபோது பூனையொன்று குறுக்கேயோடிற்று. உடனே நான் கொஞ்சம் பயந்தேன்; என்ன அபாயம் வரப்போகிறதோ என்று கலங்கினேன். ஏனென்றால், இது அபசகுனமென்று நம் முன்னோர்களெல்லோரும் கூறியிருக்கின்றனரன்றோ? ஆனாலும், நான் என் சொந்த மனோதர்மத்தைக்கொண்டு உள்ளெழுந்த கலக்கத்தை ஒருவாறு நீங்கச்செய்து, ஆலயத்தை நோக்கி நடந்தேன். ஆலயத்தினுள் கொஞ்சம் இருட்டாயிருந்த ஓரிடத்தில் கிடந்த சிறு கல்லொன்று என் கால் விரல்களில் மோதிக் காயப்படுத்திவிட்டது. உடனே பூனை குறுக்கானது என் நினைவிற்கு வந்தது. அப்போது என் ஏழை நெஞ்சம் 'ஆஹா! பூனைக் குறுக்கிட்டதை அலட்சியஞ் செய்து வந்ததாலல்லவா இவ்விபத்து சம்பவித்தது.' என்று எண்ணத் தொடங்கியது. ஆகவே, கமலா! இந்தமாதிரியான விஷயங்களிலுள்ள நம் நம்பிக்கையைக் குறித்துக் கொஞ்சம் ஆராயலானேன். நான் அவ்வாறு ஆராய்ந்து கண்ட சில உண்மைகள்தான் ஈண்டு வரையப்படுவை.

அறியாமையாலும், புத்தியீனத்தாலும் ஒருவன் சகுனங்களிலும், மாந்திரீகத்திலும், துர்த்தேவதைகளிடத்தும் நம்பிக்கை

கொள்கிறான். இதை மூட நம்பிக்கை, மூட பக்தி என்று தான் சொல்ல வேண்டும். வலுவற்ற உள்ளத்தில் எழும் மதம் மூட பக்தியே (Superstition is the religion of feeble minds-Buke) எனப் பர்க் என்ற பெரியார் சொல்லி யிருக்கிறார். ஆனால், இப்போது யாராவது ஏதோ ஒரு வகையிலேனும் மூட பக்தியின்றி இருந்து வருகிறார்களா? இல்லை. நம்முடைய முன்னோர்களை நாம் முட்டாள்கள் என்று கருதுகிறோம்; ஏனென்றால் அவர்கள் மாந்திரீகத்திலும், பில்லி சூனியத்திலும், துஷ்ட தேவதைகளிடத்திலும் அதிக நம்பிக்கைகொண் டிருந்தார்கள். ஆனால், இப்போது நம்மில் எத்தனை பேர் அத்தகைய மூட நம்பிக்கையில்லாதவர்கள் என்று பெருமை பாராட்டிக் கொள்ளக்கூடும்?

இன்றைய நாளிலே பூத பௌதிக சாஸ்திரங்களிலே மக்கள் துருவித் துருவி ஆராய்ந்து என்னென்ன அதிசயங்க ளெல்லாமோ கண்டு பிடித்திருக்கின்றனர். இக்காலத்திலே பல்வேறு வகை சாதனக் கருவிகளும், யந்திரங்களும் தோன்றி மனிதனையே மலைக்கச் செய்து விட்டன. இதனாலேயே இக்காலத்தவர்களுக்கு மதுரை வீரன் போன்ற கிராம தேவதைகளின் சக்தியிலும், மந்திர பலத்திலும் உள்ள நம்பிக்கை குறைகிறது.

'நாங்கள் எல்லோரும் மூட நம்பிக்கை யற்றவர்கள்; பேய் பிசாசுகள் என்றால் நாங்கள் நம்ப மாட்டோம்' என்று மேல் நாட்டார்கள் பெருமை பாராட்டிக் கொள்கிறார்கள். அவர்கள் விஞ்ஞானக்கலையில் முன்னேறி யிருக்கின்றனர். எனினும், அவர்கள் எல்லோரும் மூட பக்தி முதலியவற்றை அறவே ஒழித்து விட்டார்கள் என்று எண்ணிவிட முடியுமா?

இப்போது நாம் நம்மைப் பெருமை பாராட்டிக்கொள்ள வேண்டுமானால், நம்முடைய முன்னோரைச் சூழ்ந்திருந்த அவ்வளவு வலுவான மூட பக்தி நம்மைப் பிடித்துக் கொண்டில்லை என்றுதான் சொல்லலாம். மிக மோசமான, அற்பமான கொள்கைகளில் நாம் மூட நம்பிக்கை கொள்ள வில்லை யென்றால், வேறொரு ரூபத்தில் அது நம் உள்ளத்தைப் பற்றத் தயாரா யிருக்கிறது. மூவர் சேர்ந்து ஒரு சுப காரியத்திற்குப் புறப்படக்கூடாது என்கிறோம். மூன்று பாத்திரங்களில் சேர்ந்தாற்போல் தண்ணீர் வைக்கக்கூடாது என்கிறோம். செவ்வாய்க்கிழமை, இராகு காலம் என்றெல்லாம் கிழமை மீதும் காலத்தின் மீதும் குற்றஞ் சுமத்துகிறோம். இதெல்லாம் மூட பக்தி மூட நம்பிக்கைகளின் விளைவுதானே!

இதற்கெல்லாம் யாது காரண மெனில், பிரபஞ்ச முழுவதையும் நாம் அறியாதிருப்பதே. விஞ்ஞானக் கலைகளில் நாம் பெரிய மேதாவிகளாய் விடினும், பிரபஞ்சத்திலுள்ள அடிப்படையான உண்மைத்



தத்துவங்களை நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை. நம் முன்னோர்களைப்போலவே நாமும் இந்தப் பரந்த வுலகத்தை ஆட்டிவைக்கும் அந்தப் பரம்பொருளை அறியாதவர்களா யிருக்கிறோம். நம்மைச் சுற்றிலு முள்ள பொருள்களின் வெளியமைப்புகளைக்கூட நம்மால் சரிவர அறிந்துகொள்ள முடியவில்லை. இந் நிலையில் அவற்றின் உட்புற விசித்திரங்களை நாம் எவ்வாறு உணர்ந்து கொள்ளக்கூடும்?

அறியாமை நிச்சய மின்மைக்கு இடந் தருகிறது. நம்மால் அறியவொண்ணாதவைகளை நாம் இல்லை யென்றே தீர்மானிக்க முயலுகிறோம். நாம் எதிர்பார்த்திராத ஒரு பொருள் நமக்குக் கிட்டிவிட்டால் உடனே அதிர்ஷ்டம், யோகம், அவரவர்கள் செய்த புண்ணியம் என்றெல்லாம் சொல்கிறோம். முடிவில் இதுவே மூட நம்பிக்கைக்கு அஸ்திவாரமாகிறது. ஆனால், அறியாமையில்தான் மூட பக்தி பிறக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆதலால் மூட பக்தி என்னும்போது நாம் வெட்கித் தலை குனிகிறோம்.

கமலா! இந்த ஒரு வகையில்தான் நாம் இப்போது முன்னேறி யிருக்கிறோம். முன்னோர்கள் மூட நம்பிக்கையை ஒப்புக்கொள்ள வெட்கப் படுகிறோம். அதனால் நம்முடைய மூட பக்திக்கு நாம் ஏதேதோ சில புத்திசாலித்தனமான சமாதானங்கள் சொல்ல முற்படுகிறோம்.

எனவே, மூட பக்தி, மூட நம்பிக்கை யெல்லாம் அறியாமையால் உண்டாவதே. மனிதன் மனிதனுக்குள்ளே அறிவோடு இருக்கு மட்டும் பிரபஞ்சப் புதிர்களை அவனால் விடுவிக்க முடியாது. அவனுடைய மூட பக்தியும் மறையப் போவதில்லை.

கமலா! என் மனதிற் பட்டதை யெல்லாம் என்னமோ எழுதி முடித்து விட்டேன். இனி உன் அபிப்பிராயத்தைக் கூடிய விரைவில் தெரிவிப்பாயாக.

இங்ஙனம்,

சிவகாமி.

---

உபாத்தியாயர்:—அடே கிட்டு, காலணாவிற்கு மூன்று பை யென்றால், ஒரு ரூபாய்க்கு எத்தனை பை?

கிட்டு:—போங்க சார், எந்தக் குருடனும் காலணாவிற்கு மூன்று பை கொடுக்கவே மாட்டான். —சி. சோம கண்ணப்பா.

தாய்:—சூரியன் அஸ்தமிக்கா விட்டால் என்ன காண முடியாது?

மகன்:—சினிமா காண முடியாது. —பி. வி. மோஹன்

# தலை விதியா மதி யின்மையா?

[த. கிருஷ்ணபுரம். G. கண்ணுசாமி கிராமணி]

ஓர் காரியம் திடீரென்று முடிந்த பிறகு கூறுவது தலை விதி என்று சிலர் கூறுவர். விதி வலிது! யாரால் தடுக்க முடியும்! அன்று எழுதினவன் அழித்தெழுதப் போவதில்லை என்றும் சிலர் வெகு சுலபமாகச் சொல்லி விடுகிறார்கள்; எல்லாம் தலைவிதிபோல் தான் நடக்குமென்று எண்ணி, மனம்போன போக்கில் நடந்து, கடைசியில் அதோகதி யடையும் சில ஆடவர்களும், பெண்களும் உண்டு.

முன்பின் யோசியாமல் தலைவிதி என்று நம்பி எத்தனைக் குடும்பங்கள் நாசமடைந்தன; எத்தனை இளமங்கையர் விதவை யாயினர்; விதியே என்று ஏக்கமுறும் வாலிபர்கள், பால்ய மங்கைகள் எத்தனைப் பேர் இருக்கின்றனர்?

தலைவிதியை நொந்து, ஏன் வாலிப மங்கையர், பண ஆசைப் பிடித்த, தங்கள் பெற்றோர் சொற்களைக்கேட்டு, சக்தியற்ற கிழவனை மணப்பது? இது தரும நீதியாகுமா? யாராவது, பெற்றோரைக் கண்டு 'உங்கள் பெண் ஏன் சீக்கிரத்தில் விதவையானாள்' என்று கேட்டால், பெற்றோர்கள் தன் பெண்ணுடைய தலைவிதி, பாழும் பிரம்மன் அப்படி எழுதி விட்டான் என்று உடனே பதிலளிப்பார்கள். அந்தோ என்ன மதியீனம்!

எல்லாவித சக்தியையும், அறிவையும் அன்பு மயமாய் விளங்குகிற எல்லாம் வல்ல இறைவன் நமக்குக் கொடுத்திருந்தும், நம்மில் சிலர் தங்களுடைய குடும்பங்களையும், மனைவி, மக்களையும், பெற்றோர்களையும் எவ்விதத்தில் நடத்துவது, எப்படி போஷிப்பது என்று தெரியாமல், விதியை நினைத்து, மதியை யிழந்து மனம்போன போக்கில் நடக்கின்றனர். குற்றமுள்ள காரியங்களைச் செய்துவிட்டுத் தலைவிதி என்று சிலர் சாக்கு, போக்கு சொல்லி விடுகிறார்கள்.

எல்லா தேசங்களைப் போலவே, நமது இந்தியா தேசம், தற்போது ஸ்திரீகள், ஆண்களுக்கு முன், சரிசமான உன்னத பதவிகளைப் பெற்றிருந்தும் இந்தத் தலைவிதி பேய்த் தாண்டவ மாடிக் கொண்டிருக்கிறது. 'வருவது வந்தே தீரும்' என்று கூறுபவர் ஏன் சோதிடம் கேட்க வேண்டும்?

ஜாதி, மதபேதம், ஐக்கிய மில்லாமை, அடிமை யாட்சி, சிறைவாசம், சூது, நோய், குடி, களவு, சுவாமிக்குப் பலியிடுதல் என்னும் பாழும் கொள்கை, வேசியர் நட்பு, கொலை, கள்ளக் காதல், கூடா நட்பு, ஆண்டியாய் அலைவது, பகைத்தல் முதலிய எல்லாம் தலைவிதி



வசத்தால்தான் நடக்கின்றனவாம் என்று சிலர் கூறுவது மிக வியப்பா யிருக்கின்றனவே! என்னே அறியாமை!

மதி யில்லாமல் ஒருவன் தற்கொலை செய்து கொள்வதும் விதி வசமாம்; அவன் தற்கொலை செய்யும்போது உடனே அவ்வாபத்திலிருந்து அவனை நாம் மீட்டால், இன்னும் அவனுக்கு ஆயுள் இருக்கிறதென்றும், அவன் ஓலை கிழிய வில்லை என்றும் யோசியாமல் சிலர் கூறுவதையும் நாம் கேட்டிருக்கிறோம்; சமயத்திற்குத் தகுந்த மாதிரி வார்த்தைகளை மாற்றுகிறார்கள்.

ஓர் யுத்தத்தில் ஒரே நிமிஷத்தில் ஆயிரக் கணக்கான வீரர்கள் வெடிகுண்டுப் பிரயோகத்தால் மாண்டுப் போனார்களென்று வைப்போம்; தலைவிதி ஒன்றிருந்தால் யுத்தத்தில் இறந்தவர்கள் ஒரே நேரத்தில் பிறந்திருக்க வேண்டும்; அப்படி பிறந்திருந்தால்தான் ஒரே நேரத்தில் மாண்டுபோக வேண்டுமென்று கடவுள் அவர்களுடைய தலையில் பாழும் விதியை எழுதி வைத்திருப்பார்;

உண்மையில், சண்டையில் இறந்தவர்களுக்கு ஒரே வயதா யிருக்காது; இறந்தவர்கள் வெடி குண்டுகளால் மாண்டார்களே யொழிய தலைவிதி வசத்தால் இறந்திருக்க மாட்டார்களென்பது நமக்குத் தெரிகிறதல்லவா?

பிறப்பும், இறப்பும் எல்லா வுயிர்களுக்கும் சர்வ சாதாரணமாக விருக்கின்றன; ஆகையர்ல், மரணத்திற்குப் பயப்படுவது மதியீனமல்லவா?

'விதியை மதியால் வெல்லலாம்' என்று கூறுகிறார்கள். எந்த விதியை மதியால் வெல்லுவது? அறிவில்லாத காரியங்களைச் செய்வதனால்தான் பாழும் தலைவிதி வருகிறதாக மேற்கூறின வாக்கியத்தில் தெரிகிறது. அறிவில்லாமையைத் தலைவிதி என்று சில பெரியோர்கள் கூறினார்கள். நமது நுட்ப புத்தியினால் விதி என்று கூறப்படும் அறிவில்லாமையை வெல்ல முடியும்-தகாத காரியங்களைச் செய்துவிட்டுக் கடவுள் மேல் பழி சுமத்துகிறார்கள்.

தகுந்த ஆராய்ச்சி, விடா முயற்சி இவை இரண்டுமே தலை விதியை ஒழிக்க மருந்தாகும். நமது வாழ்வில் இன்பமும், துன்பமும் மாறி மாறியே வருகின்றன; ஆனால், மனத் தளர்ச்சி அடையக் கூடாது.

பால்ய விவாகத்தையும் இந்தப் பாழும் தலைவிதி ஆதரிக்கிறதாம். கலியாணமான இரண்டு மாதங்களுக்குள் 9 வயதுள்ள பெண் மரணமானால் தலைவிதி என்று தலையி லிடித்துக் கொள்கிறார்கள் பெண்ணின் பெற்றோர்கள்.

விதவையான பெண்கள் வேறோர் ஆடவனை விவாகம் செய்து கொள்ளக் கூடாதாம்; விதியை நினைத்து தங்கள் வாழ்நாளை, விவாகமின்றிக் கழிக்க வேண்டுமாம்' என்று சிலர் கூறுகிறார்கள்.

மனைவியை யிழந்தவன் மறு விவாகம் செய்து கொள்வது நீதியான முறையாம்! ஆண்களுக்கோர் சட்டமாம், பெண்களுக்கோர் சட்டமாம்!

நாம், விதவா விவாகத்தை ஆதரிக்க வேண்டும். பால்ய விவாகத்தை ஒவ்வொரு ஊரிலு முள்ளவர்கள் தடை செய்ய வேண்டும்.

கணவனை யிழந்த கைம் பெண்ணுக்கு விவாகம் செய்து வைப்பது மேன் மக்கள் கடமை. பால்ய விவாகத்தை அரசாங்கத்தாரே தடை செய்தால்தான் ஏற்படும்; பந்துக்கள் பால்ய விவாகத்தைத் தடை செய்வது பெற்றோருக்கு விரோதமாகத் தோன்றுகிறது.

நல்லது, கெட்டது என்று உணர பகுத்தறிவைப் பெற்றிருந்தும், உலர்ந்துபோன மரத்துக்குத் தண்ணீர் ஊற்றுவது போல் 60 வயதுடைய பணக்கார கிழவனுக்கு 18 வயதுடைய இளமங்கையைப் பணத்தாசையுடைய பெற்றோர்கள் அல்லது உறவினர்கள் கண்மூடித் தனமாய் விவாகம் செய்து விடுகிறார்கள்; ஒரு வேளை, 61 வது வயதில் கிழவன் இறந்தால் பெண் துர் அதிர்ஷ்டம் பிடித்தவ ளென்றும், 19 வது வயதில் பெண் விதவையாவா ளென்றும், அவள் தலைவிதி போல் நடந்ததென்றும் வெகு சுலபமாக நம்மில் சில பெற்றோர்கள் கூறுகிறார்கள்! அதே 18 வயதுடையப் பெண்ணை 25 வயதுடைய வாலிபனுக்கு விவாகம் செய்திருந்தால், ஏன் அப் பெண் விதவையாகிறாள்? சிலர் பள்ள மிருந்தும் பள்ளத்தில் விழுந்த பிறகு தலைவிதி என்று வாய்க் கூசாமல் பிதற்றுகிறார்கள்; இது பேதமை யன்றோ! சகல கலைகளையும் ஓதி யுணர்ந்த கற்பரசியை அறிவில்லாத குடியனுக்கு விவாகம் செய்விப்பது ரோஜா மலரைப் பைத்தியம் பிடித்தவன் கையில் கொடுப்பது போலல்லவா தெரிகிறது! பைத்தியம் பிடித்தவன் அம் மலரைக் கசக்கி எறிவானே யன்றி மலரின் வாசனையை நுகர மாட்டான்.

ஆண், பெண் இருபாலருடைய அபிப்பிராயங்களை உத்தேசித்தே, தக்க வயதில் விவாகத்தைச் செய்து முடிப்பதே தாய் தந்தையர் கடமையாகும்.

ஆண், பெண் இருவருக்கும் பெயர் இராசி, மணப் பொருத்தம், தாலி பொருத்தம் இவைகளைப் பார்த்து விவாகம் செய்விப்பது அறியாமையே; ஏனெனில், ஜோதிடம் சொல்லுகிறவனுடைய பெண்களே பால்ய வயதில் அமங்கலியாக இருக்கும் போது, மற்றவர்களிடத்தில் அமங்கலிய ஸ்திரீகளைக் காணப்படுவது வியப்பில்லையே!



நெல்லை வாரி நீரில்லாத நிலத்தில் விதைப்பதுபோல், விளையாட்டுப் பிள்ளைகளுக்கு விவாகம் செய்விப்பது வியப்பா யிருக்கிறதே! பெற்றோர்கள் இறந்து விடுவார்க ளென்ற பய மிருந்தால், அவர்கள் தங்கள் சிறு பிள்ளைகளுக் கென்று விவாகப் பண்டிலோ அல்லது பாங்கியிலோ பணம் கட்டிவிட்டால், பிள்ளைகளுக்கு எவ்வளவு உபயோகமா யிருக்கும். ஐக்கியமே குடும்பத்திற்கு லக்ஷ்மியைப் போன்றது.

ஒருவன் தன் அருமையான மனைவி யிருந்தும் வேசியர் நட்புக் கொள்வது, கண் பார்வை நன்றாய்த் தெரிந்தும் மூக்குக் கண்ணாடி அணிவது போலல்லவோ யிருக்கிறது! வேசியர் நேசத்தால் பல நோய்கள் வந்து அவனைத் தாக்கினால் தன் தலை விதி என்று பிதற்றுகிறான்.

ஓர் பெண் கணவனுடன் வாழாமல் தன் வீடு வந்து துர் நடத்தையாகக் காலங் கழித்தால், தன் தலைவிதி என்று கேட்போருக்குப் பதிலளிப்பாள்; கடவுளை நிந்திப்பாள்; என்னே விந்தை!

நாம், பிரயாணம் செய்தால் நமக்குப் பலவிதமானக் கஷ்டங்கள் ஏற்படும். நாம் பாதை வழியாக நடந்தோ, இரயில் மூலமாகவோ, கப்பல் மூலமாகவோ, ஆகாய விமான மூலமாகவோ சென்று, சீதோஷ்ண ஸ்திதியினால் உடம்பிற்கு ஏற்படும் மாறுதலை யடைந்து, குறிப்பிட்ட யிடத்தி லடைந்து பிரயாணத்தை முடிப்போம். அது போலவே நமது வாழ்க்கையில் பலவிதமான இடுக்கண்களும், நோய்களும் வந்தால் கஷ்டப்பட்டுத் தகுந்த வழியில் இல்லறத்தை நல்லறமாக மன உறுதியுடன் நாம் நடத்துவதே தகுதியான முறை.

இப் பாரத நாட்டின்கண் வசிக்கின்ற இந்திய சகோதர, சகோதரிகள் விதி என்று கூறப்படும் அறியாமையில் ஈடுபடாமல் விடா முயற்சியுடனும், ஆராய்ச்சியுடனும், மனம்போன போக்கில் நடவாமலும் ஒவ்வொரு காரியத்தையும் செய்து முடித்து, தங்கள் குடும்பத்தையும், தேசத்தையும் பாதுகாப்பார்களாக.

---

பையன்:—அப்பா! நான் அடுத்த வீட்டுப் பையனுடன் போய் விளையாடிக்கொண் டிருக்கட்டுமா?

தகப்பன்:—கூடாது. அவன் எனக்குப் பிடிக்கவில்லை.

பையன்:—அப்படியானால் போய்ச் சண்டை போடுகிறேன்.

* * *

மாமனார்:—உமக்குச் சிறிதுகூடப் பணத்தின் அருமை தெரியவில்லை.

மாப்பிள்ளை:—தெரியவில்லையா! தெரியாமலா உமது பெண்ணை விவாகஞ் செய்து கொண்டேன் என்கிறீர்! —S. R. K. மூர்த்தி

# 'லக்ஷ்மிகாந்தன்'

[கே. பி. சிவம் மோகனார்]

## 'காதலின் வெள்ளம்'

'நேற்றுதானே அவ் வழியாகப் போனேன். எப்பொழுதும் அன்பாக இருப்பார்கள். அன்றையதினம் என்னிடம் கோபமாகப் பேசியதின் காரணம் இன்னும் தெரியவில்லையே. ரங்கநாதனோ உயிர்ச் சிநேகிதனா யிருந்தும் உள்ளரங்கத்தில் துர் எண்ணங்கொண் டிருக்கிறான். அவனுடைய சூழ்ச்சியாக இருந்தாலும் இருக்கலாம். நானும் அங்குக் காரணமின்றிச் செல்லாமல் இருக்க முடியவில்லை. என் செய்வேன். இப்படியும் எனக்கு வருமா. நாளைய சாயந்திரம் நிச்சயமாக அவளை'....என்று யோசித்துக்கொண்டே 30 வயதுள்ள ஒரு ஆடவன் தன் படுக்கையில் புரண்டவண்ணம் உறங்கி விட்டான். மணி இரவு 10க்கு மேலாகி விட்டது. மார்கழித் திங்கள். பனியும் ஊர் பூராவும் பரவி குடிசைகளில் இருக்கும் ஏழைகளை அதிகமாக வருத்தத் தொடங்கியது.

விடியற்காலையில் ஒரு ஆடவன் வழக்கம்போல் பனி பெய்தலையும் கவனியாது தலையில் ஒரு உல்லன் துண்டுடன் தன் மனதில் ஏதோ நினைத்துக்கொண்டு காவிரி ஆற்றை நோக்கி நடந்துகொண்டிருக்கிறான். அதே சமயத்தில் ஹரிஹரன் என்னும் 27 வயதுள்ள ஒரு ஆடவன் நாகரீகமான உடையில்லாமல் சாதாரண உடையுடன் அதிகச் சந்தடி யின்றி ஒரு தெருவில் புகுந்து, தெருவின் இடது பக்கத்தின் மத்தியிலுள்ள ஒரு வீட்டின் சாளரத்தின் வழியாக 'லக்ஷ்மிகாந்தா, சீக்கிரம் எழுந்திரு' என்று சொல்லியவுடன் அவ்வறையில் படுத்திருந்த ஆடவன் திடீரென எழுந்து 'மணி கோபிக்காதே. நான் குற்றம் செய்தவனல்லன்' என்று சொல்லி முடிப்பதற்குள், ஹரிஹரன் சிரித்த வண்ணம்' 'மணி இங்கில்லை. எழுந்துவா சீக்கிரம்' என்றான். இதைக்கேட்ட ஆடவன்தான் லக்ஷ்மிகாந்தன் என்பவன். மேலே விவரித்திருப்பதும் இவனைப் பற்றித்தான். உடனே லக்ஷ்மிகாந்தன் மனத் திகிலுற்று தனது ஆடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு வெளியேவர இருவரும் அதே காவிரி ஆற்றை நோக்கிப் பின்வருமாறு பேசிக்கொண்டே போகிறார்கள்.

ஹரிஹரன்:—நான் என்று தெரியாமல் மணி என்கிறாயே. இன்னும் உனக்குப் புத்திவரவில்லை போலிருக்கிறது.

லக்ஷ்மி:—இல்லை. நான் ஏதோ உளறி விட்டேன். நான் அங்கு போய் ஒரு மாதத்திற்கு மேலாகிறது.



ஹரி:—நீ அங்குப் போவதும் இல்லை. மறந்தும் விட்டாய். சரி உன்மேல் அவள் அதிகக் காதலாக........

லக்ஷ்மி:—நான் அதைப்பற்றி என்ன சொல்வேன். ஆஹா! போதும். என்று சொல்லிக்கொண்டே இருக்கும் பொழுது முன்னால் நடக்கும் ஒரு சம்பவத்தைக் கண்டு சடக்கென்று கால்வாய்க்குப் பக்கத்திலுள்ள அரச மரத்தடியில் இருவரும் பதுங்கினார்கள்.

தலையில் உல்லன் துண்டுடன் சென்றவர்தான் (அவ்வூர்) காமராயபுரம் கொழுத்த மிராசுதார், பழனி நாதன் குமாரரான லோகரக்ஷகன் B. A., 'தான் எண்ணிய எண்ணம் பாழாகும்படி அந்த உபாத்தியாயனான லக்ஷ்மிகாந்தன் செய்தானே. இனிமேலே நான் அவளை மணப்பேன்' என்று எண்ணிக்கொண் டிருக்கையில் அவன் முன் அழகிய மாது எதிர்பாராமல் வருவதைக் கண்டு கொஞ்சம் நான் யாரென்று உற்றுக் கவனித்தேன். அதே சமயத்தில் மனோன்மணி என்னும் பெண் 'வள்ளிமணவாளா' என்ற கீர்த்தனையை ஷண்முகப்பிரியா ராகத்தில் முணுமுணுத்துக் கொண்டே குமரஷண்முகனை நினைத்து மனதுருகித் தனது நிலைமையை நினைத்துக் கொண்டு வந்தவள் திடீரென லோகரக்ஷகனைக் கண்டதும் தனது மேலாடையையும், கீழாடையையும் சரிப் படுத்திக்கொண்டு கீழே குனிந்தவண்ணம் நின்றாள். லோகரக்ஷகன் முதலிலேயே மனோன்மணியின்மேல் காதல் என்ற விதையை விளைத்தவனாதலால் தனது இருதயத் துடிதுடிப்பை நாகரிகம் என்ற கனத்த பாரத்தினால் மெதுவாக ஓடச் செய்துவிட்டு 'என்ன மணி; பழம் நழுவி பாலில் விழுந்து விட்டதா? ஊராருக்கு இடம் கொடுத்து விட்டாயே'

ம-மணி:—என் செய்வேன் ஏழை. உம்மையே சதமென்று எண்ணியிருந்த எனக்கு 'நீரே இன்பந் தருவீர் என்ற வார்த்தையை ஐயோ! இழக்க நேர்ந்ததே. நான் எவ்விதமாக உம் மனதையும், ஊரார் மனதையும் மாற்றுவேன். ஆ! இப்படியும் நேருமோ எனக்கு?

லோகரக்ஷகன்:—என்ன மணி! ஏன் இவ்விதம் பயப்படுகிறாய்: நடந்தது நடந்தேறிவிட்டது. உன் நிலைமை என் மனதைத் தீயினிவிட்ட புழுப்போல் துடிதுடிக்கச் செய்கிறது.

ம-மணி:—என் செய்வேன். என்னை மன்னியுங்கள். லக்ஷ்மிகாந்தன் என்னைப் பலவந்தப் படுத்தியது உண்மையேயானாலும் நானிணங்கியவ ளல்ல. அவரும் அன்றைய தினத்தி லிருந்து எங்கள் வீட்டின் பக்கம் வருவதே இல்லை. உங்களிடம் உண்மையையே சொல்லி விட்டேன். நீங்களோ அறிவாளி என்ற உலகத்தி லொருவர்.

லோக:—'நானவ்விதமாக நம்பிக்கொண்டாலும் ஊர் வாயை மூடுவது யார். இது சுலப விஷயம். நான் இச் சங்கதியைக்

கேள்விபட்டவுடன் தை மாதம் உன்னை மணக்க விருந்த மனக்கோட்டையை மாற்றி இன்னும் இரண்டு ஆண்டு கழித்து மணம் செய்து கொள்ளலா மென்ற முடிவுக்கு வந்துவிட்டேன். ஹூம். என் எண்ணத்தில் மண்ணைத் தூவிய பாதகி என்று சொல்வதற்குத் தடையுமுண்டோ' என்று சொல்லிக்கொண்டே, கோபமாக ஆற்றைக் நோக்கி நடந்தான். நம் பேதையான கோதை மணியும் அவன் போகும் திக்கை, நிமிடநேரம் ஏக்கத்துடன் பார்த்துவிட்டுக் கண்களில் நீர் ததும்ப, விடியும் நேரமாகி விட்டதே என்ற திகிலும் உந்த அவளுடைய கால்கள் அவளை அறியாமலேயே வீட்டை நோக்கி நடக்க வாரம்பித்தன.

இவர்களிருவரும் இவ்வாறு பிரிந்ததைக் கண் சிமிட்டாமல் பார்த்துக்கொண் டிருந்த நம் ஆசிரியர் லக்ஷ்மிகாந்தனும், ஹரிஹரனும் அவர்கள் பேசியதை நன்கு யறிந்துகொள்ள முடியாவிட்டாலும், லோகரக்ஷகன் அவளை வெறுத்து விட்டான் என்பதை மட்டும் அவர்கள் குறிப்பாலுணர்ந்து கொண்டார்கள். லக்ஷ்மிகாந்தன் உடனே அசைவற்று நெடு மரம்போல் நின்றுவிட்டான். 'ஒன்று மறியாத பேதையாகிய என்னாலன்றோ மணிக்கு இவ்விதம் நேர்ந்தது. நான் சகோதர வாஞ்சையுடன் நேசித்த மணிக்கு இவ்விதத் துன்பமும் வருமோ. அறிந்தேன் உலக வழக்கத்தை. உபாத்தியாயன் என்ற முறையும் தவறி மணியிடம் சாகஸம் செய்து விட்டேன் என்று எல்லும் உலகம் என்னே! நான் உண்மையைச் சொன்னாலும் நம்ப மாட்டார்கள். ஆஹா! முதலிலேயே நான் அப் பெண்மணிக்கு குரு என்ற மரியாதை செய்யும்படி அவ்விடம் சென்று கல்வி கற்பித்திருத்தல் கூடாது. என் மனதில் ஒரு மாசும் இல்லை. கடவுளே என்னைப் பொய்யனாக்க வேண்டாம். உனக்குப் பிரிய மில்லாவிடில் நான் இப்பொழுதே தற்கொலை செய்துகொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், என் மனைவி மக்கள் கதி என்னவாகும்' என்று எண்ணிக்கொண்டே ஹரிஹரனைப் பார்த்து 'நண்பா நீயுமா என்னை நம்ப மாட்டாய்' என்று கண்களில் நீர் ததும்பக் கதறினான். இதைக்கேட்ட ஹரிஹரன் சற்று மனக் கிலேசமடைந்து 'ஏதோ மர்ம மிருக்க வேண்டும். ஊராரும் லக்ஷ்மிகாந்தன் செய்தது தவறெனக் குற்றம் சாட்டுகிறார்கள். இவனோ குற்றம் செய்யாதவனைப்போல் தோன்றுகிறான். எதற்கும் யோசித்துப் பார்ப்போம்' என்று நினைத்துக்கொண்டே ஆற்றிற்குச்சென்று பல் துலக்கிய பிறகு அவரவர் வீடுகளுக்குச் சென்றார்கள்.

## எதிர்பாராத சம்பவம்

கடவுளின் சோதனையை நம்பாதார் யாருளர். நான் பல பேரால் நன்கு மதிக்கப்பெற்று யாது பயன். லோக ரக்ஷகனுடைய



கலியாணத்திற்காக மூன்று மாதத்திற்கு 'முன்னால் தேடிவைத்த பொருள்கள் எல்லாம் வீட்டில் தூங்கிக்கொண் டிருக்கின்றன. உள்ளூரில் கல்யாணம் செய்துவிட்டால் நன்றா யிருக்கு மென்று நினைத்ததை மாற்றும்படி அந்தப் பயல் செய்துவிட்டான். அவர் செல்வாக்கும் உள்ளவர், அதுவுமன்றிக் கிராமத் தலைவர் (முன்சிப்பு) அவருக்கும் ஒரு பெண், நமக்கும் ஒரு ஆண். சம்பந்தம் செய்து விட்டால் பலவிதத்திலும் நன்மை. இப்பொழுது பலவிதத்திலும் கெடுதலாகவல்லவா முடிந்தது' என்று யோசித்துக்கொண்டே நமது லோகரக்ஷகனின் தகப்பனார் பழனிநாதன் அவர்கள் சேலம் ஜில்லா போர்டு ஆபீசில் ஒரு நாற்காலியில் மனக் கவலையுடன் உட்கார்ந்தார். மாசி பங்குனி மாத மானதால் கொஞ்சம் வெய்யில் அதிகரித்தது. பகல் 2 மணி யிருக்கும். தனது உருக்கத்தைப் போக்க உடனே எழுந்து சுவற்றிலுள்ள ஒரு விசையை அழுத்த அவர் தலைக்குமேல் தொங்கிக்கொண் டிருந்த காற்றாடி சுழன்று அவர்மேல் காற்று படும்படி செய்து தேகத்திற்கு ஆரோக்கியத்தை உண்டாக்கியது.

அதே சமயத்தில் வெளி வாயிலில் யாரோ வரும் சத்தம் கேட்டது. உடனே எழுந்துசென்று 'வாருங்கள், வந்து உட்காருங்கள்' என்று முகமன் கூறினார். வந்தவர் தான் ஜில்லா போர்டு தலைவர் பாஷியம் B. A., M. L. C. அவரும் புன்சிரிப்புடன் தான் உட்கார வேண்டிய இடத்தில் உட்கார்ந்தார்.

நமது பழனிநாதன் நல்ல பணக்காரர். பெருங் குணம் படைத்தவர். அவர் சேலம் ஜில்லா போர்டு மெம்பராகப் போட்டியின்றித் தேர்ந் தெடுக்கப்பட்டவர். அவரிடத்தில் நமது பாஷியம் அவர்களுக்கு அதிக அன்பு உண்டு. அவர் தலைவரானதும் அவருடைய முயற்சியால் தான்.

அவர்களிருவரும் 5 நிமிட நேரம் ஆபீஸ் விஷயங்களில் மனதைச் செலுத்திய பொழுது ஜில்லா போர்டு தலைவரின் மகள் லோகாம்பாள் என்னும் 7 வயதுள்ள பெண் அங்கே வந்தது. அப் பெண்ணின் முகத்தைக் கண்டதும் பாஷியம் அவர்கள் ஏதோ நினைத்துக்கொண்டு சடக்கென்று 'நம் லோகரக்ஷகனுக்கு ஏன் இன்னும் கலியாணம் ஆகவில்லை. தை மாதமே முடிப்பதாக ஏதோ செய்துகொண் டிருந்தீர்களே' என்று பழனிநாதன் அவர்களைக் கேட்டார்.

அப்பொழுது அறையில் ஒருவருமில்லை, இவர்கள் இருவர் தானிருந்தார்கள். எலெக்டிரிக் காற்றாடியின் சத்தமும், மேஜையில் வைத்திருக்கும் கடியாரத்தின் ஓசையும்தான் கேட்டது.

உடனே நம் பழனிநாதன் பெருமூச்செறிந்து உபாத்தியாயர் லக்ஷ்மிகாந்தன் விஷயத்தையும் இன்னும் அதைப்பற்றிய எல்லா

விஷயங்களையும் நன்கு எடுத்துக் கூறினார். உடனே பாஷியம் அதிக கோப மடைந்து, டைப் அடிக்கும் மெஷினைத் தானே எடுத்து 'லக்ஷ்மிகாந்தன் என்ற உபாத்தியாயரைக் காமராயபுரம் போர்டு ஸ்கூலிலிருந்து காட்டூர் போர்டு ஸ்கூலுக்கு உதவி உபாத்தியாயராக நியமிக்கப்பட்டது' என்று ஒரு உத்தரவை அடித்து தன் கையெழுத்திட்டு ஒரு கவரில் போட்டு லக்ஷ்மிகாந்தனுக்கு உடனே அனுப்பும்படி தன் வேலைக்காரனிடம் கொடுத்தனுப்பினார். உடனே வேலைக்காரனும் தனக்காக கொடுத்திருக்கும் துவிச்சக்கர வண்டியிலேறிக் கொண்டு கவரைத் தபால் பெட்டியில் கவனமாகப் போட்டுத் தபால் பெட்டியையும் ஒரு தட்டு தட்டிவிட்டுத் திரும்பி வந்துவிட்டான்.

இந்த எதிர்பாராத சங்கதி பழனிநாதனுக்குப் பிடிக்கவில்லையானாலும் காட்டூரில் இருந்து கொண்டுதான் அந்த உபாத்தியாயர் ஜீவிக்கட்டுமே. எங்கே யிருந்தாலும் சம்பளம் தானே என்று தன் மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டார். ஏனெனில் அவர் பிள்ளைக் குட்டிக்காரர் என்னும் ஏக்கம் போலும்! பிறகு இன்னும் சில விஷயங்கள் பேசிவிட்டு நம் பழனிநாதன் பாஷியம் அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தனது சொந்தக் காரில் ஏறிக்கொண்டு சாயந்திரமாக வீடு வந்து சேர்ந்தார்.

## நண்பர் நாயகம்

லோகரக்ஷகன் மனோன்மணியைக் கண்டு பேசிய மறுதினமே மாலை சுமார் 4½-மணிக்கு நல்ல உடை தரித்து வீட்டிற்குத் தெற்கு முகமாயுள்ள ராஜாபாட்டையில் நடந்துகொண்டு போனான். சடக்கென்று போனவன் கிழக்கு முகமாகத் திரும்பி அத்தெருவின் கடைசி மாடி வீட்டைக் கவனித்தான். கவனித்தவன் அதிக சந்தோஷமாய் அம்மாடி வீட்டை நெருங்கி 'நித்தியானந்தம், மேலேயா இருக்கிறாய்? நீ இருக்க மாட்டாய் என்று நினைத்தேன். மெத்தை ரூம் ஜன்னல் திறந்திருத்தலைக் கண்டு நான் வந்தேன்' என்று சொல்லிக்கொண்டே நித்தியானந்தம் இருக்கும் மெத்தைக்குச் சென்றான். நித்தியானந்தம் அவன் வருகையை ஜன்னல் வழியாகப் பார்த்தவனாதலால் 'வா, வந்து உட்கார்' என்று ஒரு நாற்காலியைக் காட்டி 'ஏன் நேற்று வரவில்லை. வா சீட்டு விளையாடலாம். என்ன ஆட்டம் ஆடுவோம். பிரிட்ஜ் ஆடலாமா அல்லது 108 விளையாடலாமா? ஒன்று சொல்' என்று மேஜையில் மேலிருந்த சிகரெட் பெட்டியை எடுத்து 2 சிகரெட்டை எடுத்து ஒன்று லோகரக்ஷகனும் மற்றொன்றைத் தானுமாகப் புகைப் பிடித்தார்கள்.

நித்தியானந்தம் என்பவர் அவ்வூர் அமிர்தலிங்கம் பிள்ளையின் ஏக புதல்வன். S. S. L. C. வகுப்பு வரைக்கும் படித்துவிட்டு அவ்



வூரிலேயே கிராம பஞ்சாயத்து (யூனியன் போர்டில்) குமாஸ்தாவாக இருக்கிறான். அவன், லோகரக்ஷகன். முதலில் கூறப்பட்ட ரெங்கநாதன் சௌந்தரி என்ற ஒரு பெண், இன்னும் சிலரும் ஒரே வகுப்பு மாணவ மாணவிகள். நமது லோகரக்ஷகனோ மேல் படிப்புக்குச் சென்றுவிட்டான். ரெங்கநாதன் 8-வது வகுப்பிலேயே பள்ளியை விட்டுவிட்டான். சௌந்தரியோ படித்துவிட்டு நின்றுவிட்டாள். மேற்கூறிய எல்லோரும் சகஜமாகவும் இருப்பார்கள். தங்களுக்குள் ஒருவித பேதமும் காட்டிக்கொள்ள மாட்டார்கள். யாவரும் சிநேகிதர்களாகவே யிருப்பார்கள். பிறகு நமது நித்தியாநந்தத்தைக் கவனிப்போம்.

நித்தியாநந்தத்தின் தேகம் மாநிறமா யிருந்த போதிலும் பார்ப்பதற்கு லக்ஷணமாகத் தோன்றுவான். ஆனால், மோகப் பருக்களினால் முகம் சற்று மாறி யிருந்தது. அகன்ற நெற்றியை யுடையவன். சூக்ஷ்ம புத்தி யுள்ளவன். உண்மையே பேசுபவன். எவ் விஷயத்தையும் எளிதில் அறியக் கூடிய சக்தி அதிகம் உண்டு. ஆனால், வோகமாக வில்லையே என்ற ஏக்கம். தான், அவ்வூரிலுள்ள பல பேர்களில் மொத்தத்தில் சந்தோஷமாய்க் காலம் கழிக்கும் பேர்வழிகளில் அவன் ஒருவன்.

சிகரெட்டை வாயில் வைத்ததும் லோகரக்ஷகன் பிறகு விளையாடுவோம். ஆனால், சங்கீதம் கேட்கப் பிரியப்படுகிறேன். தோடி ராகத்தை ஆலாபனை செய்து 'ஜேஸினதெல்லாம்' என்ற கீர்த்தனையைப் பாடு என்றான். உடனே லோகரக்ஷகன் திடுக்கிட்டு லோகரக்ஷகனின் முகத்தை ஒருமுறை பார்த்து 'என்ன ரக்ஷகா! ஏன் முகம் வாட்ட முற்றிருக்கிறது. பாட்டுப் பிறகு பாடுகின்றேன். ஏன்? என்ன காரணம்?

லோ:—ஒன்று மில்லை. எனக்கு எதற்காக முகம் வாட்டமுற்றிருக்கிறது? என்னை என்ன கேலி செய்கின்றாயா?

நித்தி:—நான் அறிவேன். என்னிடம் மறைக்காதே. மனோன்மணியின் விஷயத்தைப் பற்றித்தான். ஏன் அவளை நீ இப்பொழுது நேசிக்கிறதில்லைபோ லிருக்கிறது.

லோக:—அது ஊரறிந்த விஷயமாயிற்றே. அதைப்பற்றி எனக்கென்ன கவலை. அவளைக் கலியாணம் செய்து கொள்வேனென்று நினைக்கின்றாயா? மாட்டவே மாட்டேன். என் எண்ணத்தில் இடி விழும்படி அவனும் அவளும் செய்து விட்டார்களே! என்ற வருத்தந்தான். அதைப்பற்றி என்ன! முசிரி சுப்ரமணிய பாகவதர் பாடிய 'விரித்த செஞ்சடையாட' என்ற பாட்டை அவர் பாடியவாறே பாடு பார்ப்போம்.

நித்தி:—நண்பா! ஏன் என்னிடம் சொல்வதற்குத் தயங்குகின்றாய். என்னை, இரயில் வண்டியில் பிரயாணம் செய்யும்பொழுது ஏற்படும் சிநேகன் என்று நினைத்து விடாதே! இப்படி நீ பேசுவதைப்பற்றி நான் அதிக கவலைப் படுகின்றேன்.

லோக:—எனது ஆப்த நண்ப! அப்படி யொன்றும் நினைக்க வேண்டாம். நான் அந்த விஷயத்தை யெடுத்துப் பேச நினைத்தால் ஒரு பக்கம் கோபமும், ஒரு பக்கம் வருத்தமும் உண்டாகின்றது.

நித்தி:—நண்பா! நான் இருக்கும் வரைக்கும் உனக்கு வருத்தமென்பதே உண்டாகாது. அது நிச்சயம். வருத்தப்படாதே! உலக விஷயம் நன்கறிந்தவன் நீ. அது கிடக்கட்டும். அந்த உபாத்தியாயன் செய்தது உண்மை யென்று நினைக்கின்றாயா?

லோக:—என்ன அப்படிச் சொல்கிறாய். ஊராரறிந்த விஷயமாயிற்றே!

நித்தி:—நான் இவ்வளவு நாளாக அந்த விஷயத்தை அதிகமாகக் கவனியாததற்கு வருந்துகின்றேன். நான் அந்த விஷயத்தைப்பற்றி நாம் மனோன்மணியிடமும் லக்ஷ்மிகாந்தனிடமும் சென்று நேருக்கு நேராகத் தனித்தனி அவர்களிடம் நன்றாகக் கேட்டறிந்து கொள்ள வேண்டும். யோசனையும் ஆழ்ந்த ஆராய்ச்சியும் இன்றி ஒரு காரணமும் காரியமும் செய்தல் கூடாது. மனக் கிலேசம்படாதே! லக்ஷ்மிகாந்தன் அந்தக் குணம் படைத்தவனல்ல. இன்றைய சாயந்திரமே மனோன்மணியின் வீட்டில் போய் அறிந்து வருகின்றேன். மணியும் 6 ஆகிவிட்டது. வீட்டிற்குப் போ. நான் 8 மணிக்கு உன் அறைக்கு வருகின்றேன்.

பிறகு நம் லோகரக்ஷகன் 'சரி, போய் வருகிறேன். அதையினிமேல் கேட்டு என்ன பயன்' என்று சொல்லிய வண்ணம் தனது வீட்டிற்குச் சென்றுவிட்டான்.

நம் நித்தியானந்தம் நல்ல உடையணிந்து, தலையை வாரிக் கொண்டு, செருப்பைக் காலில் மாட்டிக்கொண்டு தனது அறையைப் பூட்டிவிட்டுப் புகைபிடித்த வண்ணம் வெளியே புறப்பட்டான்.

## 'காந்தனின் சாந்தம்'

மாலை 7 மணி. நட்சத்திரங்கள் வானத்திற் பிரகாசித்துக் கொண் டிருக்கின்றன. உஷ்ண காலத்திற்கேற்ப நல்ல சுகந் தரும்படியான தென்றல். பலகணி வழியாகச் சுகமாக வீசிக்கொண் டிருக்கின்றது. லக்ஷ்மிகாந்தன் தனது சாய்வு நாற்காலியில் யோசித்துக் கொண்டு படுத்தவண்ண மிருக்கின்றான். மனம் நொந்து படுத்திருக்கிறா னென்று அவன் முகம் நன்றாகக் காட்டி



யது. அதே சமயத்தில் அவன் அறையின் கதவின் சத்தம் திறக்கக் கேட்டது. உடனே திடுக்கிட்டெழுந்து யார் என்றான். 'முருகன் சார்' உங்களை ஜில்லா போர்டு மெம்பர் பழனிநாதன் அழைத்துக் கொண்டு வரச் சொன்னாங்க சார்.'

'இதோ வருகிறேன்' என்று சொல்லிவிட்டு நன்றாக உடையணிந்துகொண்டு 'எதற்காக என்னை அவர் கூப்பிட்டிருப்பார். எனக்கு அவரைப் பார்ப்பதற்கும் பயமாக இருக்கிறதே. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பார்கள். ஆனால், நான் அப்படிக் குற்றம் செய்தவனும் அல்ல' என்று நினைத்த வண்ணம் முருகனும், காந்தனும் பழனிநாதன் வீட்டை நோக்கிச் சென்றார்கள்.

ஜில்லா போர்டு ஆபீசை விட்டுவந்த நம் பழனிநாதன் மாலை 6 மணிக்கே வீட்டுக்கு வந்ததும் உடனே லக்ஷ்மிகாந்தனுக்கு அவனைக் காட்டூருக்கு மாற்றிய சங்கதியைத் தெரிவிக்கத் தனது பியூனாகிய முருகனை விட்டு அழைத்து வரும்படி அனுப்பினார். அவர் வந்த பிறகு 'லக்ஷ்மிகாந்தா உன் நிலைமை வருந்தத்தக்கதே. ஆனால், உன்னைக் காட்டூர் போர்டு பாடசாலைக்கு மாற்றிவிட்டதாக நாளைக்கு உத்தரவுவரும். அதனால் நீ அங்குச் சென்று சுகமாக இரு. ஊரார் இங்கு உன்னைத் தூஷிக்கிறார்கள்.'

லக்ஷ்மி:—அதற்கென்ன செய்வேன். உத்தரவுப் பிரகாரம் நடந்து கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், நான் நிரபராதி என்பதை நீங்களே சில நாளில் அறிவீர்கள். என் ஐயனே, நான் அபராதம் செய்யவில்லை என்று என் உயிரையே வைத்துச் சத்தியம் செய்வேன். ஆனால் நான் ஒரு காரியம் சொல்கிறேன். அஃதென்னவெனில் நான் நிரபராதி என்று ஊராரும் நீங்களுமறிந்து மனோன்மணிக்கும் உமது புதல்வனுக்கும் கலியாணம் நடப்பதைப் பார்த்துவிட்டுத்தான் காட்டூர் போவேன். நான் எனது வேலையை ராஜிநாமா செய்வதற்கும் அஞ்சேன். இது சத்தியம் சத்தியம் என்று கண்களில் நீர் ததும்பத் ததும்பக் கதறினான்.

ப-நா:—அது முடியாத காரியம். உனது இஷ்டப் பிரகாரம் செய். நானும் பார்க்கிறேன். நீ போய் வரலாம் என்று சொல்லிவிட்டு 'காந்தனோ நிரபராதி என்று அவன் கண்களே சொல்லுகின்றன. ஐயோ பாவம் யாருடையதோ தெரியவில்லை. கொஞ்சம் பார்ப்போம்' என்று யோசித்தவண்ணம் சாப்பாட்டு அறைக்குச் சென்றுவிட்டார். பிறகு அவர் வழக்கம்போல் சாப்பிட்டுவிட்டு, 'லோகரக்ஷகா, ஒரு கப் பால் குடி வா' என்றவுடன் லோகரக்ஷகன் தனது ரூமிலிருந்து சடக்கென்று எழுந்து வந்து ஐயாவிடம் ஒன்றும் பேசாமல் பாலை வாங்கிக் குடித்துவிட்டு நின்றான். அவர் தனது நாற்காலியில் உட்கார்ந்து கால்களை ஆட்டியவண்ணம் 'ரக்ஷகா அந்த உபாத்தியா

யரைக் காட்டுருக்கு மாற்றும்படி உத்தரவு நாளைக்கு வரும். அதைப் பற்றியும் சாயந்திரம் 7½-மணிக்கே அவனிடமும் சொல்லி விட்டேன். ஆனால், அவன் முகத்தில் குற்றக்குறி ஒன்றும் புலப்படவில்லை. உண்மை வெளிவரும் வரைக்கும் ஊரைவிட்டுப் போவதில்லை என்று சத்தியம் செய்துவிட்டுச் சென்றான். நாம் ஆதலால் நன்கு ஆராய்ந்து உண்மையை அறிய முயல வேண்டும்.

லோக:—ஆம் ஐயா! அறிவினர் சிலர்கூட அப்படித்தான் சொல்கிறார்கள். அவனைப்பற்றித் தப்பபிப்பிராயம் நம் நித்தியானந்தத்திற்குக் கூட இல்லை. ஏதோ சூதிருக்க வேண்டும்.

ப-நா:—அவன்மேல் நான் அதிகப் பச்சாதாபப் படுகிறேன். அதனால் தான் அவனைக் கண்டிக்கவும் முடியவில்லை. கோபிக்கவும் முடியவில்லை. இதைப்பற்றி நானே முயற்சி யெடுத்து உண்மையான விஷயத்தை அறிய வேண்டும்.

லோக:—ஐயா, இரண்டு நாளைக்கு முன்னதாகவே நித்தியானந்தம் இந்த விஷயத்தை மனோன்மணியிடம் தீர விசாரித்துச் சொல்வதாகச் சென்றான். ஆனால், அதற்குப் பிறகு நானும் அவனைப் பார்க்க முடியவில்லை. அவனும் என்னைப் பார்க்கவில்லை. நான் சேங்கல்லுக்குப் பல் வலியை டாக்டரிடம் தீர்த்துக் கொள்வதற்குப் போனதுபற்றித் தான் பார்க்க முடியவில்லை என்று சொல்லியவுடன் சுவற்றில் மாட்டி யிருக்கும் கடிகாரத்தில் மணி 10 அடித்தது. உடனே தகப்பனார் ரக்ஷகா அகாலமாய் விட்டபடியால் படுக்கைக்குச் செல். அப்புறம் யோசிப்போம் என்று சொல்லி வாய் மூடுமுன் வெளிக் கதவை யாரோ தடதடவென்று தட்டும் சத்தம் கேட்டது.

(தொடரும்)

---

ஓர் ஆங்கிலேயன்:—பெண்களுக்குக் கொஞ்சம்கூடச் சுதந்தரம் தராமல் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நாடு தமிழ்நாடு ஒன்றுதான்.

தமிழன்:—அப்படி உளராதேயும். ஆண்களைவிடப் பெண்களுக்கு நாங்கள் அதிக சுதந்தரம் கொடுத்திருக்கிறோம். ஆண்கள் உடுப்பது நான்கு முழத்துண்டு, பெண்கள் தரிப்பதோ பதினாறு முழச் சேலை. இம்மாதிரி நான்கு மடங்கு அதிகமான சுதந்தரம் வேறு எந்த நாட்டில் கொடுத்திருக்கிறார்கள்.

* * *

உபாத்தியாயர்:—ஆமை எத்தனை வகை இருக்கின்றன?

மாணாக்கன்:—இரண்டு வகைகளிருக்கின்றன. ஒன்று தீண்டாமை; மற்றொன்று பொறாமை.

# படுகுழி

[அரியநகர் C. M. உத்திராபதி]

அந்தி வேளை என்றால் எல்லோருக்கும் ஒரு ஆனந்தம்தானே! கதிரவனின் பொன்னிற தோற்றமும், குளிர்ந்த காற்றும், இன்னும் பற்பல இயற்கை காட்சிகளும் மக்களுக்கு மகிழ்ச்சி தந்தன. அவரவர்கள் தங்கள் குடும்ப பந்துக்களுடனும், சினேகிதி சினேகிதர்களுடனும் ஆண்களும் பெண்களுமாகக் கடலோரத்தை நோக்கி வந்துகொண் டிருந்தனர். அழகிய 16 வயதுடைய இளம் மங்கை யொருவள் கடலோரத்தில் தனிமையாக உட்கார்ந்து கொண்டு கடற் காட்சிகளைப் பார்த்து மகிழ்ந்தவண்ண மிருந்தாள்.

உலகத்தில் எத்தனை அற்புதங்கள் நடந்தேறி வருகின்றன. எந்த ஊரில் சோதாக் கூட்டங்களில்லை. எங்கும்தான் இருக்கிறார்கள்.

ஆதவனும் மேற்கடலில் மூழ்கினான். கொஞ்ச தூரத்திலிருந்து மேற்படி பெண்ணையே பார்த்துக்கொண் டிருந்த ஒரு வாலிபன் அவளை அணுகினான். அவள் அவனைக் கவனித்தாளில்லை. மெல்ல அவன் 'என்ன தேவகி! அதிக யோசனையோ!' என்று பல்லை இளித்துக் கொண்டே கேட்டான். அவன் ஊர்சுற்றி உமாபதி என்று தெரிந்துகொண்டு, தேவகி பேசாமலிருந்தாள். மீண்டும் அவன் 'என்னம்மா! பேசகூட மாட்டேன்கிறே! வாயைத் தொரந்தா முத்து எல்லாம் கொட்டிந்து பூடுமா!' என்றான்.

தேவகி:—'ஐயா மரியாதையாகச் சொல்கிறேன்! ஒரு பெண் தனியா யிருக்கும்போது இப்படி எல்லாம் வந்து பேசக்கூடா தென்று ஞாபக மிருக்கட்டும்'.

உமாபதி:—'என்ன இப்படி சொல்லிவிட்டாயே! தனியே ஒங்கிட்டே பேசவேண்டிதான் வந்தேன்' என்றான்.

தேவகி ஒன்றும் பதில் சொல்லவில்லை. மீண்டும் 'உம் தேவகி! நான் உன்னை அடிக்கடி பார்க்கிறேன்!....உன்னை பாத்தாக்கா எனக்கு என்னமோ மாதிரி இருக்குது! அதபத்திதான் கேக்கலான்னு இருந்தேன்....' என்றான்.

தேவகிக்குச் சடக்கென முகம் மாறியது. கோபத்தால் கண்கள் சிவந்தன. அவன் கருத்தை அறிந்து கொண்டாள். அவனை ஏற இறங்க முறைக்கப் பார்த்துவிட்டு 'ஜாக்கிறதையாகப் பேசு!' என்றாள்.

உமாபதி தலையைத் தடவிக்கொண்டே:—'கோவிச்சிக்காதே கண்ணு! நான் நெசத்த தானே சொல்றேன். அதோ பாரு! ஒரு ஐயாவும்—ஒரு அம்மாவும் எப்படி விளையாடுறாங்க 'அப்படி நாம் வெளையாடக் கூடாதா?

தேவகி:—'அட மூதேவியே! யாரைக் கண்ணு, மூக்கு' என்று அழைக்கிறாய். MSCC

உமாபதி:—'இல்ல தேவகி. நானு இதுவரைக்கும் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கேன். ஆனா உன்னைபோல் அழகா ஒருத்தியகூட பாத்ததில்லே. அதுக்குதா உன் மேலே ஆசைப்பட்டேன். இனிமே நான் கெட்டவனா யிருக்கமாட்டேன். சத்தியமா நான் கள்ளுகட வழியே இனி போவளே! சூது விளையாடுவதை இன்னிக்கே தல முழுவிட்டே. தெரிஞ்சுதா! எங்கே ஒரு முத்தம் கொடுக்க மாட்டியா!....' என்று மூச்சுவிடாமல் பேசினான். இதனைக் கேட்டதும் தேவகிக்கு ஆத்திரம் ஒரு புறம், சிரிப்பு ஒரு புறம் பொங்கி எழுந்தது. அதை எல்லாம் அடக்கிக்கொண்டு 'அடே! உன் வள்ளலெல்லாம் எனக்கு தெரியும். இதுவரைக்கும் நீ எத்தனைப் பெண்களின் கற்பை இப்படி கூத்தாடி, நயவஞ்சகமாய்ப் பேசி, சத்தியத்திற்குமேல் சத்தியம் சொல்லி கெடுத்திருக்கின்றாய் என்று தெரியும். காமப்பித்து பிடித்த நாயே! பெண்களைக் கண்டதும் காதல் கொள்ளும் மடையனே! பிறர் பெண்களைத் தன் சகோதரிகள் என்று பார்க்காத மூடனே! ஒரு பெண் உன்மேல் காதல் கொண்டாள் என்பதை நன்றாக அறிந்த பிறகல்லவா நீ காதற் உறவாட வேண்டும். ஊர்சுற்றி நாயே! எங்கெங்கேயோ உதைப்பட்டும் உன்போன்ற சகாக்களுக்கு ஈனமான மில்லையா!' என்று கண்டபடி திட்டிவிட்டு வீட்டிற்குப் போய்விட்டாள். அப்படியே அவளை பார்த்துக்கொண்டே யிருந்தான் உமாபதி; 'ஆகா! என்ன அழகு! ஒரு நாளாவது—இல்லை ஒரு க்ஷணமாவது உன்னை அடையா விட்டால் நான் ஒரு ஆணா!.......என்னை அவமானப் படுத்தியா பேசுகிறாய்; உன்னை அவமானப் படுத்துகிறேன் பாரடி' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு வீட்டிற்கு போய்விட்டான்.

தேவகி ஒரு கௌரவமான குடும்பத்தில் பிறந்தவள். நல்ல அறிவாளி. அவளிடத்தில் ஒருவித கெட்ட நடத்தையும் இல்லை. பெண்களுக்கு வேண்டிய நற்குணங்களை உடையவள். மேலும், நல்ல படிப்பாளி.

உமாபதி அவ்வூரிலுள்ள ஊர்சுற்றிக் கூட்டத்தில் சேர்ந்தவன். காமப் பேயன். அவனுக்குப் பெண் வேட்டையே பெரும் வேட்டை.

மருநாட் காலை உமாபதி தன் சகாக்களிடம் போனான். ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே பேச ஆரம்பித்தான். 'டேய்! நேத்து ஒரு அதிசயம் கண்டேண்டா' என்று சொல்லிப் பலமாகச் சிரித்தான்.

மற்றொருவன்:—'என்னடா! அப்பேர்பட்ட நூதனம் கண்டு பூட்டே.'


# காங்க்ரீன் என்னும் இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக்கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும், டாக்டர் குருசாமி முதலியாருக்கும், கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும், ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறுமுறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலை, அரையாப்புக் கட்டி இவைகளையும், எத்தகைய ராஜ கட்டிகளையும், புரைப் புண்களையும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேர்த்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

சென்னை கந்தப்ப முதலித் தெருவு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலையில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி

தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய்விட்டன. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தியடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

---

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தேரிவிப்பது :—

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜகட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துகொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டன. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய்க் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார். கொஞ்சம் வலி குறைவாயிருந்தது. அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்தக் கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானால் பட்டணம் அனுப்பலாம், இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம், என் மகன் இந்த வியாதியால் இறந்து போனான் என்று சொன்னதைக் கேட்டபின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மருந்தைப் போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது. என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக்கொண்டு ஏழைகளுக்குக் கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு :—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் இரண்டு மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

எமது விலாசம்:

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

207664



என்னை மன்னித்துவிடு! இங்கு இருக்க எனக்கு இஷ்டமில்லை. அதோ என் தாய்....உலக மாதா!....அதோ என் பாரதத் தாய்! அம்மா சற்று பொறு இதோ வருகிறேன். சூதும் வாதும் நிறைந்த உலகத்தை—நயவஞ்சகர்களைவிட்டு இதோ வருகிறேன்! உன் அன்பான அணைப்பில்தான் எனக்கு—இந்த இளங் கட்டைக்கு ஆறுதல்' என்று சொல்லிப் பதறி அழுதாள். கடைசியாக உலகத்தைச்சுற்றி பார்த்தாள். அந்தோ! அவள் கண்கள் இந்த விஷம உலகத்தைப் பார்க்க மறுத்தன. தன் தலைவிதியை நொந்து அழுதாள். ஆற்றில் தண்ணீர் சுழன்று போவதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் விட்டாள். வானத்தில் மீன்கள் பிரகாசித்துப், தேவகியைப் பார்த்து ஏளனம் செய்தன. அவைகளை அவள் புன்னகைப் பூத்த முகத்துடன் பார்த்துவிட்டு, இரு கைகூப்பி ஆண்டவன் அடிபணிந்தாள். 'வான மீன்களே! எனக்கு ஈன மான மில்லை என்று நினைக்கிறீர்களா!.... தேவி! என்னை உன் கரத்தால் தாங்கி உன் மார்பில் அணைத்துகொள்' என்று சொல்லி ஆற்றில் சாய்ந்தாள். அந்தோ! பாவம்! எந்த சுழலில் அகப்பட்டனளோ!...........

'இப்பொழுது அவள் ஊரில் என்ன பேச்சு தெரியுமா! சொல்ல வேண்டுமா?

'அவள் யாரையோ அடித்துக்கொண்டு போய்விட்டாள்' என்ற வதந்தியே!

அந்த உத்தமியின் பிணம் எங்கு ஒதுங்கி கிடக்கிறதோ! அதனைப் பார்த்து, உள்ளொன்று வைத்து வெளியொன்று காட்டி, கைஆட்டி தாடையில் வைத்துக்கொண்டு 'ஐயோ! பாவம், யார் பெத்த செல்வமோ? என்று சொல்லும் புண்ணியாத்மாக்கள் எவ்வளவு பேர்!

வாசகர்களே! நீங்கள் அப்பிணத்தை கண்டீர்களா? கண்டால் 'ஐயோ பாவம்' என்றுதானே சொல்லுவீர்கள்?

---

வாத்தியார்:—ராமா சிங்கத்திற்குப் பிடரி மயிர் அடர்த்தியாய் வளரக் காரண மென்ன ?

ராமன் :—(மறதியாய்) அதற்குத் தைரியமுள்ள நாவிதன் இல்லாததே காரணம் ஸார்! —கோவிந்தன் நாயர், டெய்லர் ஈரோடு.

முன்சீப்:—ஏண்டா! நீ அந்தக் கடியாரத்தைத் திருடினாய்?

திருடன்:—எனக்குத் தெரியாது ஸார்!

முன்சீப்:—என்ன தெரியாது?

திருடன்:—அது பித்தளை யென்று தெரியாது. பொன் கில்டு போட்டிருந்தது.

—S. செல்லப்பா.

உலகத்தில்—அனியாய உலகத்தில்—மோச உலகத்தில்—படுகுழி நிறைந்த உலகத்தில் இருக்க முடியுமா! வாழ்க்கையை வெறுத்தாள். தன் தலைவிதியை நொந்து அழுதாள். இரவு சுமார் 12 மணிக்குத் தன் படுக்கையை விட்டெழுந்து, அக்காரிருளில் தன் ஊரைத் தாண்டி நடந்தாள். வழி தெரியவில்லை. பயம் ஒரு புறம். அந்தோ பாவம். தட்டுத் தடுமாறி நடந்து பாலாற்றின் சமீபம் வந்தாள். அன்று பகல் முழுவதும் பெய்த அடாத மழையினால் பாலாற்றில் வெள்ளம் பெருவாரியாக இருகரையும் புரண்டோடியது. தண்ணீர் இரைந்துகொண்டே அதிவேகமாகச் சென்றுகொண் டிருந்தது. அதனைக்கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள். ஆற்றை அடைந்து பாலத்தின்மேல் ஏறி நின்றாள். துக்கம் தொண்டையை அடைத்தது. பற்பல எண்ணங்கள் அவள் மனதில் ஊடுருவிச் சென்றன.

ஏ மதியற்ற உலகமே! உன் லீலா விநோதங்களைக் கண்டேன்! இங்கு நியாயத்திற்கும் உண்மைக்கும் காலமேது! ஆம். அநியாயத்திற்கும், பொய்க்குமே காலம். நடவாததை நடந்ததென்று சொல்லும் நாசக்காரர்களே எந்த இடத்திலும்—எந்தத் திக்கிலும் நிறைந்திருக்கின்றனர். அப்படியே என்மேல் வீண் பழி சுமத்தினீர்கள். இந்தப் பழிக்காரர்கள் நடுவில் நான் அல்லல்பட முடியுமா? உலகம்—ஆம் உலகம் ஒரு படுகுழிதான்—அதிலும் கரைகாணாத படுகுழி! என் போன்ற மாசற்ற பிராணிகளை உயிரோடு அதில் தள்ளி ஒவ்வொருவரும் ஒரு பிடி மண்—இல்லை. ஒரு கூடை மண்போட்டு மூடி நன்றாக இடித்துவிட்டால் அப்புறம் வெளியே வரமுடியுமா? நான் கண்டதிலிருந்து இந்த மோச உலகம் ஒரு படுகுழி என்று துணிந்து சொல்வேன். சத்தியம். ஏ பாரததேவியே! ஏன் இந்தக் கொலை பாதகர்களை ஈன்றனை? இந்தப் புண்ணிய இந்தியாவில் என் போன்ற உத்தமர்களுக்கு இடமேது—ஒரு அடியேது? அந்த சூதும் வாதும் நிறைந்தவர்களுக்கே—படுகுழிகாரர்களுக்கே இந்தக் புண்ணிய பூமி! ஐயோ! வெட்கம்! மனிதனாய்ப் பிறந்து ஏன் எதையும் ஆராயக்கூடாது. நான் விபசாரி என்று அவர்கள் ஆறுவது அறிவில் பட்டதோ! ஏன் நடந்ததை நினைத்து கதிர வேண்டும். ஏ பிரமதேவா! உனக்கு ஒரு வேண்டுகோள். இனியாகிலும் அக்கிரமக்காரர்களைப் படைக்காதே! நல்ல அறிவாளிகளைப் படைத்து உலகம் சிறப்பிக்கச் செய். எல்லாவற்றிற்கும் இடம் கொடுக்கும் இந்த உலகத்தை 'படுகுழி' என்ற ஒரே பதத்தில் கூறலாம். இது பொல்லா படுகுழி! எங்கும் அக்ரமங்கள் தலை விரித்தாடுகின்றன. உம். நான் இப்பொழுது கண்ட காட்சியே என் வாழ்நாளுக்குப் போதுமென்று ஒரு முற்றுப் புள்ளி வைத்தேன். இனி மானங்கெட்ட வாழ்க்கை நடத்துவதைக் காட்டிலும் உயிர் நீத்தல்தான் உத்தமம். கடவுளே! நான் செய்யப்போகும் காரியத்திற்குக் கோபிக்காமல்

# காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)



சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், தொடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவு பகலாக மானாபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையை வைத்து நமை நீங்க சொரிந்து கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்கு கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்து கொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக் கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

எவ்வித படைகளையும் நொடியில் போக்கும் தன்மை வாய்ந்தது. உபயோகிக்கும்போது எரிச்சல் உண்டாகாது. வேஷ்டியில் கறை பிடிக்காது. எத்தனை வருஷமாக இருக்கப்பட்ட இரணமானாலும் போக்கக் கூடியது.

இதனை உபயோகித்தவர்கள் உங்களுக்கு இதன் பெருமையைச் சொல்லுவார்கள்.

வேண்டுவோர் 6 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

## நற்சாட்சி பத்திரம்

வைத்திய ஆசிரியர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என் குடும்பத்தில் ஒருவருக்கு சரீரம் முழுதும் 'எச்சிற்றழும்பு'போல் ஒருவித படை உண்டாகி இருந்தது. அதற்கு வேண்டிய வைத்தியங்கள் செய்தோம். ஒன்றும் குணப்பட்டு வரவில்லை. இறுதியில் அவர் கஷ்டம் தாங்க முடியாது பாயும் படுக்கையுமானார்.

இப்படி யிருக்கையில் சென்னை சென்று வந்த என் நண்பரொருவர் தன்னிடம் தங்களால் தயாரிக்கப்பட்ட 'காஸ்டோலின்' என்ற படை மருந்து இருக்கிறதென்றும், ஒரு சமயம் இந்த மருந்தினால் மேற் கூறப்பட்டவரின் படை வியாதி நீங்கினாலும் நீங்கக் கூடும் என்றும் கூறி என்னிடம் மேற்படி மருந்தைக் கொடுத்தார்.

அதைப் பாயும் படுக்கையுமாகக் கிடந்த படை வியாதியினருக்கு நான் அதில் கூறிய முறைப்படி போட்டதில் மிகுந்த ஆச்சர்யமான குணத்தைக் கொடுத்தது. அவர் உங்களை வாழ்த்தாத நேரமில்லை. இப்போது அவருக்கு 3, 4, மாதங்களாக தேகத்தில் ஒருவித வியாதியும் இல்லாமல் இருந்து வருகிறது. நமது இந்தியர்கள் தங்களின் 'காஸ்டோலின்' மருந்தை வாங்கி உபயோகிப்பார்களானால் எவ்வளவோ நன்மை யடைவார்கள். வேறு மருந்துகளுக்குப் பணத்தை வீணில் கொடுத்து தேகத்தையும் அனியாயமாகக் கெடுத்துக் கொள்வதினின்றும் காக்கப்படுவார்கள். தங்களின் 'காஸ்டோலின்' ஒரு சிறந்த ஔடதம் என்பதை மனமுழு உண்மையுடன் கூறுகிறேன். தங்களின் வைத்தியம் சிறப்பதாக !

அன்புள்ள,

G. M. அலிஹுஸைன் M. H. A.,

கௌரவ காரியதரிசி, 'ஹுஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிஸ்ட் நாகூர் 26–12–34.

---

ம-ா-ா-ஸ்ரீ டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

ஹெட்மாஸ்டர் D. S. ரங்கா ராவ் வணக்கமாய் எழுதிக் கொண்டது. இப்பவும் நான் இரண்டு வருஷகாலமாகத் தங்கள் மருந்து (காஸ்டோலின்) வரவழைத்து என் சிநேகிதர்கள் படை சௌக்கியமா யிருப்பதைக் காண எனக்கு கணக்கில்லாத ஆனந்தம் ஏற்பட்டிருக்கிறதை இக்கடித மூலம் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் அநுபோகத்தில் இம்மருந்தை மிகவும் சிலாக்யமாய்க் கருதுகிறேன். எனக்குப் படை ஏற்பட்ட இடத்தின் அடையாளமே இல்லாமல் வேறு தோல் வளர்ந்தது. ஆகையால் தாங்கள் தயவு செய்து இந்த லெட்டர் கண்டவுடன் இதில் அனுப்பிய 7 அணா ஸ்டாம்பைப் பெற்றுக்கொண்டு உடனே இன்னுமொரு காஸ்டோலின் மருந்து பாட்டிலை அடியில் கண்ட விலாசத்திற்கு அனுப்பக் கோருகிறேன்.

இப்படிக்கு,

D. S. ரங்கா ராவ், ஹெட்மாஸ்டர்.

பசுபதிபாளையம், எலிமெண்டரி ஸ்கூல்,

மேலபாளையம் போஸ்டு, வையா கரூர்

# சிவப்பிரகாச பற்பொடி

உலகில் அநேகவித பற்பொடிகள் கிளம்பி உலவி வருவதை உணர்ந்திருப்பீர்கள். நமது சிவப்பிரகாச பற்பொடி பல வருஷங்களாகப் பலரால் உபயோகிக்கப்பட்டும், அநேக காட்சி சாலைகளில், பொன், வெள்ளி முதலான பரிசுகள் பெற்றும் விளங்கி வருவதை அறிவீர்களாகவும். நகரத்தார்கள் சிவப்பிரகாச பற்பொடியைத் தவிர வேறு பல்பொடியை உபயோகிப்பது கிடையாது.

தற்சமயம் பல போலிப் பற்பொடிகளைத் தயார்செய்து நாட்டு டின்களில் போட்டு சிவப்பிரகாச பற்பொடி என்று போலி விளம்பரம் செய்து விற்கப்படுகின்றது. உண்மையாக எங்களால் தயாரிக்கப்பட்ட பற்பொடியின் டப்பி அழகிய பொம்மை அமைந்த சொர்ணவர்ணமுள்ள ஜப்பான் டப்பியில் வரும் சிவப்பிரகாச பற்பொடியை பார்த்து வாங்குங்கள்.

சிவப்பிரகாச பற்பொடி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தும் சிலர் எங்களிடம் கமிஷனுக்கு வாங்கி விற்றவர்கள் சில மாதமாகக் கண்டதை டப்பியில் நிரப்பி எங்கள் பெயரால் விற்று வருவதை உலகமுணர தெரிவிக்கின்றோம்.

## நன்மதிப்புகள்

ஐயா, இக்கடிதம் கண்டவுடன் சுணங்காமல் 100 டஜன் பற்பொடி கள்ளிப் பெட்டியில் வைத்து அனுப்பவும்; இவ்விடம் பற்பொடி அனேகர் வற்புறுத்துவதால் விரைவில் அனுப்பினால் நலம்.

வேலாயுதம் செட்டியார்,

தனுபியு.

---

திருவாளர் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தங்களுடைய பற்பொடியைத் தவிர வேறு பிடிக்கவில்லை. பல்லில் இரத்தம் வருதல் நின்றுவிட்டது. வாய்க்கு ஆரோக்யமாய் இருக்கின்றது. பல் வெள்ளையாய் துலங்குகின்றது. நான் தென்னிந்திய ரயில்வேயுக்கு எங்கள் சாமானுடன் இதையும் சப்ளைசெய்ய யோசனை. 10,000 டின் மாதா மாதம் அனுப்ப யோசிக்கிறேன்.

இப்படிக்கு,

V. ஆள்வார் செட்டியார் Hoe, & Co.,

இன்னும் இத்தகைய கணக்கற்ற கடிதங்கள் குவிந்து கிடக்கின்றன.

12 டசன் கொண்ட குரோஸ் விலை 13—0—0.

டின் 1-க்கு விலை அணா 0—2—0.

# சிவப்பிரகாச கோரோஜனை மாத்திரை

இம் மாத்திரையைக் குழந்தைகளுக்கு முலைப்பாலில் காலை மாலைகளில் கொடுத்துவர மந்தம் நீங்கி, மலம் போக்கி, சுரம், சளுப்பு முதலானவைகளை நிவர்த்தி செய்யும். மாந்த சுரம் அல்லது (நிமோனியா) சுரம் கண்ட குழந்தைகளுக்கு ஆடா தோடா, முசுமுசுக்கை, நிலத்துளசி, கஞ்சாங்கோரை, கரிசலாங்கண்ணி, பொடுதலை, நொணாயிலை, நொச்சிலை, ஈயக்கொடி ஆகிய இவைகளில் வகைக்கு 2 பை வகை எடுத்துக்கொண்டு, புட்டிட்டு ரசம் பிழிந்து ரசம் ஒரு பாலாடை, கோரோசனை மாத்திரை ஒன்று சேர்த்துக் காலையில் கொடுத்துவிட்டு மாலையில் பச்சிலைகளின் திப்பியை சட்டியிலிட்டு வறுத்து சாம்பலாக்கிச் சிறிது ஜலம் விட்டு காய்ச்சி ஒரு பாலாடைக் கஷாயத்தில் ஒரு மாத்திரை இழைத்துக் கொடுக்க, இரண்டு நாளில் கபவாத சுரம் என்னும் கொடிய மாந்த சுரம் நீங்கும்.

குழந்தைகளுக்கு மலம் போவதற்காகத் தாராளமாய்ப் பிறந்த நாள் முதல் உபயோகிக்கலாம்.

பெரியோர்கள் சளுப்புள்ள காலத்தில் வெற்றிலையுடன் உட்கொள்ள சளுப்பு நீங்கும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1.

# கர்ணபிந்து

சகலவிதமான காது நோய்களுக்கும் இலேசாக அனல் காட்டி காதில் 3 துளி விட்டு, பஞ்சு வைக்கவும். மருந்து உபயோகிக்கும் போது, காதில் சீழ்வடிந்தால் சுத்தம் செய்தபிறகு உபயோகிக்கவும்.

தீரும் வியாதிகள்:—காது குத்தல், சீழ்வடிதல், ஆறாத இரணங்களுக்கு முக்கியமானது.

புட்டி 1-க்கு விலை அணா 8.

# தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5 நிமிஷத்தில் தலைவலி நீங்கும்; தவிர உடம்புவலி, கைகால்வலி, இவை போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம் மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பயமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை.

புட்டி 1-க்கு விலை அணா 8.




ஜனங்கள் இப்படி கதை கட்டுவதில் கைதேர்ந்தவர்கள் என்று கவிச்சிங்கம் பாரதியார்கூட அபிப்பிராயப்பட்டிருக்கிறார். அடேயப்பா! ஒவ்வொருவரும் தங்கள் கட்டு கதைக்கு கை—கால்—உடல்—தலை முதலியன உண்டாக்கி, போதாத குறைக்கு அதனை அழகு படுத்த ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து ஊர் முழுவதும் பறக்கவிட்டார்கள். இச்செய்தி காட்டுத் தீபோல் பரவியது. எல்லோரும் அதை நம்பலானார்கள். அந்தக் கட்டில் அடுப்பூதிக் கிடக்கும் பெண்கள்கூடத் தேவகியின் கதையைக் கேட்டார்கள் என்றால் ஊர் எவ்வளவு அமர்க்களமா யிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. எங்கும் தேவகியின் பேச்சே தலைவிரித்தாடிற்று. மெல்ல இரண்டு மூன்று நாட்களும் கழிந்தன. இன்னும் நூதனமான கதைகள் புதிது புதிப்பாக வெளிக் கிளம்பின. பாவம் யாதும் அறியாத தேவகியின்மேல் இப்படி தூற்றுகிறார்களே! இவள் இந்த உலகத்தின் மர்மத்தை இன்னும் அறியாள் போலும்! ஒருநாள் தன் வீட்டைவிட்டு வெளி கிளம்பினாள். தெருவில் சென்றாளோ இல்லையோ, அவளைச் சுட்டிக்காட்டி ஆண்களும் பெண்களும் பற்பல வாறு பேசிக் கொள்வதையும் காணாமலும் கேட்காமலுமில்லை. அப்புறம் கொஞ்சம் நடந்தாள். பின்னால் இவள் பெயரைச் சொல்லி கைகொட்டி நகைத்தனர். போதாத குறைக்கு, சிறுவர்கள்கூட இவளைத் 'தாசி, வேசி' என்று நகைத்தனர். இக் கண்ணராவியைப் பார்த்தால் அவளுக்கு எப்படி இருக்கும். அவளின் ஒடிந்த—இளம் இதயத்தைப் பலமாகத் தாக்கின. ஆத்திரம் ஒரு புறம்-வெட்கம் ஒரு புறம் பாதிக்க வீட்டிற்குத் திரும்பினாள். 'என்னடி சிறுக்கி! அதுக்குல்லே பையன பாக்க பூட்டியா! இப்படி அவமானப்பட்டுமா உனக்கு வெட்கம் வரவில்லே....ரெண்டு கோணை எழுத்து கத்துகின்னு இப்படி கூத்தாடுறே!' என்று அவள் தாயார் இடைவிடாது கத்தினாள். இதனைக் கேட்டதும் தேவகி இடிந்து போனாள். 'அம்மா! நீங்களுமா என்னை வதைக்கின்றீர்கள். 'பெற்றவளுக்கே தெரியும் பிள்ளையின் அருமை' என்பதை மறந்து விட்டீர்களா! நான் யாதும் அறியேன் அம்மா! என்று கதறி அழுதாள். 'ஆமாண்டி நெருப்பில்லாதவா புகை கிளம்பும்' என்று அவள் தாயார் சொல்லிக் கொண்டே போய்விட்டாள். அவளின் தந்தை அவளைக் கொடூரமாகப் பார்த்தார். ஆம், அவமானந்தானே!

'ஆம், இந்த உலகத்தின் மாய விநோதங்களைக் கண்டேன். இப்பொழுதுதான் உணர்ந்தேன்' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு போய்விட்டாள் தேவகி. அவளின் மனம் ஒரு வழியாய் இல்லை. பற்பல பாதைக்குள் அவளை இழுத்துச் சென்றன. நாட்களும் கழிந்தது. ஆனால், அந்த 'தீ' அணையாமல் இன்னும் அதிகமாகச் சுடரொளி விட்டுக்கொண்டே எறிந்தன. இனி தேவகிக்கு இந்த

உமாபதி:—'என்னுத்தடா சொல்ரது. அதே நெனேச்சாலும் சிரிப்பாகிது.

அதில் ஒருவன்:—'சொல்லித்தான் தொலையண்டா!

உமாபதி:—'வெட்கம்—வெட்கம், வெளியே சொன்னு வெட்கம்—அழுதா துக்கம். அப்பா நானயிருந்தா கட்டாயம் தூக்குப் போட்டுக்குவேண்டா!

இன்னொருவன்:—'என்னடா பிரமாதமாக கதஅடிக்கிற சொல்லேன்டா!

உமாபதி:—அந்த வெட்க கேடான செய்தியைச் சொல்ல நாக்கு வரலே! அந்த வேதரத்தனம் பெண்ணு—அவத்தான் தேவகி! நேத்து நானு கடலோரம் போனேன். அப்போது அவள் நாலைந்து மைனர்கூட விளையாடினு யிருந்தா! அவன்கள் செய்யாத அட்டகாசங்கள் எல்லாம் செய்தானுவ. அவ சிரிச்சினே அதுக்கு உடன் பட்டு இருந்து கடைசியில் அவன்களை அவளே முத்தமிட்டா. அவனுவ கொடுத்ததெல்லாம் வாங்கிக்கினு!....கீச்சி இப்படியடா செய்வது. வெட்கமாயில்லே! மானங்கெட்டிட உயிர் வாழாது. என்ன அட்டகாசம். அப்பா சொல்ல முடியாது'

ஒருவன்:—'இது என்ன கட்டு கதையடா!' அவ நல்ல பெண்ணுச்சே!

உமாபதி:—'இதுக்குதான் உங்ககிட்டே சொல்றதில்லே!'

மற்ருெ:—'ஆம் இருக்குண்டா!'.

இன்னெ:—ஆள பாத்தா ஜோரா யிருக்காடா. கட்டாயம் செய்திருப்பாடா' என்று பற்பலவாறு பேசிவிட்டு பிரிந்தனர்.

அதில் ஒருவன் அடுத்த தெருவிற்குப்போய்ச் சில வாலிபர்களைக் கூட்டிக்கொண்டு பெருத்த பிரசங்கம் செய்தான். நான் இன்னைக்கி எங்க தோட்டத்துக்குப் போனேன். அப்போது தேவகி இருக்காளே அவளும்—நம்ப ஊர் வக்கில் மவளும் 'குசு, குசு'ன்னு ஒரு புதாரில் பேசிக்கொண் டிருந்தாங்கா. என்னைப் பார்த்ததும் பிச்சிக்கிணுங்க. இப்போ அங்கிருந்துதான் வரேன்' என்று உண்மையாகக் கண்டவனைப்போல் ஒரே அடியாக அடித்தான். ஏன் இது உலக சுபாவந்தானே!

நேயர்களே! இதற்குள் எப்படி வார்த்தை மாறிவிட்டதென்று அறிந்து கொள்ளுங்கள். உமாபதி 'நேற்று' என்று கதை சொன்னுன்; இவனே இன்றைக்கு என்று மாற்றிவிட்டான்! இப்படியாக ஒவ்வொருவரும் தங்கள் மூளைக்கெட்டியபடி புதிய புதிய கட்டு கதையை 'தேவகி தாசி' என்ற தலைப்பின்கீழ் அவிழ்த்துவிட்டார்கள்.


# கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேகியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கிய குணம். எலும்புருக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

## சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய பேத்திக்குக் கொடுத்த கூழ்ப்பாண்ட லேகியம் 6 மாதமாய்க் கொடுத்து வந்ததில் தேகம் மேனியும் சதையும் பிடித்திருக்கின்றது. இனி மீன் எண்ணெயை உபயோகிக்கவே மாட்டோம். இன்னும் 10 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் அனுப்பவும். என்னுடைய குமாரன் வக்கீலுக்குப் படிப்பதால் அவனுக்கும் இதைக் கொடுத்து வருகிறேன். இதனால் சரீரத்தில் உஷ்ணம் ஏற்படாமலும், மலச்சிக்கலில்லாமலும், சாப்பிட வாய்க்கு ருசியாயும் இருப்பதால் அதிகமாய்ச் சாப்பிட்டு வருகிருன்.

எங்கள் குடும்பத்திற்காகக் கூழ்ப்பாண்ட லேகியத்தை ஒரு ஜாடி செய்து கொடுத்தால் நலமாய் இருக்கும்.

என்னுடைய ஜுனியர் மாயவரம் பார்த்தசாரதி ஐயங்காரும், இந்த லேகியத்தை அடிக்கடி கேட்டுக்கொண் டிருக்கிறபடியால் அவருக்காகக் கொஞ்சம் தயார் செய்யவும். இந்தக் காலத்துப் பையன்களுக்கு இது மிகவும் அவசியமானது.

R. சடகோபாச்சாரியார், B. A. B. L. ஐகோர்ட் வக்கீல்.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கு ஜில்லா முனிசீப்பாக இருக்கிறேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேகியத்தினுல்தான் என் குழந்தைபெருத்து நன்ருக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A. B. L.

District Munsiff, Tanuku.

ஒரு பவுன் புட்டி விலை ரு. 2.

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !!

ஏது? ஏது?

# பாரதிதாஸன் கவிதைகள்

200 பக்கங்கள் ! மிக அழகான பதிப்பு !

விலை அணா எட்டு.

10 அணா மணியார்டர் அனுப்பினால்
ஒரு புத்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

ரூ. 5—0—0 மணியார்டர் அனுப்பினால், தபால் செலவின்றி
10 புத்தகங்கள் அனுப்பப்படும். வி. பி. கிடையாது.

வெளிநாட்டு அன்பர்கள் புத்தக விலையுடன் தபால் செலவும்
சேர்த்து மணியார்டர் அனுப்ப வேண்டும்.

---

வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப் புலவர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது.

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல கிளேஸ் காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப்புத்தகத்தின் விலை எட்டணா தான். தபால் செலவு அணா 2. 10 அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

கிடைக்குமிடம் :

‘தமிழரசு’ புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.